AstroVed

அக்டோபர், 2022

# சத்வித்யா

மாலை: 3 மலர்: 36

பிரின்ஸ் இன்ஃபோ பார்க், பிளாட் எண்.81-பி, ஏ-பிளாக், 4வது தளம்,
2வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



தீபாவளிப் பண்டிகையோடு தொடர்புடைய கோயில்

கணவர்களைக் காக்கும் அன்னை சரளா தேவி!

## பெண்ணை முன்னிலைப்படுத்திய பெருமாள்!

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



வசதி படைத்தவர்கள் தனியார் பள்ளிகளில் உயரிய கல்வியையும் வறுமையில் உழல்வோர் அரசு பள்ளிகளில் சாதாரண கல்வியையும் பயில்வதாய் சொல்கிறார்கள்.

ஆனால், எந்த பள்ளியில் எத்தகைய கல்வியைப்பெற்றாலும் அது நம் பேரறிவை வளர்ப்பதாய் இருத்தல் வேண்டும். இந்த பேரறிவை புகட்டுகின்ற "திருமந்திரம்" போன்ற நூலினை கற்றுக் கொடுக்க வேண்டும். திருமந்திரம் என்பது பேரறிவின் திறவுகோல் என்றாகுமே தவிர, அது ஒரு சமயம் சார்ந்த நூல் என ஒதுக்கி விடக் கூடாது! எச்சமயம் சார்ந்தோருக்கும் பேரறிவைத் தருகின்ற அரிய கருத்துக்கள் அடங்கிய
திருமந்திரப் பாடல்கள் அனைத்து கல்விச்சாலைகளிலும் எந்தவித பாரபட்சமுமின்றி கற்றுத்தந்தாலே பேரறிவு வளரும்.

Dr. Baskaran Pillai

# நன்மைகள் பிறந்த நாள்



அன்பு சத்வித்யா வாசகர்களே! கோடைக்காலம் முற்றிலும் மறைந்து, குளிர் அண்டும் காலம் தொடங்கிவிட்டது! விநாயகர் சதுர்த்தி என்னும் பிள்ளையார் சுழி போடப்பட்டு பண்டிகைகள் ஒவ்வொன்றாய் அணிவகுத்து வர ஆரம்பித்து விட்டன. நவராத்திரி, ஆயுத பூஜை, விஜயதசமி என ஒவ்வொரு வாரமும் ஆரவாரமாய் கழியப் போகிறது.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல, தீபாவளித் திருநாள் கொண்டாடப்படவிருக்கிறது. தீபாவளி என்பதை தீபங்களின் வரிசை என்பார்கள். ஒருவேளை... திருநாள் அனைத்தும் வரிசைகட்டி வந்துதான் தீபவரிசை ஆனதோ?! இதைத்தான் தீபாவளி என்று அழைக்கிறோமோ என எண்ணத் தோன்றுகிறது!

பகவான் மகாவிஷ்ணு தீயவனையும் அவனால் அரங்கேற்றப்பட்ட தீமைகளையும் வேரோடு களைந்து இப்பூவுலகில் இன்பங்களை விதைத்த நாளைத்தானே தீபாவளி என கொண்டாடுகிறோம். அசுரன் என்பவன் யார்? நம் மனதில் நமக்கே தெரியாமல் குடியிருக்கும் எதிர்மறை எண்ணங்களும் தீய சிந்தனைகளுமே அசுரன் எனக்கொள்வோம்!

அந்த அசுரனை அகற்றுவோம்; அழிப்போம்! இந்த இனிய நாளை இன்பம் பிறந்த நாள் என கொண்டாடி மகிழ்வோம்!

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

அன்பு சத்வித்யா வாசகர்களே! இதுவரை இணையதளத்தில் வெளியாகி, எல்லையில்லா ஆன்மீக செய்திகளை அள்ளித் தந்து கொண்டிருக்கும் நமது சத்வித்யா இணையதள மாத இதழ், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் புத்தக வடிவில் உங்கள் கரங்களில் தவழவிருக்கிறது என்பதனை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் ஆதரவை வேண்டும், Astroved.com மாத இதழ்

அன்புடன்
Astroved.com



# அக்டோபர் மாத காலண்டர் – 2022

## OCTOBER அக்டோபர் 2022

ஸ்ரீசுபகிருது
புரட்டாசி - ஐப்பசி

| SUN ஞாயிறு | MON திங்கள் | TUE செவ்வாய் | WED புதன் | THU வியாழன் | FRI வெள்ளி | SAT சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 ஷஷ்டி விரதம், சுபமுகூர்த்தம், ஆரசஷ்ஷுமாம் விழா, தேவர் ஜெயந்தி, 13 ஷஷ்டி | 31, 14 சப்தமி | கரிநாள் அன்று சுபகாரியம் தவிர்க்கவும்<br>3, 16, 23 கரிநாள் | விரத நாட்கள்<br>26 சந்திர தரிசனம்<br>3, 16, 23 கரிநாள்<br>6, 21 ஏகாதசி<br>25 அமாவாசை<br>9 பௌர்ணமி<br>28 சதுர்த்தி<br>1, 30 ஷஷ்டி | விரத நாட்கள்<br>13 சங்கடஹர சதுர்த்தி<br>5 திருவோணம்<br>7, 22 பிரதோஷம்<br>13 கார்த்திகை<br>3, 17 அஷ்டமி<br>4, 18 நவமி<br>23 மாத சிவராத்திரி | சுபமுகூர்த்தம்<br>வளர்பிறை<br>28, 30<br>தேய்பிறை<br>24 | 1 ஷஷ்டி விரதம், புரட்டாசி 14 ஷஷ்டி |
| 2 காந்தி ஜெயந்தி, 15 சப்தமி | 3 அஷ்டமி, கரிநாள், 16 அஷ்டமி | 4 ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை, நவமி, 17 திதித்துவயம் | 5 விஜய தசமி, திருவோண விரதம், வள்ளலார் தோற்றம், 18 ஏகாதசி | 6 சர்வ ஏகாதசி, 19 துவாதசி | 7 பிரதோஷம், 20 திரயோதசி | 8, 21 சதுர்த்தசி |
| 9 பௌர்ணமி, மிலாடி நபி, 22 பௌர்ணமி | 10, 23 பிரதமை | 11, 24 துவிதியை | 12, 25 திரிதியை | 13 கார்த்திகை விரதம், சங்கடஹர சதுர்த்தி, 26 சதுர்த்தி | 14, 27 பஞ்சமி | 15, 28 ஷஷ்டி |
| 16 கரிநாள், 29 சப்தமி | 17 அஷ்டமி, 30 அஷ்டமி | 18 நவமி, ஐப்பசி 1 நவமி | 19, 2 தசமி | 20, 3 தசமி | 21 சர்வ ஏகாதசி, 4 ஏகாதசி | 22 சனிப் பிரதோஷம், 5 துவாதசி |
| 23 மாத சிவராத்திரி, கரிநாள், 6 திரயோதசி | 24 தீபாவளி, சுபமுகூர்த்தம், 7 சதுர்த்தசி | 25 சர்வ அமாவாசை, கந்த ஷஷ்டி விழா துவக்கம், 8 அமாவாசை | 26 சந்திர தரிசனம், 9 பிரதமை | 27, 10 திதித்துவயம் | 28 சதுர்த்தி விரதம், சுபமுகூர்த்தம், 11 சதுர்த்தி | 29, 12 பஞ்சமி |



# திருமால் பெருமை!

பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற முப்பெரும் தேவர்கள் தான் இப்பூவுலகில், சிருஷ்டி, காத்தல், அழித்தல் என்ற முக்கிய தொழில்களுக்கு காரண கர்த்தாக்கள் என்று மக்களால் பூஜிக்கப்பட்டு வருகிறார்கள்.

ஒருகாலத்தில் அசுரன் கம்சன் தேவருலகு மற்றும் பூவுலகவாசிகளுக்கு அனேக தொல்லைகள் தந்து அனைவருக்கும் 'சிம்ம சொப்பனமாக" இருந்து வந்தான். வானுலகத் தேவர்களையும், மகரிஷிகளையும், பூலோகத்தினரையும் காக்கும் பொருட்டே மகா விஷ்ணு எனும் திருமால் கிருஷ்ணாவதாரம் எடுத்து, கம்சாசுரனை உரிய நேரத்தில் அழித்தார். அதுவே தீபாவளித் திருநாளாக நம்மால் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த பெருமை மிக்க திருமாலைக் குறித்து அநேக விசயங்கள் உள்ளன. ஒரு சிலவற்றை இப்போது அறியலாம்.

ஆதிகாலத்தில் திருமால் வெண்மை நிறத்துடனேயே விளங்கியுள்ளார். தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுக்க முயற்சிக்கையில், கடலில் புறப்பட்ட ஆலகால விஷம், தன்னை அடக்க வந்த மகாவிஷ்ணு மீது பாய்ந்து விடவே, அவர் நீலநிறமாகி விட்டார். பிறகு சிவபூஜை செய்து சிவப்பான பவள நிறம் கொண்டவராக ஆனார் என்றும் கூறப்படுகிறது. ஆனால் பல புராணங்களில் திருமால் நீல நிறங்கொண்டு தோற்றமளிப்பார் என்றே உரைக்கப்பட்டுள்ளது.

திருமாலுக்குரியவை சங்கு, சுதர்சன சக்கரம், வில், கதாயுதம், வாள் என்ற ஐந்தாகும். இவை ஐம்படை எனப்படும் பஞ்சாயுதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் உருவங்களைச் சிறிய அளவில்

தங்கத்தால் செய்து பின்பு வரிசையாகக் கோர்த்து குழந்தைகளுக்கு அணிவிக்கும் வழக்கம் நம்மிடையே பலரிடம் உண்டு. இது கொண்ட பெயர் 'ஐம்படைத் தாலி' என்பது.

திருமாலின் ஆயுதங்களான சக்கரம் 'சுதர்சனம்' என்றும், சங்கு 'பாஞ்ச சான்யம்' என்றும், வில் 'சார்ங்கம்' என்றும், கதாயுதம் 'கௌமோதகி' என்றும், வாள் 'நந்தகம் என்றும் அழைக்கப்படுகின்றன. அவர் சூடிய மாலை வனமாலை என்பதால் 'வனமாலீ' என்றும் பெருமாள் கொண்டாடப்படுவார்.

பெருமாள் பூணும் மஞ்சள் பட்டாடை 'பீதாம்பரம்' என்ற பெயருடையது. எனவே 'பீதாம்பர தாரி' என்ற காரணப் பெயராலும் அவர் வணங்கப்படுகிறார்.

காமன், சாமன் என்ற இருவர் விஷ்ணுவின் மானசபுத்திரர்கள். இவர்கள் இருவரையும் தன் மடியில் அமர்த்திக் காட்சிதரும் மகாலட்சுமியின் திருநாமம் சந்தான லட்சுமியாகும்.

சிவ மைந்தனான முருகனுக்கு 'மால் மருகன்' என்ற நாம முண்டு. ஒரு சமயம் பெருமாளின் விழிநீர்த் துளிகளிலிருந்து அமுதவல்லி, சுந்தரவல்லி என்ற பெண்கள் தோன்றினர். அவர்களே தவம் புரிந்து வரம் பெற்று தெய்வயானை, வள்ளி என்ற அவதாரங்களை எடுத்து திருமுருகனை மணந்தனர். அதனால் 'மால் மருகன்' என்ற கூடுதல் பெயர் கந்தவேளுக்கு வந்தது. இதனையொட்டியேதான் முருகாலயங்களில் திருமாளுக்கு தனிச்சந்நிதிகள் அமைக்கும் வழக்கம் உண்டானது.

இதற்கு ஒரு உதாரணமாக அவர் திகழ்வது காஞ்சிபுரத்தில் உள்ள குமரக் கோட்டத்தில் உள்ளம் உருகும் பெருமாளாக அளிக்கும் திருக்காட்சி!

தென்னக ஆலயங்களில் மகாவிஷ்ணு சிவ பூஜை புரிந்த தலங்கள் அவர் திருநாமத்தால் விஷ்ணுபுரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பெருமாள் உருவாக்கிய தீர்த்தங்கள் கொண்ட பெயர் விஷ்ணு தீர்த்தமாகும்.

கருடனை தனது வாகனமாகக் கொண்ட திருமால், அவரையே கருடக் கொடியாகவும் ஆக்கியுள்ளார். ஓயாது காக்கும் நிலை படைத்த ஸ்திதி சக்கரத்தில் பெருமாள் வீற்றிருப்பார்!

திருமாலின் பெருமைகளுக்கு இணை ஏது?

**நந்தினி ஸ்ரீராம்**





கீதா மணி

# கணவர்களைக் காக்கும் அன்னை சரளா தேவி!

நம் நாடு இதர உலக நாடுகளைவிட, புண்ணிய பூமியாகத் திகழக் காரணம், நாடெங்கும் ஆயிரக்கணக்கான தெய்வ ஆலயங்கள் அமையப்பெற்று, பக்தர்களால் ஆராதிக்கப்பட்டு தினமும் புண்ணியங்களைக் குவித்து வருவதே!

இந்தத் திருக்கோயில்கள் எல்லாமுமே, நமக்கு ஏற்படும் கணக்கற்ற பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் சைவ, வைணவ, அம்மன், பெண் தெய்வங்களாக தனித்தனியாகவோ அல்லது ஒரே இடத்திலோ அமைந்து மக்கள் கொண்டாடும் தலமாக அமைந்துள்ளன.

அத்தகைய ஆலயங்களில் ஒன்றாகத் திகழ்கிறது வடக்கே ஒடிசா மாநிலத்தில் உள்ள புவனேஸ்வரம் சமீபத்தில் அமைந்த அன்னை சரளா தேவி திருக்கோயில்! ஒடிசாவின் அக்காலப் பெயர் கலிங்கமாகும்.

அருள்மிகு சரளா தேவி ஆலயம் உருவானதற்கு பின்னணியாக அமைந்த புராண சம்பவம் சுவை கூட்டும் ஒன்றாக உள்ளது.

திரேதாயுகம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலமது.

ஜங்கடா என்ற பகுதிக்கு ஒரு சமயம் விஜயம் செய்த மகரிஷி பரசுராமர், அந்த இடம் தியானம் புரிய உள்ள அத்தனை தகுதிகளையும் கொண்டுள்ளது என்பதை அறிந்து கொண்டு, ஒரு விருட்சத்தின் கீழ் அமர்ந்து கடும் தவம் மேற்கொண்டார்.

சில காலம் கடந்தது. ஒரு நாள் பரசுராமர் தான் கொண்ட ஞான திருஷ்டியால், அவர் உட்கார்ந்து தவமிருந்த இடத்திலிருந்து சற்று தொலைவில் உள்ள ஒரு பெரிய ஆலமரத்தின் பக்கத்தில் சக்தி தேவி மறைந்து இருப்பதாக அவருக்குப் புலப்பட்டது. உடனே அங்கு விரைந்து சென்றார் பரசுராமர்.

அடர்ந்த அந்தக் காட்டுப் பகுதியில் பரசுராமர் மெதுவாக நடந்து வருகையில் காட்சியான பல விருட்சங்களில், அவர் தியானத்தில் கண்ட ஒரு ஆலமரம் மட்டும் தனித்து பெரியதாக வளர்ந்திருப்பதைக் கண்டுபிடித்து விட்டார். அம்மரத்தைச் சுற்றி அவர் வருகையில் மகரிஷியின் கண்ணில் ஒரு இடம்

கொஞ்சமாக அவர் பூமியைத் தோண்டுகையில், அவரது கண்கள் பிரகாசமாயின!

தோண்டப்பட்ட பள்ளத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத் தோன்றிய ஒரு ஒளி, மிகப்பலமாகி, பரசுராமரின் கண்களை கூசவைத்து விட்டது. அந்த ஒளிக்கு காரணம், பள்ளத்தில் தெரிந்த ஒரு கல்தான்! தெய்வீக சக்தி கொண்ட அந்தக் கல்லின் மீது தான் வைத்திருந்த ‘சரம்’ என்ற அம்பு ஒன்றினால் அவர் தனக்கு மனதில் உதித்த ஒரு திரு உருவை வரைந்தார். பிறகு தினமும் அவ்வுருவை பூஜித்து வணங்குவதை தனது நித்திய கடமைகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டார் மகரிஷி. சரம் ஒன்றினால் உருவாக்கப்பட்ட அந்தப் பெண் ஓவியம் சாரதா என்றும் சரளா என்றும் அழைக்கும் தேவியின் திருநாமமானது.

படிப்படியாக அங்கேயே ஒரு சிறிய கோவிலை உருவாக்கிய பரசுராமர் அத்தேவியை ஒரு நன்னாளில் பிரதிஷ்டை செய்து விட்டார். அன்றிலிருந்து தினசரி பூஜைகள் நடைபெறவும் ஏற்பாடானது.

காலங்கள் உருண்டன. பல்லாண்டுகள் கழித்து நம் நாட்டின் மீது வேற்று மதத்தினர் நடத்திய இரு படையெடுப்புகளின் போதும். அன்னை சரளா தேவி ஆலயம் இரண்டு முறைகள் இடிக்கப்பட்டு சிதிலமாயின.

அதற்குப் பிறகு 16-ம் நூற்றாண்டில் சரளா தேவியின் சரித்திரம் அறிந்த பக்தர்கள் சாக்தம் மற்றும் வைணவ கலைகளின் அடிப்படையில் ஒரு அழகான கோயிலை உருவாக்கி, முறையான பூஜை வழிபாடுகளை ஏற்படுத்தினார்கள். அதிலிருந்து இன்று வரை அருள்மிகு சரளா தேவி குடிகொண்ட கோயில் சிறந்த வழிபாடு பெறுகிறது.

அம்பாள் சாரதா எனும் சரளா தேவியின் உலகப் புகழ் பெறும் பின்னணி சம்பவமாக இது கூறப்படுகிறது.

அயல் நாட்டினரால் இடிக்கப்படும் முன்பாக, கடந்த 15 ஆம் நூற்றாண்டில் திர்த்தோல் கிராமத்தில் வசித்து வந்த சித்தேஸ்வர பரிடா என்பவர் சரளா தேவியின் மீது கடுமையான பக்தி பூண்டு தினமும் தேவி வழிபாட்டை தவறாமல் செய்து வந்தார். ஒரியா மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட அவருக்கு அன்னையைப் போற்றி பாடல்கள் இயற்ற வேண்டுமென்ற தீராத அவாஇருந்தது. ஆனால் ஒரியா மொழியில் பாடல் இயற்றும் அளவுக்கு சித்தேஸ்வர பரிடாவுக்கு புலமை இல்லை.

பக்தன் பரிடாவின் ஏக்கம் அறிந்த அன்னை சரளா தேவி, ஒருநாள் அவருடைய கனவில் காட்சியருளி, அவருக்கு ஒரியா மொழியில் கவிதைகள், பாடல்கள் இயற்றும் சக்தியை அருளி விட்டாள்!

இந்த அரிய அருள் காரணமாக சித்தேஸ்வர பரிடா ஒரியா மொழியில் இன்று பக்தர்கள் போற்றும் மகாபாரதத்தையும், இராமாயணத்தையும், தேவி புகழ்பாடும் சண்டி புராணத்தையும், ‘சரளா தாஸ்’ (சரளா அடிமை) என்ற புனைப்பெயரில் படைத்து மக்களுக்கு அருளியுள்ளார்.

அருள்மிகு சரளா தேவி குடிகொண்ட ஆலயம் அமைந்த தீர்த்தோல் கிராமம், இன்றைய புவனேஸ்வரத்திலிருந்து அண்மையில் உள்ள பாராதீப் எனும் அழகான தீவுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இவ்வூருக்கு சரளா கிராமம், ஜங்காடா, ஜங்காரா என்ற வேறு சில பெயர்களும் உண்டு. இயற்கை அன்னையின் பரிபூரண அருள் இவ்வூருக்கு உள்ளது என்பது போல் பச்சை பசேல் என்று காட்சி தரும் அது!

சென்னை சென்ட்ரல் புகை வண்டி நிலையத்திலிருந்து, கட்டாக் சென்று, அங்கிருந்து நகரப் பேருந்துகள் மூலம் தீர்த்தோல் அம்பாள் ஆலயம் சென்று விடலாம்.

இனி ஆலய தரிசனம் செய்யலாம்

இங்கு தாந்த்ரீக வழிபாடு நடக்கும். அருள்மிகு சரளா தேவி திருக்கோயிலின் மஞ்சள், சிவப்பு இணைந்த உயரமான, கம்பீரமான துவஸ்தம்பத்தின் உச்சியில் சிங்கம் தோற்றம் தரும்.

சிறிய அளவில் அமைந்துள்ள சரளா தேவி கோயிலின் கருவறையில் இப்படி மூன்று திரு உருக்கள் பிரதிஷ்டை ஆகி நம்மை மெய்சிலிர்க்கச் செய்யும்!

முதலில் எட்டடி உயரம் பூண்ட அருள்மிகு மகிஷாசுர மர்த்தினி, அஷ்ட புஜங்களுடன் தன் வலக்காலை சிம்ம வாகனத்தில் ஊன்றி, தன் திருக்கரங்களில் தண்டம், வில், அம்பு, கோடரி, வீணை, புத்தகம், தாமரை மற்றும் மகிஷனின் சிரசையும் வைத்து அருள் காட்சி தருகையில், தரிசனம் பெறுவோர் நிச்சயம் பரவசமுறுவர்!

இந்த அன்னை சரளா என்றும், சாரதா என்றும் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகிறாள். தன் கரங்களில் வீணை, புத்தகம் இவற்றை தரித்துள்ளதால் தேவி சரஸ்வதியாகவும், வாக்தேவியாகவும் பக்தர்கள் இத் தேவியை பாவிக்கிறார்கள்.

அடுத்து அங்கேயே நான்கு திருக்கரங்களுடன், சங்கு, சக்கரம், வர முத்திரை, அபயஹஸ்தம் காட்டும் அருள்மிகு தேவி துர்க்கையும், அஷ்ட லோகத்தில் உருவான இரு கரங்களுடன் கூடிய அருள்மிகு மாதங்கியும் எழுந்தருளி திருக்காட்சி தருவார்கள்.

அன்னை சரளா தேவியை பூஜிக்கும் இக்கோயிலில் துளசி, வில்வ தளங்கள் பயன்படுத்தப்பட்டு, அவையே பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் இடம் பெறும் சாரதா நவராத்திரி தினங்களில் அதாவது மூல அஷ்டமியில் தொடக்கமாகி, துர்காஷ்டமி வரை இவ்வாலயத் திருவிழா மிக விமரிசையாக நடத்தப்படும்.

ஒரிய வருடப்பிறப்பு அன்று கடநிருத்திய வகை நடனமுடன், அலங்கார பூஷிதையாக காட்சி தரும் சரளா தேவி பக்தர்களால் கொண்டாடப்படுவாள்.

வருட அட்சய திருதியை முன்னிட்டு தொடர்ந்து 21 நாட்கள் இவ்வாலயத்தில் விழா நடைபெறும். சந்தன் யாத்திரை என்ற விழாவின் போது தெப்ப உற்சவம் நடத்தப்படுவது அவ்விழாவின் ஒரு அங்கமாக உள்ளது.

ஒரிய மாநில அறுவடை கால திருவிழாவின் போது அருள்மிகு சரளா தேவிக்கு படைக்கவென்று பெருமளவு உணவு தயாரிக்கப்பட்டு, நெய்வேதித்து, பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் ஒன்று திரண்டு அமர்ந்து, சகோதரத்துவத்தை உணர்த்தும் விதமாக ஒன்றுகூடி உண்பார்கள்.

சரளா தேவியை உளமார பூஜித்து தரிசனம் புரியும் பெண்களுக்கு தேவி மாங்கல்ய பாக்கியம் அருள்வது இத்திருக்கோயிலின் முக்கிய சிறப்பாகிறது.

தன்னை வழிபடும் கலைஞர்கள், இசைப்பாடகர்கள், மாணவ மாணவியர்கள் அவரவர்கள் கொண்ட திறமைகளில் பளிச்சிடவும், அன்னை சரளா தேவி அருள் புரிகிறாள் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

ஆலயத்தில் பக்தர்களின் தரிசன நேரம் தினசரி காலை 7 மணிமுதல் மதியம் 11:30 வரையும், மாலை 4 மணியிலிருந்து இரவு 7 மணி வரையும் அமைந்துள்ளது.

அன்னை சரளா தேவியின் அருள் அனைவருக்கும் கிட்டட்டும்!

# எங்கெங்கு காணினும் சக்தியடா...!

சாய் சந்திரன்







'சக்தி' இல்லாத இடமே இல்லை என்றபடி அத்தேவி நம் நாட்டின் பல்வேறு நகர, கிராமங்களில் வெவ்வேறு திருநாமங்கள் பூண்டு, தன்னை வேண்டும் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறாள்.

அத்தகைய சக்திகளைப் பற்றி அறிய அறிய, நமது மனசக்தி, உடல் சக்தி, பொருள்வள சக்தி, என்ற பலப்பல சக்திகள் பல மடங்காக பெருகிடும்.

### கமலாத்மிகா

கமலாத்மிகா, இந்திரை என்ற பெயர்கள் படைத்த இத்தேவி சாட்சாத் மகாலட்சுமி தான்!

### தாரா

'தாரா' தேவி நீல சரஸ்வதி, உக்ரதாரா, சுக்ல தாரா, நீல தாரா, சித்ர தாரா எனும் ஐந்து வடிவங்களில் தோற்றமளிப்பாள்.

'வாழ்க்கைப் பயணத்தை நடத்துபவள்' என்ற பொருளைக் கொண்டுள்ளது 'தாரா' என்பது.

### திரிபுரசுந்தரி

ஸ்தூலம், சூட்சுமம், காரணம் என்கிற முப்புரங்களின் அழகாக விளங்கும் திரிபுரசுந்தரி, மூவுலகிற்கும் பேரழகி என்பதால் இந்தக் காரணப்பெயர் கொண்டுள்ளாள். இத்தேவியை ஸ்ரீ லலிதை, இராஜராஜேஸ்வரி, காமாட்சி, ஸ்ரீ காமகோடி என்ற பல பெயர்களால் பக்தர்கள் அழைக்கிறார்கள்.

### மாதங்கி

சகல சக்திகளின் மகாராணியாகத் திகழும் மாதங்கி வேறு யாருமல்ல! சாட்சாத் அந்த மதுரை மீனாட்சியே அத்தேவி! இசைக் கலையின் அதிதேவதையான மீனாட்சி கொண்டது பச்சை வண்ண மேனி.

### சின்னமஸ்தா

வித்தியாசமான கோர உருவம் படைத்த சின்னமஸ்தா தேவி, தன்னுடைய வெட்டப்பட்ட தலையை தன் கரத்திலேயே ஏந்தி காட்சி தருவாள். சின்னமஸ்தா காரணப்பெயர். அதன் பொருள் 'துண்டித்த சிரசினள் என்பதாகும்.

### காளீ!

காலத்தின் தெய்வத் திரு உருவே காளீ! அத்தேவியின் மேனி கொண்டது கருமை நிறம். அழிவின் வடிவமாகத் திகழும் காளீ தீயோர்களுக்கு சிம்ம சொப்பனம்!



## தூமாவதி

தூமாவதி கொண்ட பெருமைகளில் ஒன்று, இத்தேவி மகாவிஷ்ணுவின் யோக நித்திரையாவாள். இவள் இருப்பிடம் அழிவதற்கும், தோன்றுவதற்கும் நடுவில் செயலற்றதாக உள்ள இடைவெளியாகும். ‘புகை சக்தி’ என்பதைக் குறிக்கும் ‘தூமாவதி’ பெயர்.

## பகளாமுகி

பகளாமுகியே திருவானைக்கா சிவாலயத்தில் தேவி அகிலாண்டேஸ்வரியாக அருட்காட்சி அளிக்கிறாள். வாக்கு, ஸ்தம்பன தேவியாகக் கருதப்படும் இத்தேவி முதலில் எந்தக் காரியத்தையும் சற்று தடைப்படுத்திவிட்டு, பின்பு இன்னும் அக்காரியம் வெற்றிகரமாக முடிய அருளுவது வழக்கம்.

## திரிபுர பைரவி



பயம் தரும் ஞானத்தாயான திரிபுர பைரவி உலகப் படைப்பிற்காக தவம் புரியும் மாதாவாகிறாள். பைரவம் என்பதின் அர்த்தம் ‘அச்சம் அளிப்பவள்’ என்பது.

## புவனேஸ்வரி

பிரகிருதி, இயற்கை என்ற பெயர்களையும் கொண்ட புவனேஸ்வரி பக்தர்களின் மாயைகளை அழித்து மெய்ஞானத்தை ஊட்டி விடுவாள். அவர்களுக்கு புவனங்களையும், அதில் குடிகொண்ட அனைத்து உயிர்களையும் காக்கும் ஆளுமை கொண்டுள்ள தேவியாவாள் புவனேஸ்வரி.

## அன்னபூரணி



காசியில் குடிகொண்டுள்ள அன்னபூரணி, உலக முழுமைக்கும் உணவு அளிக்கும் தாயாகிறாள்! இத்தேவி திரிபுரசுந்தரி என்று வழங்கப்படும் ஸ்ரீ லலிதா தேவியின் உப அங்கமாவாள்.

## மகிஷாசுரமர்த்தினி

மகிஷாசுரமர்த்தினி காரணப் பெயராக இத்தேவிக்கு விளங்குகிறது. எருமைத் தலை கொண்ட அசுரன் மகிஷனை சம்ஹாரம் செய்ததால் மகிஷாசுரமர்த்தினி. இத்தேவி சிவத் திருமேனியில் ஒரு பாதியாக இடம்பெற்று காட்சி தருவாள்.

## துர்க்கை

நவராத்திரி காலங்களில் கௌரி, லட்சுமி, சரஸ்வதி என மூன்றும் சேர்ந்த திரு உருவாக அருட்காட்சியளிப்பவள் துர்க்கை. திருமாலின் சகோதரியான இத்தேவி பக்தர்களின் பயங்களை போக்குவாள். ஆபத்து நேருங்காலத்தில் தன்னைச் சரண்புகுந்தவர்களுக்கு அடைக்கலம் அருளும் குணமுடையவளான துர்க்கை, நீலகண்டி, ஹேமங்கரி, அரசித்தி, உருத்திர சூச துர்க்கை, வனதுர்க்கை, சய துர்க்கை, விந்தியாவாச துர்க்கை, இரிபு மாரி துர்க்கை என ஒன்பது திருத் தோற்றமுடையாள்.

# ஆன்மீகச் செய்திகள்



## ஒரே ஆலயத்தில் மூன்று துர்க்கைகள்

சிவன் குடி கொண்டுள்ள திருக்கோயில்களின் கருவறை வெளிச்சுற்றில் நவ துர்க்கைகளில் ஒரு துர்க்கை அம்மன் மட்டுமே காணப்படும். வித்தியாசமாக, கும்பகோணத்தை அடுத்த திருச்சேறை சாரபரமேஸ்வரர் (ஸ்ரீ ருண விமோசனர்) சிவாலயத்தில் மட்டும் கோஷ்டத்தில் அருளும் துர்க்கைக்கு முன்பாக சிவ துர்க்கை, விஷ்ணு துர்க்கை, வைஷ்ணவி துர்க்கை என மூன்று துர்க்கைகள் குடிகொண்டு தரிசனம் அளிக்கிறார்கள். அனைத்து வளங்களும் இந்த அம்மன்களை வழிபடும் பக்தர்களை அடையும் என்பது தல வரலாறு சொல்லும் சேதியாகும்.

## வில் 'பவர்' !

ஒவ்வொருவரும் வெவ்வேறு பெயர்கள் கொண்ட வில்லை உபயோகித்துள்ளனர் இப்படி....

சிவனின் வில் பிநாகமாக, கண்ணனின் வில் சார்ரங்கமாக, ஸ்ரீராமனின் வில் கோதண்டமாக, அர்ஜுனனின் வில் காண்டீபமாக, கர்ணனின் வில் காண்டபிரஸ்தமாக, மன்மதனின் வில் கரும்பு வில்லாக...

இந்த வில்களில் மன்மதன் வில் தவிர, இதரர்களின் வில் எதிரிகளைத் தாக்கவும், தற்காப்புக்கும் மட்டுமே பயன்பட்டுள்ளது.

ஆனால் மன்மதன் வில்லோ அனைத்து தேவர்களையும், மனிதர்களையும் தாக்கிவிடும் சக்தி கொண்டுள்ள சிறப்பு வில் ஆகும்.

## முமுட்சு யார்?

முமுட்சு என்பதற்கு பொருள் மோட்சம் பெறும் ஆசை கொண்டவன் என்பது. இரண்டு வகைப்படும் இந்த முமுட்சுகளில் ஆத்ம அனுபவமாகிய கைவல்யத்தை விரும்புபவன் 'கைவல்யார்த்தி' என்றும், பகவத் அனுபவமாகிய மோட்சத்தை விரும்புகிறவன் 'மோட்சார்த்தி' என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

## பஞ்சரங்கத் தலங்கள்

பஞ்சரங்கத் தலங்கள் என்பது, கிளையாகப் பிரிந்து பாயும் இரு காவிரிக்கு மத்தியில் அமைந்த தலங்களே 'பஞ்சரங்கத் தலங்கள்' என வழங்கப்படுகின்றன.

மைசூரில் உள்ள ஸ்ரீரங்கப்பட்டினம் 'ஆதிரங்கம்' என்றும், கோவிலடி எனும் திருப்பேர் நகர் அப்பாலரங்கம் என்றும், திருச்சியை அடுத்த ஸ்ரீரங்கம் மத்தியரங்கம் என்றும், சார்ரங்கபாணி பெருமாள் குடிகொண்ட கும்பகோணம் சதுர்த்தரங்கம் என்றும், பரிமள ரங்கநாத பெருமாள் எழுந்தருளியுள்ள திரு இந்தளூர் எனும் மயிலாடுதுறை பஞ்சரங்கம் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றன.

## திருவெண்காட்டு சிறப்பு

சீர்காழியிலிருந்து பூம்புகார் செல்லும் பாதையில் சுமார் 13 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள திருவெண்காடு, நவக்கிரக தலங்களில் 'புதன்' தலமாக உள்ளது. காசிக்குச் சமமாகவும் இவ்வூர் போற்றப்படும்.

சூரியனும், சந்திரனும் ஒரு காலத்தில் வழிபட்ட இந்த சிவாலயத்தில் பிரம்ம வித்யாம்பிகை உடனுறை சுவேதாரண்யேஸ்வரராக குடிகொண்டு அருட்காட்சி தருவார்.

இவ்வாலயத்தில் சுவேதாரண்யேஸ்வரர், நடராஜர், அகோர மூர்த்தி என்று மூன்று மூர்த்திகளும், பிரம்ம வித்யா நாயகி, காளிதேவி, துர்க்கை என்று மூன்று சக்திகளும், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம் என்று மூன்று தீர்த்தங்களும், வடவால், வில்வம், கொன்றை என்ற மூன்று தல விருட்சங்களும் அமைந்து முக்கண்ணன் புகழை பறை சாற்றுகின்றன.

இவ்வாலய தேவி பிரம்மனுக்கே வித்தைகள் கற்பித்து அருளியதால் பிரம்ம வித்யாம்பிகை என திருநாமம் கொண்டுள்ளாள்.



## ஸம்பத்கரி தேவி

ஸம்பத்கரி தேவி என்ற தேவதையை பலர் அறிந்திருக்க மாட்டார்கள்.

யார் அந்த தேவி? தேவி லலிதாம்பிகை கொண்ட யானைப் படையின் தலைவியே இந்த ஸம்பத்கரி தேவியாவாள். ‘ஸம்பத்கரி பரமேஸ்வரி’ என்றும் அழைக்கப்படும் இவள் கோடிக்கணக்கான யானைகள், குதிரைகள், ரதங்களுடன் சகல செல்வங்களையும் தன்னுள் கொண்டவள்.

தன்னை வழிபடுவோருக்கு அழியாத நவநிதிகளை வழங்கி அருள் பாலிக்கும் ஸம்பத்கரி தேவி, யானையின் மதத்தை அடக்க அங்குசம் உதவுவது போல ‘நான்’ என்கிற மதத்தை ஒடுக்குபவள்!

“க்லீம் ஹைம் ஹ்ஸெஹு ஹ்ஸௌஹு ஹைம் க்லீம்” என்பது இந்த தேவியின் மூல மந்திரமாகிறது.

## தர்மயுத்தம்

குருஷேத்திரத்தில் நடைபெற்ற போரின் போது, அர்ஜுனன் தான், தனது சகோதரர்கள், நண்பர்கள், பிற உறவுகள் இவர்களை எதிர்த்து போரிட வேண்டுமா என்ற தயக்கமும், சோர்வும் பெற்ற நிலையில் அவனுக்கு பகவான் கண்ணன் உற்சாகமளிக்கும் வகையில் எத்தனையோ அருளோபதேசம் தந்து ஊக்கப்படுத்தினார். அதில் ஒரு சிறு பகுதி இது!

(பகவத் கீதையிலிருந்து எடுக்கப்பட்டது)

“ஹே! அர்ஜுனா! இப்பொழுது நடந்து கொண்டிருப்பது ஒரு தர்மயுத்தம்! எனவே இதனை நீ கட்டாயம் செய்துதான் ஆகவேண்டும். எந்தக் காரணத்தையாவது காட்டி நீ போரில் ஈடுபடாவிட்டால் நீ ஸ்வதர்மத்தை விட்டவன் ஆவாய்! அது மட்டுமல்ல; நிவாத கவசர்கள் போன்ற அசுரர்களுடன் போர் புரிந்து நீ பெற்ற வெற்றி, பகவான் மகா தேவருடன் யுத்தம் செய்து நீ அருள்பெற்றது, இவை காரணமாக உலகில் பரவியிருக்கும் உன் புகழ் எல்லாம் ஒட்டு மொத்தமாக அழிந்து விடும். நீ செய்ய வேண்டிய கடமையிலிருந்து நழுவி விட்டால், பாவமும் உன்னைச் சேர்ந்து விடும். பாவம் வந்துவிடுமே எனப்பயந்து யுத்தத்தை தவிர்ப்பதாகச் சொல்லும் நீ நிச்சயம் பாவத்தை அடைய நேரிடும்! இந்த யுத்தத்திலிருந்து நீ பின்வாங்குவது முற்றிலும் நியாயமற்றதும், ஒவ்வாததும் கூட!”

## யோகியின் லட்சணம்

எவனொருவன் தன் சரீரத்திலிருந்து விடுபடுவதற்கு முன் இந்த ஜென்மத்திலேயே காம, குரோதங்களால் விளையும் வேகத்தைத் தடுக்கும் சக்தி கொண்டவனோ, அவன் தான் யோகியாவான்!

அத்தகைய யோகி புறப்பொருட்களில் பற்று இல்லா மனம் கொண்டு ஆத்மாவிலேயே சுகத்தை, அதுவும் அழிவில்லாத சுகத்தை, அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுவான்.

காம, குரோதங்களை உதறித் தள்ளியவர்களும், தன் மனதை அடக்கியவர்களும், ஆத்மாவை அறிந்தவர்களுமான யோகிகளுக்கு இருபுறமும் பிரம்மானந்தம் கிட்டிவிடும்.

பரமாத்துவ தத்துவத்தில் புத்தி, மனம், பற்றுதல், நோக்கு இவற்றைக் கொண்டு ஞானத்தால் மாசுகளை தீர்த்துக் கொள்ளும் யோகிகள் மீளாத ஒரு நிலையைப் பெற்று விடும் பாக்கியவான்கள் ஆவார்கள்.

யோகிகளின் இந்நிலை குறித்து பகவத் கீதையில் அருளப்பட்டுள்ளது.

### மதுரையின் பெருமைகள்!

தமிழ்ச் சங்கம் இருந்த இடம், சங்கப் புலவர்கள் வாழ்ந்த இடம், நக்கீரரின் திருமுருகாற்றுப்படை தோன்றிய இடம், திருக்குறள் அரங்கேறிய இடம், மணிமேகலை காப்பியம் தோன்றிய இடம், திருவாசகம் படைத்த மகான் மணிவாசகர் வாழ்ந்த இடம், சைவ சமயத்தின் பெருமையை மகான் திருநாவுக்கரசர் நிலை நிறுத்திய இடம், பெரியாழ்வார் பல்லாண்டு பாசுரம் பாடிய இடம், திருவிளையாடல் புராணம் பிறந்த இடம், குமரகுருபரர் மீனாட்சி பிள்ளைத்தமிழ் பாடிய இடம், மூதூர் என்ற சிறப்புப் பெயரைக் கொண்ட இடம், (மூதூர் - பழைய ஊர்) சைவ சமய சிவாச்சாரியரான குருஞானசம்பந்தர் 'சொக்கநாத வெண்பா' பாடிய இடம் என இவைகள் தவிர இன்னும் பல சிறப்புகளைத் தன்னகத்தே கொண்ட ஒரே தலம் மதுரை மட்டுமே!

### கோபக்காரன்

பானு கோபன் என்பவன் கந்தபுராணத்தில் இடம்பெறும் அசுரன் சூரபத்மனின் மூத்த புதல்வன். அவன் சின்னக் குழந்தையாக இருந்த போது, ஒரு சமயம் அவன் உடல் மீது சூரியனின் கதிர்கள் பட்டு வெப்பம் உண்டானதால், சினம் உண்டாகி, அந்தச் சூரியனையே சிறையில் அடைத்தவன்!

பானு என்றால் சூரியன் என்று பொருள். சூரியனைக் கோபித்தவன் என்ற பொருளில் அவனுக்கு சூட்டப்பட்ட பெயரே 'பானு கோபன்' என்பது. பானு கோபன் தன்னுடைய பாட்டி மாயை என்பவளிடமிருந்து மாயைகளை இயற்றும் சக்தியைக் கற்றுக் கொண்டவன். அதனால் சூரசம்ஹார யுத்தத்தின் இடையிடையே பானு கோபன் மறைந்து போகும் முறையைக் கையாளுவானாம்!



### கொலு பொம்மைகள்

மகிஷாசுரனுக்கும், அம்பிகைக்கும் நடந்த உக்கிர போரைக் கண்ணுற்ற வானுலக தேவர்கள் செய்வதறியாது பொம்மை போல் திகைத்து நின்றார்களாம்! அதைக் குறிக்கும் வகையில் தான் நவராத்திரி கொலு வைபவம் ஏற்பட்டதாகச் சொல்லுவதுண்டு!

**பத்ரி - சரபு**

# திருத்தலப் பெருமை

# திருவதிகை அருள்மிகு திரிபுரசுந்தரி உடனுறை அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில்



கடலூர் அருகே பண்ருட்டி என்னும் நகரிலிருந்து சரியாக சொல்ல வேண்டும் என்றால் 1 கி.மீட்டர் தொலைவில் இத்தலம் சிறப்புற அமைந்துள்ளது. பண்ருட்டி பேருந்து நிலையத்திலிருந்து கடலூர் பாதையில் திருவதிகை எனும் திருத்தலம் உள்ளது.

அட்ட வீரட்ட தலங்களுள் முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும். திரிபுரத்தை எரித்த வீரச்செயல் நிகழ்ந்த அற்புத சிவத்தலம்.

நால்வரில் ஒருவரான திருஞான சம்பந்தருக்கு பெருமான் திருநடன தரிசனத்தைத் தந்த தொன்மையான திருத்தலம்.

அப்பர் அடிகள் என்று அன்பொழுக அழைக்கப்பெறும் திருநாவுக்கரசர் சுவாமிகளின் தமக்கையார் திலகவதியார் தங்கியிருந்து சிவநேய திருத்தொண்டு செய்த திருத்தலம். திலகவதியார் வேண்டுதலுக்கு ஏற்ப, சமண சமயத்தைச் சார்ந்த தம் இளவலை, மருள்நீக்கியார் - தருமசேனர் என்றெல்லாம் சொல்லப் பெற்றவரை சூலை கொடுத்து ஆட்கொண்ட அற்புத நிகழ்வு அரங்கேறிய தலம் இது.

நாவுக்கரசு என்று சர்வேஸ்வரனே அன்புடன்

அழைத்து அருள்பாலித்த திருக்கோயில். உழவாரப் பணிபுரிந்து உயிர் உள்ளவரை ஒருபோதும் நமச்சிவாயத்தை மறவாத சிவநேயச் செல்வராக வாழ்ந்து சிவப்பேறு பெற்ற திருநாவுக்கரசர் மனமுருக வழிபட்டு பதிகம் பாடிய திருத்தலம்.

ஆற்றேன் அடியேன் என்றும், கூற்றாயினவாறு என்றும் பாடிய அருள் நலமும் தம்முடைய சூலை நோய் நீங்கப் பெற்ற அற்புத திருத்தலம்.

தல விருட்சம் சரக்கொன்றை! தீர்த்தம் கெடில நதி!

வேறு எங்கும் காணமுடியாத அரிய செய்தி யாதெனில் சுவாமி கருவறை, தேர் போல பதுமைகளால் அலங்கரிக்கப்பட்டு நிழல் பூமியில் சாயாதபடி கட்டப்பட்டிருப்பது அதிசயம்.

புராதனமான சிற்பங்கள் மிகுந்த கலை நயத்துடன் காணப்பெறுகின்றன.

எழுநிலை இராஜகோபுரம் கம்பீரமாக காட்சி அளிக்கிறது. அசப்பில் தஞ்சை பெரிய கோயிலைப் போன்று அமைந்துள்ளதும் விஷேஷம்.

108 கரணங்கள் கொண்ட சிற்பங்கள் நடன மாதர்களின் நளின நிலைகள் ஒப்பற்ற கலை வேலைப்பாடுகள், அனைத்து சந்நிதிகளும் பிரகாரங்களில் மிகுந்த எழில் நலத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

“சென்னதிகை யோங்கித் திலகவதியார் பரவு

மன்னதிகை வீரட்ட மாதவமே”

என்று வள்ளல் பெருமான் வடலூர் இராமலிங்க சுவாமிகள் தம் அருட்பாவில் அருளியுள்ளார்.

திருக்கோயிலுக்குள் நுழைந்ததும் முதலில் நம் விழிகளில் படுவது 27 நட்சத்திரங்கள் கொண்டவர்களின் குண நலன்கள், செயல்பாடுகள் குறித்த கல்வெட்டுகள் அமைக்கப் பெற்றதும் ஓர் அதிசயம்.

வாழ்வில் வளமும் நலமும் பெற திருவதிகையில் உறையும் ஈசனை மனதார தரிசித்து வழிபடுவோம்.



சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர். சீனு. செந்தாமரை
கடலூர்

# குறளும் பொருளும்

# துறவு என்பது...



அந்த பகுதியிலேயே பிரசித்திபெற்ற மலைக்கோவில் அது! மிக உயரம் என்று சொல்லிவிட முடியாது. சுமாரான உயரம் தான்! 600 படிக்கட்டுகள் கொண்டது. மலையின் மேலே உள்ள கோவிலில் மகேசன் சிவலிங்க உருவிலே காணப்படுகிறார்.

கிட்டத்தட்ட ஒரு சுற்றுலாத்தலம் போன்றே வெளியூர் பக்தர்கள் பஸ், வேன் என வாகனங்களில் வந்து கொண்டே இருந்தனர். பக்தர்களின் கோரிக்கையை இறைவன் நிறைவேற்றுவதால் அன்னதானம் செய்வோரின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருந்தது. இந்த மலையடிவாரத்தில் தினமும் மூன்று வேளையும் அன்னதானத்திற்கு பஞ்சமே இல்லாமல் போனது!

இது ஒன்று போதாதா?
நீருள்ள குளத்தைச் சுற்றி கொக்குகள் பறப்பது போல அந்த தலத்தில் சாதுக்கள் வந்து குவிந்தார்கள். சாதுக்கள் என்பார் எவர்?

இல்லறக் கடமைகளை செய்து முடித்துவிட்டு இன்னல்கள் பலவற்றை அனுபவித்து, அதன்பின் மனத்தெளிவு ஏற்பட்டு, ‘எல்லாம் இறைவனே’ எனும் நிலையை உணர்ந்து, பந்த பாசங்கள், இன்பங்கள் அனைத்தையும் துறந்து, ‘இனி அவன் நிழலே இன்பம்’ என சந்நியாசம் பெற்று, இருக்க இடமோ, உண்ண உணவோ, பளபளப்பான உடையோ இவை எதையும் எதிர்பாராமல் உதறித்தள்ளி, கிடைத்ததை எடுத்து, வாழ்க்கையை இறைவனுக்கே அர்ப்பணம் செய்தவர்கள் தானே உண்மைத் துறவிகள்!?...

அப்படிப்பட்ட உண்மைத் துறவிகள் இத்தலத்தில் நிறையபேர் இருந்தனர். மண்டபம், மரத்தடி, மலையடிவாரம் என்று கிடைத்த இடத்தில் படுத்து, எவராவது அன்னதானம் செய்தால்... பசித்தால் மட்டுமே அதை வாங்கி உண்டு விட்டு, ‘நமசிவாய’ என நாளைக் கடத்தி வந்தார்கள்.

இந்த துறவிகளுக்கு நடுவே, உழைப்பை வெறுத்து, பொறுப்பை மறுத்து, குடும்ப பாரம் தாளாமல் உதறித்தள்ளி, ஓடி வந்தவர்களும் காவி உடையில் சாதுவாகத் திரிந்தார்கள்.

அங்கே... சதாசிவம் என்றொரு சாது... முதியவர்... சாதுக்கள் அனைவருக்கும் வழிகாட்டியாய் இருந்தார். தினமும் அனைவருக்கும் சிவசிந்தனைகளை போதித்து, இறைவனை அடையும் வழிகளையும், நன்னெறிகளையும் கூறி, அனைவருக்கும் ஒழுக்கத்தை ஊட்டிவந்தார்.

அந்த துறவிகள் கூட்டத்தில் சமீபகாலமாக, சில இளந்துறவிகள் வந்து சேர்ந்ததை சதாசிவ சுவாமிகள் பார்த்தார்! அவரது மௌன சிரிப்பே, அந்த துறவிகளை எடை போட்டது!

ஒரு நாள்... முப்பது வயதுள்ள புதுத்துறவி, கையில் ஒரு தூக்கு வாளியுடன் மற்ற துறவிகளை அணுகி, மண்டபத்தில் அன்னதானம் வடை பாயாசத்தோடு நடப்பதாகவும், பாத்திரம் கொடுத்தால் தான் வாங்கி வருவதாகவும் தெரிவிக்க... சிலர் தங்கள் பாத்திரங்களைக் கொடுத்தனர்! வேறுசிலரோ தாங்களும் உடன் வருவதாக அவனுடன் சேர்ந்து கொண்டனர்! இப்படியே அன்னதானம் பெற, அவன் ஆள்சேர்த்து வருகையில் ஒரு நடுத்தர வயது சாதுவிடம் அந்த இளந்துறவி, "அண்ணே!... பீடி இருந்தா ஒன்னு கொடுங்க! பழகித் தொலைச்சுட்டேன்; மறக்க முடியல! குளிர்வேற வாட்டுது!" என்று கேட்டான். பதிலே சொல்லாமல் கைகளை விரித்து 'இல்லை' என்பது போல் சைகை செய்து அப்பால் நகர்ந்தார் அவர்! சலித்துக்கொண்டு திரும்பிய அந்த இளந்துறவியின் பார்வை ஒரு மரத்தடிக்குச் செல்ல... அங்கே பலகை போன்று அகலமான கல்லில் தலைவைத்து, தலையணியாய் அதை பாவித்து படுத்திருந்த துறவியை, வேகமாக அவரிடம் சென்ற இளந்துறவி... "சாமீ... இது என்னோட இடம்! இதுல தலவச்சி படுத்தா தான் எனக்கு தூக்கமே வரும்! நான் போய் அன்னதானம் வாங்கிட்டு வந்துடறேன். நீங்க வேற இடம் பாருங்க!" என்றபடி, துறவிகள் கொஞ்சம் பேரோடு அன்னதான மண்டபம் நோக்கி சென்றான்.

இவை அனைத்தையும் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தார் சதாசிவம் சுவாமிகள்!

நேரம் சென்றது!...

அன்னதானம் பெற்றுவந்த உணவை ஆங்காங்கே அமர்ந்து எல்லா சாதுக்களும் ரசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சதாசிவம் சுவாமிகள், தேவாரப் பாடல் ஒன்றை மெல்லிய ஓசையுடன் பாடிக் கொண்டிருந்தார்!

நன்றாக சாப்பிட்டு பெருத்த ஏப்பத்துடன் கைகழுவி எழுந்த இளந்துறவி, சதாசிவ சுவாமியை நோக்கி, "சாமி... வட, பாயாசம், சோறெல்லாம் நிறைய இருக்கு! நீங்களும் வந்து சாப்பிடுங்க!" என்றான். அவர் சிரித்தார்!

"எனக்கு வேண்டியது... உயிர் வாழ, ஒரு வேளை ஒரு கவளம் சோறு! அதை மதியமே இறைவன் எனக்குக் கொடுத்து விட்டான்" என்றார்.

"என்ன நீங்க புரியாம பேசுறீங்க?!.. அன்னதானம்கிற பேர்ல தயிர் சாதமும் புளியோதரையும் போடற எடத்துல எவனோ ஒரு புண்ணியவான் வட, பாயாசத்தோட விருந்து வச்சிருக்கான். இனி எப்ப இதுமாதிரி கெடைக்குமோ? கெடைக்கும் போதே சாப்பிட வேண்டியது தானே?!" என அலுத்துக்கொள்ள...

சதாசிவம் சுவாமிகள், "திருச்சிற்றம்பலம்... பகட்டு, படாடோபம், விருந்து, கேளிக்கை... இதையெல்லாம் கிடைக்கின்ற காலத்திலேயே தள்ளி வைத்தவன் நான்! நான் மட்டுமல்ல; நம்மைப் போல் காவியணிந்த அனைவருக்கும் சொல்வேன்... எது ஒன்று எளிதாக கைக்குக் கிடைக்கிறதோ, அது கிடைக்கும் போதே மனதார அதனை வேண்டாம் என்று துறக்கின்ற நிலை இருந்தால் இப்போது நாம் துறவறம் ஏற்றதற்கு பொருத்தமாக இருக்கும்!

எளிதாக கிடைக்கும் ஒன்றை ஏற்காத மனம் பெற்றால் அதுதான் உண்மையான துறவறம்! அதை விடுத்து, எதுவுமே வேண்டாம் என்று விட்டுவிட்டு வந்த பின்பு அது கிடைக்குமா? இது கிடைக்குமா? என ஏங்குவது தவறு! பாசம் கிடைக்கின்ற காலத்தில் அதையும் அளவோடு அனுபவித்து ஒதுக்கி வைப்பதுதான் இன்று ஏற்றிருக்கும் துறவறத்திற்கு இன்பமானதாய் அமையும். இதைத்தான் துறவிக்கான இலக்கணமாய் வள்ளுவர் சொன்னார்...

வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல"

என்று கூறி, தனது இதயத்தில் இருக்கும் இறைவனை நினைத்து தியானித்தார் சதாசிவ சுவாமிகள்.



ரா. பன்னீர்செல்வம்

## மகான் ஷீர்டி சாய்பாபா

# மழையில் நடந்த அற்புதம்!



மகான் ஷீர்டி சாய்பாபா எப்பொழுதும் ஷீர்டியை விட்டு எங்குமே செல்லாமல் இருப்பார் என்பது பலர் கொண்ட எண்ணம்! ஆனால் உலகின் எப்பக்கம் தன் பக்தன் வசிக்கின்றானோ அங்கும் மகானின் கருணைப் பார்வை சென்று, அவனை உய்விக்கும் என்பதற்கு இந்த சம்பவம் ஒன்றே பதிலளிக்கும்.

ஷீர்டி தலத்திற்கு சமீபத்தில் உள்ள சின்ன கிராமத்தின் பெயர் நீம்காவ்ன் என்பது. அவ்வூரில் வசித்து வந்த நானாசாகேப் டெங்கனே என்பவர் முடிசூட்டப்படாத ராஜாவாக நீம்காவ்ன் சிற்றூரில் ஏராளமான நிலபுலன்கள், பல அசையா, அசையும் சொத்துக்களைப் பெற்று சுகமாய் வாழ்ந்து வந்ததோடு, மற்றவர்களையும் நன்கு வாழவைத்தார்.

டெங்கனே, பரந்த மனமும், மிக தர்ம சிந்தனையும் கொண்டவர். மகான் பாபாவின் தீவிர பக்தராவார். இத்தகைய நல்ல மனிதர் தமக்கு கிடைத்ததை தங்கள் பெரும் பாக்கியமாக அக்கிராமத்தினர் கருதி வந்தார்கள்.

நீம்காவ்ன் கிராமத்தில் வாழ்ந்து வந்த, பாபு மாலி என்ற நேர்மையாளர் டெங்கனேயின் பரந்த நில புலன்களை மிகுந்த அக்கறையுடன் நிர்வகித்து வந்தார்.

எப்போதாவது மகான் பாபா நீம்காவ்ன் கிராமத்திற்கு திடீரென வருகை புரிவார். வந்த கொஞ்ச நேரத்திற்குள் யார் கண்ணிலும் படாமல் ஷீர்டிக்கு திரும்பி விடுவார். அவர் வழக்கமாக அவ்வூரில் நடந்து செல்வது டெங்கனேயின் நிலங்களையொட்டி அமைந்துள்ள ஒரு ஒற்றையடிப் பாதையில் தான். அதன் பக்கத்தில் உள்ள பயிரிடப்படாத தரிசு நிலத்தில் ஒரு பெரிய புளிய மரமும், அதனையொட்டி ஒரு விளா மரமும் இருந்தன.

அப்பொழுது சரியான மழைக் காலம். திடீர் திடீரென இடியுடன் கூடிய மழை பெய்வதும், நிற்பதும், மீண்டும் மழை கொட்டுவதும் அவ்வூராருக்கு சாதாரண விசயம்!

பணியாளர் பாபு மாலி, என்ன மழை பெய்தாலும், கடும் வெயில் அடித்தாலும் அவைகளை லட்சியம் செய்ய மாட்டார். தன் அன்றாட கடமைகளுடன், குறிப்பாக டெங்கனே வளர்த்து வந்த ஆடு, மாடுகளுக்கு தீவனங்கள் சேகரிப்பதையும் முக்கிய காரியமாக ஏற்று செய்து வந்தார்.

பாபு மாலி அன்று தீவனங்களைச் சேகரிப்பதற்காக, தன்னுடன் ஆண், பெண் இருபாலர்களும் கூடிய சில கூலியாட்களுடன், மகான் பாபா அடிக்கடி நடக்கப் பயன்படுத்தும் பாதை வழியே புற்களை சேகரிக்கும் உபகரணங்களுடன் நடந்து கொண்டிருந்தார். அந்த பணியாளர்களில் ஒரு பெண் மட்டும், தன் கைக்குழந்தையை இடுப்பில் சுமந்து வந்திருந்தாள்.

புல் அறுத்துச் சேகரிக்க தன் கைக்குழந்தை இடைஞ்சலாக இருக்கும் என்பதால் முன்பு குறிப்பிட்ட ஒற்றையடிப் பாதையை அடுத்துள்ள தரிசு நிலத்தில்

இருந்த பெரிய புளிய மரத்தடியை அடைந்து கீழே சுத்தம் செய்து விட்டு, தான் கொண்டு வந்திருந்த ஒரு சிறிய துணியை படுக்கையாக ஆக்கி, தன் கைக்குழந்தையை கிடத்தினாள். தூங்கிக் கொண்டிருந்த அதற்கு இதெல்லாம் தெரியாது.

பணிப்பெண் அதற்குப் பிறகு அருகில் இருந்த நிலத்தில் விளைந்த பொருட்களை வெட்டி சேகரிக்கத் தொடங்கினாள். அப்பொழுது எங்கிருந்தோ வானில் கருமேகங்கள் தோன்றி, இடியுடன் கூடிய பெரிய மழை திடீரென கொட்ட ஆரம்பித்தது. அடுத்து சூறாவளிக் காற்றும் தொடர்ந்து விட்டது.

எதிர்பாராது வந்த சோதனையில் சிக்கிய பாபு மாலியும், ஒரே பெண் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களும், நிலப்பகுதியிலிருந்து விரைந்து வெளிப்பட்டு சுமார் 500 அடிகளைத் தாண்டியுள்ள மேட்டுப்பகுதியில் காணப்பட்ட ஒரே காலி குடிசையில் புகுந்து தப்பித்தனர். இந்த பரபரப்பு சூழ்நிலையில் தன் கைக்குழந்தையை மரத்தடியில் படுக்க வைத்திருந்த பெண் அறவே அதனை மறந்து விட்டாள்.

கொஞ்சம் மழையின் தாக்கம் குறைந்த நிலையில், பணிப்பெண்ணுக்கு அப்பொழுதுதான் உறைத்தது "ஐயோ! குழந்தையை மரத்தடியில் விட்டிருந்தோமே!" என பதறிப்போன அவள் பாபு மாலியிடம் சொல்ல, அவர் "என்னம்மா இப்படி?" என வேதனையை வெளிப்படுத்திவிட்டு அனைவருடனும் குடிசையை விட்டு புயல் வேகத்தில் ஆலமரத்தடியை நோக்கி விரைந்தார்.

அங்கே அவர்கள் கண்ட ஒரு அதிசய காட்சி இது!

புளிய மரத்தினை ஒட்டிய பகுதியில் மகான் ஷீர்டி பாபா, பெண் பணியாளரின் குழந்தையை ஆதரவுடன் ஏந்தி துணியைப் போர்த்தியிருக்க, அது அழகாக பாபா தாத்தாவைப் பார்த்து சிரித்தவாறே பார்த்துக் கொண்டிருந்தது தான்!

அப்பொழுது பணிப்பெண் மெய்சிலிர்க்க, நன்றியுடன் பாபாவை நமஸ்கரித்தாள். அப்போது அவர் சற்று அதட்டலான குரலில், "ஆவோரான்டே!" (ஒருவகை கிராம வழக்க வசைச்சொல்) என்று கூறிவிட்டு "பெற்ற குழந்தையின் நினைவின்றி இப்படியும் ஒரு தாய் இருக்கலாமா?" என்று பணிப்பெண்ணைக் கேட்டார். "சாமி! தப்பு தாங்க" என மனப்பூர்வமாய் கண்ணீருடன் மகானை அவள் வணங்க, அவர் மிக ஜாக்கிரதையாக அவளிடம் குழந்தையைத் தந்தார்.

அங்கே அனைவரையும் ஆச்சரியப்பட வைத்த செய்தி என்னவென்றால், பாபா குழந்தையை ஏந்தி நின்ற பகுதி தவிர, ஏனைய இடங்களில் சுற்றி மழையின் நீரும், தூறலும் காணப்பட்டதே! மகானும், குழந்தையும் துளி கூட மழை நீர் படாது இருந்தது தான் அது! ஷீர்டி நாதனின் கருணை மழைக்கு உட்பட்டதாச்சே அந்த பாக்கியசாலி சிசு!

புண்ணியமிக்க அந்த பணிப்பெண்ணின் கைக்குழந்தையைக் காத்தருளவே, பாபா ஷீர்டி தலம் விட்டு புறப்பட்டு நீம்காவ்ன் கிராமத்திற்கு விஜயம் செய்திருக்கிறார் என பாபு மாலியும் இதர பணியாளர்களும் தங்களுக்குள் பரவசமுடன் பேசிக் கொண்டிருக்கையிலேயே, மகான் பாபா அங்கிருந்து மாயமாய் மறைந்து விட்டார்!

அங்கிருந்த அனைவரும், மகான் காட்சி தந்திருந்த பூமி மண்ணை எடுத்து தங்கள் தங்கள் நெற்றியில் பக்தியுடன் பூசிக் கொண்டனர்.

இன்றைக்கும் மகான் ஷீர்டி சாய்பாபா எல்லோருக்கும் காட்சி தந்து நின்றிருந்த புளியமரம் பல தலைமுறைகளைக் கடந்தும் பசுமை கொண்டு, இன்றும் காட்சி தருவதாகக் கூறப்படுகிறது.

மகான் பாபா ஒரு சமயம் பக்தர்களுக்கு அருளிய வாக்கு இது:

"பாபா ஷீர்டியில் மட்டுமே இருக்கிறார் என்று எண்ணுபவர்கள் என்னை முற்றிலும் உணரத் தவறியவர்களே!"



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

# தீபாவளி சபதம்



பொன்னிலே பூத்த பூக்கள்
பூமியில் தெறித்த தைப்போல்
கண்ணிலே வண்ணம் காட்டும்
கவினுறு மத்தாப் பூக்கள்!
விண்ணிலே சுடரை வீசி
வெடித்திடும் இடியின் தாக்கம்!
இன்புற ஜாலம் காட்டும்
இனியநாள் இந்நாள் தானே!...

நரகனின் தீமை போக்க
நாரணன் வகுத்த நன்னாள்!
வரங்களைப் பெற்ற யாரும்
வரம்பினை மீறி டாமல்
மரந்தரும் பயனைப் போல
மானிடம் தழைக்க வேண்டி
நிரந்தர அமைதி காண
நெஞ்சிலே சபத மேற்போம்!...

**கவிஞர் இளமாறன்**



அரிய ஆன்மீக தகவல்

# பெண்ணை முன்னிலைப்படுத்திய பெருமாள்!



ரா. பன்னீர்செல்வம்

நாச்சியார் கோவில் - கும்பகோணத்திற்கு அருகே, திருநாரையூரில் உள்ள சிறப்பு வாய்ந்த தலம்! இவ்வூர் விளக்குகள் செய்வதில் புகழ்பெற்று விளங்குகின்றது. அத்துடன் இங்கு கோவில் கொண்டு விளங்கும் சீனிவாச பெருமாள் (நரையூர் நம்பி பெருமாள்) – வஞ்சுள வல்லி தாயார் மிகவும் பிரசித்தி பெற்றவர்கள்!

இதுமட்டுமல்ல, உலகத்திலேயே பெருமாளின் வாகனமான கருட பகவான், கல்லால் ஆனவர் என்பது இந்த ஆலயத்தின் தனிப்பெரும் சிறப்பாகும்! தனி சன்னதி கொண்டு விளங்கும் இந்த கருட பகவான், விழா காலத்தில் ஆண்டுக்கு ஒரு முறை வெளியில் வருவார். இது ஒரு தெய்வீகம் நிறைந்த நிகழ்ச்சியாகும்.

கருடன் வெளியில் வீதியுலா வருவதற்கு ஆலயத்தின் உள்ளிருந்து நான்கு, ஐந்து நிலைகளைக் கடந்து தான் வெளியில் வரவேண்டும். இதில் ஓர் ஆச்சரியமான தேவரகசியம் அடங்கியுள்ளது. அதாவது...

கல்கருடன் சன்னதியிலிருந்து அடுத்த நிலைக்கு வர நான்கு பேர் தூக்கி வருவர்! அங்கிருந்து அடுத்த நிலைக்குச் செல்ல, அப்படியே இரட்டிப்பாக எட்டு பேர் சேர்ந்தால் தான் தூக்கிவர முடியும்! அடுத்த நிலைக்கு வர 16 பேர்!... அதற்கடுத்த நிலைக்கு வர 32 பேர்; அதற்கு அடுத்த நிலைக்கு வர 64 பேர், இப்படியே இரட்டிப்பாகி வீதிக்கு வருகின்ற பொழுது 128 பேர் தூக்கினால் தான் வீதியுலா என்னும் அளவிற்கு கருட பகவானின் பலம் அதிகரிக்கும்.

வீதியுலா முடிந்து, மீண்டும் ஆலயத்திற்குள்ளே வரும்போது இதே எண்ணிக்கை, முன் சொன்னது போலவே பாதிப்பாதியாய் குறைந்து, நான்கு பேர் மட்டுமே சன்னதிக்குள் கருட பகவானை கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள்.

இந்த ஆன்மீக ரகசியம், ஆண்டாண்டு காலமாக யாருக்கும் புரியாத புதிராகவே உள்ளது!

இதுமட்டுமல்லாமல், இவ்வாலய இறைவனான சீனிவாசப் பெருமாள், தன் மனையாளான வஞ்சுள வல்லித் தாயாருக்கு முன்னுரிமை தந்து பெண்ணை முதன்மைப் படுத்தியவர் என்று சொல்லப்படுகிறது.

சாதாரணமாகவே, இப்பகுதி மக்கள், குடும்பத்தில் துணைவியாரின் அதிகாரம் கொடிகட்டிப் பறப்பதைக் குறிக்கும் வகையில் ‘உங்க வீடு என்ன நாச்சியார் கோவிலா?’ என்று கேட்கின்ற வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மூலஸ்தானமான கருவறைக்கு வெளியே நின்று தரிசனம் செய்யும் போது, தாயாரின் தரிசனம் கிடைக்கும்படி தாயார் நேராகத் தெரிவார். பகவான் சீனிவாச பெருமாள் சற்று ஒதுங்கியே இருக்குமாறு இந்த ஆலய கருவறை அமைக்கப்பட்டுள்ளது.

இல்லறத்தில் மனையாளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமை தரவேண்டும் என்னும் கருத்தை இவ்வாலய இறைவன் உலகுக்கு உணர்த்துகின்றார்.

# மகிழ்ச்சி தரும் மாண்பு நிறை தீபாவளி!

துன்ப மேகங்கள் அகல
இன்ப நிலா ஆரத்தி எடுக்க
அல்லிப் பூக்கள்
அழகாய் கோலமிட
வைகறை வரவேற்க
உற்சாக சூரியன் எழுந்துவர
குயிலினம் கும்மி பாட்டிசைக்க
மயிலினம் தோகை விரித்தாட
மலையருவி மத்தளம் இசைக்க
பூந்தென்றல் பூபாளம் பாட
புத்தம் புது தாமரைகள்
பூரிப்பு கொள்ள...
வண்ண புறாக்கள் வாழ்த்துக்கூற
இயற்கை அன்னையின் இளநகை...
பூந்துகில் ஆடையுடன்
பொன்னான தீபாவளி.!
பூவாற்றில்...
அகல் தீபங்கள் அணிவகுக்க
இனிய தீபாவளி வந்ததே

எத்திசையும் மகிழ்ச்சி...
இது உன் பண்டிகை
இது என் பண்டிகை
என்றில்லாமல்
எல்லாமே நம் பண்டிகை
என்ற உன்னத உணர்வோடு
உணவுகளை
பரிமாறிக் கொள்வதோடு
நேச உணர்வுகளையும்
பரிமாறிக் கொள்வோம்
ஆதரவற்ற குழந்தைகள்...
அனாதையாக விடப்பட்ட
அருமைமிகு முதியோர்...
அகங் குளிர
அவர்களுடன் இணைந்தே
மகிழ்வுடன் கொண்டாடுவோம்
மாண்பு நிறை தீபாவளியை...



சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர். சீனு. செந்தாமரை
கடலூர்



# கோபத்தின் கதை!

ஒரு இளைஞனுக்கு அதிகமாக கோபம் வந்து கொண்டே இருந்தது.

ஒரு நாள் அவன் அப்பா அவனிடம் சுத்தியலும் நிறைய ஆணிகளையும் கொடுத்தார்.

இனிமேல் கோபம் வரும் போதெல்லாம் வீட்டின் பின் சுவரில் ஆணி அடிக்குமாறு கூறினார்.

முதல்நாள் 10 ஆணி, மறுநாள் 7, பின்பு 5,2 என படிப்படியாக ஆணி அடிக்க கோபம் குறைந்தது.

ஒரு நாள் ஒரே ஒரு ஆணி அடித்தான், "மொத்தமாக 45 ஆணிகள் அடித்துள்ளேன். இனி கோபம் வராது" என அவன் அப்பாவிடம் கூறினான்.

"இனிமேல் கோபம் வராத நாளில் ஒவ்வொரு ஆணியாகப் பிடுங்கி விடு" என்றார். 45 நாட்களில் அடித்த ஆணிகள் பிடுங்கப்பட்டு விட்டன என பெருமையுடன் அப்பாவை அழைத்துக் காட்டினான்.

உடனே அப்பா சொன்னார் "ஆணிகளை பிடுங்கிவிட்டாய், சுவற்றில் உள்ள ஓட்டைகளை என்ன செய்வாய்? உன் கோபம் இது போல பலரை காயப்படுத்தி இருக்கும் அல்லவா?" அந்த இளைஞன் வெட்கித் தலை குனிந்தான்.

# நாயன்மார் வரலாறு

# ஏயர்கோன் கலிக்காம நாயனார்

## நெஞ்சு பொறுக்குதில்லையே!




திருப்புன்கூர் சிவாலயத்தில் வழக்கமாக அன்றும் சிவனடியார்களின் கூட்டம் அலைமோதியது. அத்தனை அடியார்களும் கண்குளிர, நெஞ்சம் நெகிழ, இறை தரிசனம் பெற்ற களிப்பில் ஆழ்ந்திருந்தனர். அடுத்ததாக, அனைவரது எதிர்பார்ப்பும் கலிக்காமரின் தொண்டினை ஏற்க தயார் நிலையில் இருந்தனர்.

யார் இந்த கலிக்காமர்?...

இறைவன் சிவபெருமானின் இன்னருள் பெற்று, சிவத்தொண்டே சிறந்த தொண்டென இறைவனின் அடியார்கள் எத்துணைபேர் வரினும் அவர்களுடைய அரும்பசியினை ஆற்றி, வேண்டியவற்றை செய்தலையே தன் பிறவிப்பயன் என செய்துவரும் சிவனடியார் ஆவார்.

திருப்புன்கூரை அடுத்துள்ள பெருமங்கலம் என்னும் ஊரில் அவதரித்த இந்த உத்தமத் தொண்டர், தினசரி திருப்புன்கூர் ஆலயம் வந்து வணங்கிவிட்டு, தன் கண்ணில் படுகின்ற சிவனடியார்களை பணிந்து, சேவை செய்து வருபவர். இவரது இல்லத்தரசியும் இணையில்லா சிவத்தொண்டர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது! கணவரின் சிவத்தொண்டுக்கு உறுதுணையாய் இருப்பவள்! சிவபக்தியில் கணவனுக்கு சற்றும் சளைத்தவள் அல்ல என வாழ்பவள்!

கலிக்காமரும் அவர்தம் துணைவியாரும் கொண்ட சிவபக்தியினை அப்பகுதியில் உள்ள அடியார்கள் மட்டுமல்ல, பொதுமக்களும் நன்கு அறிவார்கள்.

அன்று அப்படித்தான்...

சிவதரிசனம் முடிந்து, அடியார்களுக்கு பணிவிடைகள் செய்து அத்தனை பேரையும் ஆதரித்து இல்லம் திரும்ப எண்ணம் கொண்டார் கலிக்காமர். எப்போதுமே இறைதரிசனம் பெற இவருடன் வருகின்ற துணைவியார், இன்று, இல்லப் பணிகள் காரணமாக, வராமல் இருக்க... தான் சென்று ஆலய திருநீற்றுப் பிரசாதத்தை கொடுத்த பிறகுதான் இருவரும் உணவருந்த வேண்டும்

என்பதால் வேகமாக, தன் இல்லம் நோக்கி நடந்தார் கலிக்காமர்!

வழியில் ஓர் மண்டபம்! அங்கே சில சிவனடியார்கள் இளைப்பாரிக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்களிடம் சென்று நலம் விசாரித்து, வணங்கினார். எல்லோரையும் பசியாற, தன் இல்லத்திற்கு அழைத்தார்! அவர்களோ தாங்கள் அனைவரும் பக்கத்து ஊரில் உள்ள சிவாலயத்தில் பசியாறி வந்ததை கூறி பிறிதொரு நாள் பெருமங்கலத்திற்கு வருவதாகக் கூறினர். அதோடு திருவாரூரில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி கூறினர். வன்தொண்டரான சுந்தரர் பெருமான், பரவை நாச்சியாரை மணக்க வேண்டி, இறைவனையே தூதாக அனுப்பிய சம்பவத்தை அடியார்கள் அனைவரும் சிலாகித்துப் பேசினர்! இந்த செய்தியைக் கேள்விப்பட்டதுமே கலிக்காமர் நெஞ்சம் பதைத்தார்; ரத்தம் கொதித்தது அவருக்கு! "என்னே கொடுமை இது?!... அடியார்க்கு அடியான் தான் ஆண்டவன்! அதற்காக, ஒரு தனிமனிதனின் இச்சைக்காக வணங்க வேண்டிய இறைவனை தூதாக அனுப்பியது என்ன மடமை?! தொண்டர்தம் உள்ளத்துள் உறைபவன் ஆயிற்றே! அவர்தம் வேண்டுதலை நிறைவேற்ற விளையாடல்கள் புரியும் ஈசன், இப்படி ஒரு செயலில் ஈடுபட்டதை எண்ணி மனம் நொந்தார்.

அந்த அடியார்களின் தாளினை வணங்கி, விடைபெற்று இல்லம் நோக்கி நடக்க... அவருடன் வந்த அடியார்கள் இருவருக்கு கலிக்காமரின் நிலை சங்கடத்தை உண்டாக்கும் வகையில் இருந்தது.

நடைப்பயணத்தின் போதெல்லாம் அடியார்களின் தவச் செயல்கள் பற்றியும் ஆண்டவன் அடியார்களுக்காக நடத்திய திருவிளையாடல்கள் குறித்தும் மனம் நெகிழ பேசியபடியே வரும் வழக்கமுடைய கலிக்காமர் இன்று ஒருவித பதட்டத்தோடும், முகத்தில் வாட்டத்தோடும் மௌனமாய் வேகநடை நடப்பதை அவருடன் வருபவர் யாருமே பெரிதாய் ரசிக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் காரணம், சுந்தரர் பெருமான் இறைவனை பரவை நாச்சியாரிடம் தூதாக அனுப்பியதே! இதைக் கேட்டதிலிருந்து கலிக்காமரிடம் ஏற்பட்டிருக்கும் மாற்றமானது அவர்களை என்னவோ செய்தது.

ஆலயத்திற்கு சென்ற கணவரை எதிர்பார்த்து வாசலிலேயே காத்திருந்தாள் கலிக்காமரின் மனைவி! வழக்கத்திற்கு மாறாக, நடையில் தளர்வு, முகத்தில் சோகம் இவை அனைத்தையும் மீறி கோபத்தில் சிவந்த கண்கள் என வருகின்ற கணவரைக் கண்டு காரணம் புரியாமல் ஒரு கணம் திகைத்த கலிக்காமரின் மனைவி, அவரை வரவேற்று ஆசனத்தில் அமரச்சொல்ல, அவள் சொல்வதை காதில் வாங்காத கலிக்காமர், ஒரு கையால் தூணைப் பிடித்தபடி நின்றார். கோபத்தில் மேலும் கீழுமாய் மூச்சுவாங்க, சற்றும் சினம் தனியாதவராய் அப்படியும் இப்படியுமாக நடக்கத் தொடங்கினார்.

அவரது மனநிலையை மாற்றும் விதமாக, அவரது மனைவி பேச்சுக் கொடுத்தாள்! "சுவாமி... வழக்கமாக ஆலயத்திலிருந்து வந்ததும் திருநீற்றுப் பிரசாதம் கொடுப்பீர்களே... எங்கே கொடுங்கள்!..." என கைநீட்டி நின்றாள்.

தன் இடுப்புக் கச்சையில் வைத்திருந்த பிரசாதத்தை எடுத்து நீட்டியவர், "என்ன செய்வேன்?... என்னையே மறந்து விட்டேன்... என் நெஞ்சில் எழுகின்ற நினைப்பு முழுவதும் அந்த சுந்தரமூர்த்தியை சுற்றியே வருகிறது. அவர் மட்டும் என் எதிரிலே வந்தால் இறைவனை அந்த இழிச் செயலுக்கு உட்படுத்தியதற்கு தகுந்த தண்டனையை நிச்சயம் தருவேன்" என பொரிந்து தள்ளினார்.

"அப்படி என்னதான் நடந்தது? கோபப்படாமல் சற்று விளக்கமாகச் சொல்லுங்களேன்" சற்றே பணிவோடு கேட்டாள்.

"கயிலை நாதனை; கருணைக் கடவுளை தன் அற்ப காதலுக்காக தூது அனுப்பினாராம் அந்த சுந்தரர்! என்ன மடமை?! எப்படிப்பட்ட இழி செயல்?!.. நல்லவேளை... அந்த நேரம் நான் ஆரூரில் இல்லை... நான் மட்டும் அங்கே இருந்திருந்தால் ஆரூரின் தேரோடும் வீதியிலே ஆண்டவனை அலையவைத்த சுந்தரரின் ரத்த ஆற்றை ஓடச் செய்திருப்பேன்! என்ன செய்வேன்?... சேதியைக் கேட்டது முதல் நெஞ்சம் குமுறுகிறது, தேவி" கோபம் குறையாமலே விவரித்தார் கலிக்காமர்!

வேகமாகச் சென்று, ஒரு குவளை நிறைய தண்ணீர் கொண்டுவந்து கணவரிடம் கொடுத்தவள், "சுவாமி... இதைப் பருகி சற்றே இளைப்பாருங்கள்" என்றதும் தண்ணீரை மடமடவென குடித்தார்.

அவரிடம், "சுவாமி... அடியாள் சொல்வதைத் தாங்கள் சற்றே செவிமடுக்க வேண்டும்" என்றாள்,

பணிவுடன்!

“சொல் தேவி” என்றார்.

“ஆண்டவன் பெரியவன் என்பதிலே நமக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை! அதே நேரத்தில்... அடியவர்கள் இதயத்தில் அவர் ஓர் சிறு குழந்தையாக அல்லவா குடியிருக்கிறார்”

“ஆமாம்!”...

“வேண்டத் தக்கது அறிவோய் நீ...

வேண்டிய அனைத்தும் தருவோய் நீ... என்றல்லவா இறைவனிடம் நாம் இறைஞ்சுகிறோம். அதாவது, நமக்கு வேண்டியது என்ன என்பதை நாம் சொல்லாமலே அறிந்து அதனை கருணையோடு நமக்கு வழங்குபவன் இறைவன்... அப்படித்தானே?!”...

“ஆமாம்!”

“இது தவிர, தொண்டர்களின் உள்ளத்திலேயே உறைபவன் அல்லவா இறைவன்?!”

“ஆமாம்...”

“தங்களை எனக்கு மணமுடிக்க எனது தந்தைக்கும் தங்களுக்கும் ஒரு நாடகத்தை நடத்தி, சோதித்த பிறகுதானே நிறைவேற்றி வைத்தான்”.

“ஆமாம்”..

“நாம் சொல்லாமலேயே நமக்கு வேண்டியதை அறிந்து அருள்புரியும் ஈசன், வேண்டிய ஒன்றைச் செய்து கொடுக்காமல் இருப்பானா?”

“அதற்காக?”

“சுந்தரரோ... இறைவனின் அண்மையைப் பெற்றவர்; அணுக்கத் தொண்டர்; வன்தொண்டர் என்னும் சிறப்பினைப் பெற்றவர்! அப்படியிருக்க, அவரே வேண்டி கேட்டுக்கொண்ட ஒன்றை ஈசன் நிறைவேற்றாமல் இருப்பாரா? அடியவரின் ஆசையை அறிந்தார். மங்கலகரமான மணவாழ்க்கை அமைத்துக் கொடுக்க அவரே சென்றார்; இதில் என்ன தவறு?”

“தவறுதான்..! தவறுதான்! தரகர் வேலைக்கு தாண்டவ மூர்த்தியை ஏவியது தவறுதான்” கோபத்தில் வெடித்தார் கலிக்காமர்!

“இறைவனே.. மனப்பூர்வமாய் ஏற்று, தன் தொண்டனின் இச்சைக்காக தூது போய் இருக்கும் போது தங்களுக்கு ஏன் இந்த கோபம்?” பொறுமையுடன் கேட்டாள்.

“கோபம் தான்... கொற்றவனை ஒரு குடிமகன் இப்படி தூதனுப்ப முடியுமா? ஆண்டவன் அன்பர்களின் அடிமை! பரமன், பாமரனின் பக்திக்குக் கட்டுப்பட்டவன்தான்... அதற்காக, இன்னாரை இதற்கு அனுப்பவேண்டும் என்ற இங்கிதம் தெரியாதவரா சுந்தரர்? தேவி.. என்னால் இதைப் பொறுக்க முடியாது! என்றாயினும் அந்த சுந்தரரை மன்னிப்பேன் என்ற பேச்சுக்கே இடமில்லை” என்று விடுவிடுவென உள்ளே சென்றார்.

“அந்த சிவனே சிந்தை குளிர தூது சென்றார்; இவர் ஏன் இவ்வளவு வேதனைப்படுகிறார் என்று தெரியவில்லையே! இறைவா! இதை நீ தான் சரிசெய்ய வேண்டும்” என இறைவனை வேண்டிக் கொண்டாள்.

சுந்தரரின் உள்ளக் கிடக்கையை நிறைவேற்ற இறைவன் ஒரு தரகரைப் போல் தூது சென்றது ஏன்? அப்படி தூது சென்றதால், சிவனடியார்களில் கலிக்காமருக்கு மட்டும் அந்நிகழ்வு வேதனையைத் தந்தது எதற்காக?...

இந்தக் கேள்விகளுக்கான விடை இறைவனுக்கு மட்டுமே தெரியும்! ஆம்!..

வெவ்வேறு சூழலில், வேறுபட்ட இடங்களில் இருக்கும் இரண்டு அடியவர்களை வைத்து, அவர்களுடைய சிவபக்தியை உலகறியச் செய்வதோடு, இறைவன் மீது கொண்ட அளவற்ற பற்றால்... ஒரு அடியவர் கொண்ட கோபத்தை தணித்து, இருவரிடையே நட்புப் பாலத்தை உருவாக்க... ஈசன் எண்ணம் கொண்டதாலேயே இப்படி ஒன்று நடந்தது என்றே உணர்த்தப்படுகிறது.

இதோ... ஈசனின் அருள்விளையாடல் ஆரம்பமாகிறது.

சுந்தரர் மீது கோபத்தில் இருந்த கலிக்காமருக்கு தாளவொண்ணா சூலை நோய் வந்துதுற்றது. வலிதாள முடியாமல் தவித்தார்; துவண்டார்; “இறைவா! இது என்ன சோதனை?” என வாய்விட்டு கதறினார்.

மணாளன் படுகின்ற துயர் பொறுக்க மாட்டாத மங்கை நல்லாள், சிவாலயம் சென்று சிவனிடம் முறையிட்டு திருநீற்றினை பக்தியுடன் பெற்றுவந்து, துணைவரின் உடலெங்கும் பூசியதோடு, தண்ணீரில் நீற்றைக்கலந்து குடிக்கக் கொடுத்தாள். சற்றே மட்டுப்பட்ட நோய், மீண்டும் தலைதூக்கிட, மறுபடியும் துடித்தார் கலிக்காமர்!

இரவு வந்தது!...

வலி குறைந்தபாடில்லை; படுக்கையில் புரண்டவர் எப்போது தூங்கினாரோ?... எப்படி தூக்கம் வந்ததோ தெரியவில்லை; கண்ணயர்ந்த வேளை.. கனவுமங்கை கரம் தொட்டாள்!

கனவில் தோன்றிய ஈசன் கலிக்காமரை கருணைபொங்க பார்த்தார். “கலிக்காமா!.. உன்னை வாட்டுகின்ற இந்த சூலைநோய் விரைவில் தீரும்! அதற்கு வன்தொண்டனான சுந்தரர் உன்னை நாடிவருவார்! அவரால் தான் உன் நோய் குணமாகும்! அதுவரை நோயின் கடுமையை தாங்கும் வல்லமையை உனக்குத் தந்தோம்” என அருளி மறைந்தார்!

கனவு கலைந்ததும் துள்ளி எழுந்தார், கலிக்காமர்! “தேவி… தேவி…” என சற்றே பதட்டத்துடன் குரலெழுப்ப, அருகிலே படுத்திருந்த அவரது மனைவி பதறி எழுந்தாள்!

“சுவாமி… என்னவாயிற்று?... சொல்லுங்கள்” என்றவாறு திருநீற்றை எடுத்து வயிற்றிலே தடவினாள்! கணவன் படும் துயர், இவளுக்கு கண்ணீராய் விழுந்தது.

“ஒன்றுமில்லை… என் கனவிலே இறைவன் வந்தார்! சூலை நோய் விரைவிலே தீரும் என்றார்”

“அப்படியா?... அந்த வைத்தியநாதனே வாக்களித்தாரா?... இறைவா! உன் கருணையே கருணை” என கரம் குவித்து வேண்டினாள்.

“நோய் தீரும் என்றதும் நான் மகிழ்ந்தேன்… ஆனால் அந்த சுந்தரர் வந்து என் நோயைத் தீர்த்து வைப்பார் என்று இறைவன் சொன்னதைத்தான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை”, அவரது வார்த்தைகளில் சற்றே சினம் தெரிந்தது!

“என்ன… அந்த சுந்தரர் வந்துதான் நோய் தீர்ப்பாரா?” ஆச்சரியத்துடன் கேட்டாள்.

“ஆம்!... அந்த சுந்தரர் வந்து தான் என்னை நோயிலிருந்து மீட்பார் என்றால், என் நோய் தீரவே வேண்டாம்!”

“சுவாமி…” திகைத்தாள்!

“ஆம், தேவி! இறைவன் திருவுளம் கொண்டு என் நோயைத் தீர்க்கட்டும். அந்த சுந்தரரால் எனது நோய் தீருமென்றால் இந்நோயாலேயே நான் மடிந்து போகவும் தயார்! அந்த மகேசன் இணையடிகளைத் தழுவ இதுவே தருணம் என இன்பமோடு மரணத்தை ஏற்றுக் கொள்கிறேன்” கொந்தளித்தார் கலிக்காமர்!

“இது இறைவனின் சித்தமாயிற்றே”…

“அந்த இறைவனையே ஏவலாளாய் நடத்திய ஒருவன் என் நோய்தீர்க்க ஒருக்காலும் சம்மதியேன்”

“சரி… சாந்தமடையங்கள்! காலையில் பேசிக்கொள்ளலாம்” என ஆறுதல் வார்த்தை கூறி படுக்க வைத்தாள்!

அதே நேரத்தில்…

சுந்தரரின் கனவில் தோன்றிய இறைவன், “சுந்தரா! என் இணையடிகளை எப்போதும் மறவாமல் இருக்கும் ஓர் திருத்தொண்டன் சூலை நோயால் அவதியுறுகின்றான். நீ திருப்புன்கூர் சென்று, அவனுக்கு நீறு பூசி, நோய் தீர்த்து வா!” என அருளி மறைந்தார்.

சுந்தரர் புறப்பட்டு விட்டார், திருப்புன்கூர் நோக்கி! வன்தொண்டரான சுந்தரர் ஒரு அடியவரின் நோய்தீர்க்கும் பொருட்டு திருப்புன்கூர் செல்கிறார் என்னும் செய்தி அப்பகுதி முழுவதும் பரவியது!

சதாசர்வகாலமும் சிவசிந்தனையிலேயே திளைத்துக்

கிடக்கும் கலிக்காமருக்கு செய்தி தெரிய வந்தது. மனைவியை அழைத்தார்!

"சுந்தரர் இங்கே வருகிறாராம்; அவரை நான் என் கண்களால் பார்ப்பதே பாவம் என எண்ணுகிறேன். மீறி வந்தால் அவரை ஏதும் செய்யேன்; சிவத்தொண்டரை சிதைத்த பாவம் என்னைச் சேர வேண்டாம்! மீறி அவர் என்னிடம் வர நேர்ந்தால் நான் அவரைக் காணமாட்டேன்; இது உறுதி!" என்றார், தீர்மானமாய்!

அதே நேரத்தில்... சுந்தரர் ஊர் எல்லைக்குள் வந்துவிட்டார். நேரே கலிக்காமரின் இல்லம் நோக்கி வந்து கொண்டிருக்கிறார் என்னும் செய்தி வந்தது.

சினம் தீயாய் மூண்டது; பதறினார்; பரிதவித்தார்... உடைவாள் ஒன்றினை உறையை விட்டு எடுத்தார். அவரது மனைவி பதறி, "என்ன சுவாமி, இது?" என தடுக்க முயன்றாள்.

"என் வயிற்றில் குடிபுகுந்து வலியைக் கொடுத்து என்னை வாட்டுகின்ற இந்நோயை வயிற்றோடு கிழித்து என் வாதையை தீர்த்துக் கொள்கிறேன்; தகுதியற்ற இடத்துக்கு இறைவனை ஏவிய தரங்கெட்ட ஒருவனால் நான் சுகம்பெற ஒப்பேன்" என்றபடி, வாளை தன் வயிற்றில் பாய்ச்சி, "மகாதேவா!" என்றபடி மண்ணில் சாய்ந்தார்.

இணையிலா சிவபக்தரது உயிர் பிரிந்தது. 'அய்யோ!' என்று அலறிய அவரது மனைவி அவர் மீது விழுந்து அழுது "நீங்கள் இல்லாத உலகில் நானிருந்து என் செய்வேன்? இருவருமே ஈசனிடம் இணைந்து விடுவோம்" என அதே வாளை எடுத்து, தன் இதயத்தில் பாய்ச்ச எண்ணிய வேளையில்... வேலையாள் வந்து, "அம்மா... சுந்தரர் நம் மாளிகை வாசலில் காத்திருக்கிறார்" என கலிக்காமரின் ரத்தம் தோய்ந்த உடலைப் பார்த்து, கண்ணீருடன் சொல்ல... வாளை கீழே போட்டு விட்டு, கண்ணீரைத் துடைத்தபடி எழுந்தாள்.

"சீர்மிகு சிவனடியாரான வன்தொண்டர் சுந்தரரை காக்க வைத்தல், இறைவனையே அவமதிப்பதாகும்! அவரை உபசரித்த பின்னர் என் தலைவனோடு இணைகிறேன்" என்றபடி வெளியே வந்தாள்.

சுந்தரரை வரவேற்று ஆசனத்தில் அமரச்செய்து உபசரிக்க முயன்றாள். சுந்தரர் தடுத்து,

"அம்மையே!... கலிக்காமரின் சூலை நோய் தீர்க்க பரமன் என்னைப் பணித்தார்; எங்கே அவர்? நான் பார்க்க வேண்டும்!" என்றார்.

சற்றே தடுமாறிய அவள், "சிவக்கொழுந்தே!... என் கணவருக்கு இடரேதும் இல்லை; தங்கள் வருகையை அறிந்த மாத்திரத்திலேயே நோய் பறந்துவிட்டது! இரண்டு நாட்களுக்குப் பின்னர் இப்போதுதான் நன்றாக உறங்குகிறார்; என் பணிவிடைகளை ஏற்றபின் நீங்கள் செல்லலாம்; பரமன் அருளால் எல்லாம் நலமே!" என்றாள்.

வியந்தார் சுந்தரர்; "என்ன? நோய் தீர்ந்து விட்டதா? எல்லாம் இறைவன் செயல்! இந்த அளவுக்கு இறையருள் பெற்ற பெருமகனாரை நான் பார்த்தே ஆகவேண்டும்! எங்கே அவர்?" என எழுந்தார்.

கலிக்காமரின் மனைவி எவ்வளவோ முயன்றும் அவளால் தடுக்க முடியவில்லை!

பதட்டத்துடன் சுந்தரரை உள்ளே அழைத்துச் செல்ல... அங்கே... குடல் அறுபட்டு, ரத்தம் சொரியக் கிடந்த கலிக்காமரின் உடலைப் பார்த்து பதறிய சுந்தரர், "அய்யகோ... இறைவனின் ஆணையை நிறைவேற்ற இயலாமல் ஓர் அடியவரின் மரணத்திற்கு காரணமான நான் எங்ஙனம் இனி வாழ்வேன்" என புலம்பியவாறு, அருகிலே இருந்த குறுவாளினை எடுத்து, தன் இதயத்தில் பாய்ச்சி, உயிர் துறக்க முற்பட்டார்.

இப்படி நடக்க இறைவன் ஒப்புவானா?...

ரத்த வெள்ளத்தில் கிடந்த கலிக்காமர் இறையருளால் உயிர் பெற்றார்! சுந்தரரின் தற்கொலை முயற்சியைத் தடுத்து, அவரது கைகளைப் பிடித்தார். "எல்லாம் ஈசன் செயல்! தங்களை சிவநிந்தனை செய்தவர் என பகையாய் நினைத்தேன்; இன்று... எனக்காக உயிர்துறக்க எண்ணிய நல்லடியார் என்பதை உணர்ந்தேன்" எனக் கூற, இருவரும் கட்டித் தழுவினர்.

அங்கிருந்த அனைவரது நெஞ்சமும் இறையருளைக் கண்டு இளகியது.

சுந்தரரும், கலிக்காமரும் தோழமை பூண்டு, ஆரூர் சென்று தியாகேஸ்வரரை வணங்கியதும் அன்று முதல் இருவரும் இணைபிரியா நண்பர்களாய்

சிவத்தொண்டில் ஈடுபட்டனர்.

ஆண்டவனின் அருளை முழுமையாய்ப் பெற்ற கலிக்காமர் நாயன்மார் என்னும் சிறப்பினை பெற்றார். கணவனின் மரணத்தைக் கூட மறைத்து சிவனடியாரை உபசரித்த கலிக்காமர் மனைவி யார் தெரியுமா?

விடிந்தால் திருமணம்; துறவி வடிவில் சிவன்! மணமகளின் கூந்தலை துறவி கேட்க, சற்றும் தயங்காமல் மகளுடைய கூந்தலை அறுத்து சிவனடியாருக்குக் கொடுத்த மானக்கஞ்சாற நாயனார் தான் இவளது தந்தை! நீள் கூந்தலை சிவனடியாருக்குக் கொடுத்து முடியிழந்த மங்கையை மணந்தவர் வேறுயாருமல்ல! நமது கலிக்காமர் தான்!

தான் சோதித்தவர்களுக்கு சுகமான வாழ்வை வழங்கும் ஒப்பற்ற தலைவன் தான் சிவபெருமான் என்பதை உணர முடிகிறதல்லவா!?



ரா. பன்னீர்செல்வம்

## திருக்கோயில் திருவுலா

# தீபாவளிப் பண்டிகையோடு தொடர்புடைய கோயில்



“தேயமெல்லாம் நின்றிறைஞ்சும் திருப்பாதிரிப்புலியூர்” என்று திருநாவுக்கரசரால் பெரிதும் போற்றப்பெற்ற திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு பெரியநாயகி உடனுறை அருள்மிகு பாடலீசுவரர் திருக்கோயிலே தீபாவளிப் பண்டிகையோடு தொடர்புடைய கோயிலாகத் திகழ்கிறது.

சரியாகச் சொல்ல வேண்டுமானால் கடலூர் பேருந்து நிலையம் அருகிலும், கடலூர் புகை வண்டி நிலையம் அருகிலும் இந்தக் கோயில் கம்பீரமாக அமைந்துள்ளது. பெரிய கோயில் என்று அழைக்கப்படுகிற இக்கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது.

கடை ஞாழல், கன்னிவனம், கன்னிகாபுரம், பாடலபுரம், ஆதிமகா நகர் , உத்தாரபுரம், பாதிரிப்பதி, புலிசை, திருப்பாதிரிப்புலியூர் என பல பெயர்களைக் கொண்டது.

கன்னிவன நாதர், தோன்றாத் துணைவர், கடை ஞாழுடைய பெருமானடிகள், சிவக் கொழுந்தீசன், உத்தாரேசன், பாடலநாதன், கரையேற்றும் பிரான், பாடலீசர் என பல்வேறு பெயர்களில் அழைக்கப் பெறுகிறார்.

பெரியநாயகி - அருந்தவ நாயகி, தோகையம்பிகை, என்றெல்லாம் போற்றப் பெறுகிறார் இத்தல இறைவி.

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாம் உலகம்மை மகேஸ்வரனை அடைய சிவ பூஜையை இத்தலத்தில் செய்ததாக ஐதீகம். தாயாரின் சிவபூஜைக்காக இத்தல விநாயகர் பாதிரி மலர்களைப் பறித்துக் கொடுத்ததால் பாதிரி விநாயகர் என அழைக்கப் பெறுகிறார். பாதிரிமரமே தல விருட்சமாக அமைந்துள்ளது.

பன்னிரு வகையான வாசமிகு நறுமலர்கள் பூக்கும் அதிசய விருட்சம் பாதிரி மரம். இம்மரமே இத்தல விருட்சமானது. இம்மரத்தின் கீழ்தான் அம்பிகை அருந்தவம் ஆற்றிய போது, அம்பிகை வேண்டுவனவற்றை அள்ளித்தரும் கற்பக விருட்சமாகத் திகழ்ந்தது.

அகத்தியர், வியாக்கிர பாதர், மங்கண முனிவர் ஆகியோர் வழிபட்டதாகக் கூறுவர்.

சர்வேஸ்வரன் இத்தலத்தில் திருப்பாதிரி மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ளார். கேதார ஈஸ்வரி நோன்பு தீபாவளி பண்டிகையோடு தொடர்புடைய இத்தலத்தில் இறைவி கடுந்தவம் இருந்து இறைவனுடன் சேர்ந்த தலம்! அம்பிகைக்கு அருந்தவ நாயகி என்ற திருநாமம் உண்டு.

உலகத்து உயிர்கள் உய்ய அருட்கருணை மிகுதியால் சர்வேஸ்வரன் பராசக்தியுடன் திருவிளையாடல் புரிய திருவுள்ளம் கொண்டார்.

சொக்கட்டான் விளையாட்டில் பன்முறை பரமன் தோல்வியுற ஆனால் பரமனோ வெற்றி தமக்கே என சாதிக்க, அம்பிகையோ கோபம் பொங்க, முச்சுடரும் பொய் கூறா ஆதலின், இறைவனின் திருக்கண்களை மறைப்பேன். வெற்றி என் பக்கமாயின் அவை ஒளி தராதொழிக. இறைவன் பக்கம் வெற்றி எனில் அவை எப்போதும் ஒளி விடுக எனக் கூறி எழுந்து ஈஸ்வரனின் திருக்கண்களைத் தன் இரு கைகளாலும் மறைத்தாள் மகாசக்தி!

அகிலமே இருண்டது. அனைத்துமே ஸ்தம்பித்தது. ஈஸ்வரி விளைவுகளைக் கருதாமல் தான் செய்த செயலுக்கு வருந்தி தன் திருக்கரங்களை எடுத்தாள். எங்கும் ஒளி பரவியது.

தன் தவறுக்கு விமோசனம் வேண்ட "தேவியே! நீ பூவுலகில் நாம் எழுந்தருளியுள்ள 1008 சிவ மகா தலங்களையும் உள்ளம் உருக தரிசித்து வருங்காலத்தில், எங்கு உன் இடத்தோளும், உன் இடக்கண்ணும் துடிக்கின்றனவோ அந்த தலத்தில் எம்மை நோக்கி தவம் மேற்கொள்க. யாம் அங்கு வந்து உம்மை ஏற்றுக்கொள்கிறோம்" என்று ஈசன் அருள்மொழி கூற அம்பிகை அகமகிழ்ந்து பல தலங்களை தரிசித்து, பின் பாடலவனம் வந்தபோது, இத்தலநாதரை வழிபட்டபோது, உமையின் இடது தோளும், இடது கண்ணும் துடிக்க, இறைவன் கூறிய தலம் இதுவே என அறிந்து பாதிரி மரத்தடியிலே அருவமாய் தவம் மேற்கொண்டாள்.

"உமையே! இத்தலத்தின் பெருமையை உலகிற்கு உணர்த்தவே கயிலையில் யாம் உம்முடன் விளையாடினோம். பெரியநாயகி எனவும், அருந்தவ நாயகி எனவும் திருப் பெயர்கள் பெறுவாய்" என ஈசன் அருளிய தலம் இது.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைத்தொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

என்று திருநாவுக்கரசு சுவாமிகளை கல்லில் கட்டி கடலில் இட்ட போது பாடிய நமச்சிவாய பதிகம். கல்லையே தெப்பமாகக் கொண்டு கரை ஏறிய திருநாவுக்கரசர் பாடலீஸ்வரரை ஈன்றாளுமாய் என பதிகம் பாடிய அற்புதம் இத்தலத்தில் நிகழ்ந்துள்ளது.

கேதார ஈஸ்வரரை, கேதார ஈஸ்வரி எண்ணி கடுந்தவம் இருந்து இறைவனை அடைந்ததாக ஐதீகம்.

"திருவாய் பொலிய சிவாய நமவென்று நீறணிந்தேன்.
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே"

எனவும், திருப்பாதிரிப்புலியூர் அரனே போற்றி போற்றி எனவும் அருளாளர்கள் போற்றுகின்றனர்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்று சுந்தரர் போற்றிய திருஞானசம்பந்தர் அருளிய தேவார பதிகங்களில் இத்தலம் சிறப்பிக்கப் பெற்றுள்ளது.

கருவாய்க் கிடந்(து) உன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்து உன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே

என்று, அப்பர் என்று அன்பொழுக அழைக்கப்பெறும் திருநாவுக்கரசர் அருளிய தேவாரப் பதிகம் வாயிலாக இத்தல மாண்பை அறியலாம்.

புழுவாய் பிறக்கினும் புண்ணியா
உன் அடி என் மனத்தே
வழுவாதிருக்க வரம்தர வேண்டும்
இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்து
அருள் செய் பாதிரிப்புலியூர்
செழுநீர் புணல் கங்கை
செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே

என்று திருநாவுக்கரசர் பாடிய பதிகம் வாயிலாக



அவர்தம் சிவ பக்திநெறி சிந்திக்கத் தக்கது.

நால்வராலும், நல் அகத்தியராலும், நற்றமிழ் அருணகிரிநாதரும், தேவாதி தேவர்களும், முனிவர்களும் வழிபட்ட தலம் இது.

தாயின் பூஜைக்கு தனயன் கணபதி பூக்கள் கொடுத்து உதவியதும் இத்தல சிறப்பு!

பாதிரி மலர் ஏந்திய இத்தல விநாயகர் காதலர்களை ஒன்று சேர்த்தும், பிரிந்த கணவன் மனைவி ஒன்று சேர அருள்பாலிப்பதும் இத்தல விநாயகரின் தனிச்சிறப்பு!

தீபாவளி பண்டிகையோடு தொடர்புடைய கேதார கௌரி நோன்பு எடுப்போர் இத்தலத்தை தரிசித்தால் திருவருள் பெறலாம்.



சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர். சீனு. செந்தாமரை
கடலூர்

## மணம் வீசும் மனங்கள்

# கருணை மனம்!



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

ஒரு அமர பெரும் எழுத்தாளர், நூலாசிரியர், பத்திரிகை ஆசிரியர், கவிஞர், சொற்பொழிவாளர் என எத்தனையோ பன்முகங் கொண்டவர் அவர்.

மகான் அருணகிரிநாதரைப் பற்றி அவர் தனது நூலொன்றில் எழுதுகையில், முருக பிரானின் கருணையுள்ள அருணகிரிநாதர் தம்மை ஆண்டருளிய அதிசயத்தை சொல்ல இயலாது என்கிறார். பிறகு அம் மகான் முருகன் துதிபாடி ஆனந்தித்து இந்த பேரின்ப அனுபவத்தைத் தந்த கந்தனின் பெருங்கருணைத் திறத்தை நினைக்க நினைக்க வியப்பூட்டுகிறதே என்று கூறிவிட்டு, சிறிதும் தகுதியில்லாத தனக்கு சொல்லில் அடங்காத பேரானந்தப் பிராப்தியை தந்தருளினானே என்று எண்ணி எண்ணி அதிசயிப்பதைக் குறிப்பிட்ட அந்த நூலாசிரியர் மேலும் இப்படி அருணகிரிநாதர் கொண்ட மனநிலையை உரைக்கிறார்.

அருணகிரியார் முருகனிடம் “தெய்வமே! உன்னுடைய எளி வந்த வான் கருணையை என்னவென்று சொல்வேன்! ஒன்றுக்கும் பற்றாத நாயேனை ஆண்டருளிய அருங்கருணையை என்னளவே கண்டதாக யான் நினைத்தேன். ஆனால் உனது அருள் வரலாற்றைப் பார்த்தால், நீ எப்பொழுதுமே தாழ்ந்தவர்களுக்கு இரங்கும் கருணாநிதி என்பதை உணர்கின்றேன்.

கற்பக மலரைப் புனைந்து அதன் நிழலில் வாழும் இந்திராதி தேவர்கள் உன்னை அணுகுவதற்கு அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பெருமானாகிய நீ வேடர் கூட்டத்தில் புகுந்து அங்குள்ள வள்ளிநாயகியை வலியச் சென்று தடுத்தாண்டருளினாய்!

வெறும் காட்டு மலராகிய கூதாளம் பூவை அணிகின்றவர்கள் வேடர்கள். கற்பக மலர் புனையும் அமரர்கள் எங்கே? இந்தக் கிராத்தர்கள் எங்கே?

ஆயினும் நீ கூதாள கிராத குலத்தில் வளர்ந்த குறமகளை விரும்பிச் சென்று ஆட்கொண்டாய்! இது உனது எளி வந்த கருணையை அல்லவோ காட்டுகிறது!

எளியோனை ஆள்வதற்கு முன்பே இப்படி சௌலப்யம், சௌசீல்யம் சேகரியது உன்னுடைய கருணைத் திருவுள்ளம்" என்பதையெல்லாம் சிந்தித்து ஆனந்தித்த அருணகிரியார் "கூதாள கிராத குலிக்கு இறைவா" என தனது பாடலொன்றில் குறிப்பிடுவார்.

ராமாயண காவியத்தில் இடம்பெற்ற கணக்கற்ற சம்பவங்களில் ஸ்ரீ ராமபிரானின் கருணை மனம், பல இடங்களில் வெளிப்பட்டுள்ளது. காவிய ராமனின் மீது அதீத பக்தி கொண்ட கம்பர் அம்மனதை தம் பாடலொன்றில் குறிப்பிட்டு போற்றுவார்:

"பால் மனமுடைய
கைகேயியின் உள்ளம்
விஷ மனங்கொண்ட
மந்தரையின் சூழ்ச்சியால்
கருணை மனத்தினனான
தசரத ராமனையும்
வீர குணத்தினனான
இளவல் லட்சுமணனையும்
கற்பு மனங்கொண்ட
ஜனக புத்திரியையும்
பதினான்காண்டு
வனவாசம் புரிய
நேர்ந்துவிட
பாசமனத்தான்
தசரத சக்கரவர்த்தி
மண்ணுலகத்திலிருந்து
விண்ணுலகத்திற்கு
செல்ல நேர்ந்தது" என்று.

பகவான் எந்த அவதாரம் மேற்கொண்டாலும், அந்தந்த அவதாரங்களில் அவருடைய இயல்பான கருணைத் தன்மையை விளங்கச் செய்வார். அவர் எடுத்த கிருஷ்ணாவதாரத்தில் கண்ணன் கொண்ட கருணை மனதால் பலபேரை காத்துள்ளார், அருளியுள்ளார், அவர்கள் 'கறை' நீங்கி கரை சேர.

பகவான் கண்ணனைப் பற்றிய பல அற்புத பாடல்களைத் தந்துள்ள நாமக்கல் கவிஞர் திரு. வெ. ராமலிங்கம் பிள்ளை, கண்ணனுடைய லீலைகளைப் பற்றி வரும் ஒரு பாடலில் இப்படி எடுத்துரைக்கிறார்:

"கண்ணன் என்ற ஒரு சிறுவன் - என்
கருத்தைக் கொள்ளை கொண்ட ஒருவன்
எண்ண எண்ண அவன் பெருமை - தனை
என்ன சொல்வேன் அருமை
தாயைப்போல் எடுத்தே அணைப்பான் - உடனே
தந்தை போற் கடிந்து பணிப்பான்
மாயக்கார மணி வண்ணன் - வெகு
மகிமைக்காரன் எங்கள் கண்ணன்
கலகப் பேச்சும் அவன் வேலை - மாற்றும்
கருணை வீச்சும் அவன் லீலை
உலகம் முழுவதும் அவன் ஜாலம் - அதை
உணர்ந்து கொள்வதே சீலம்" என்று.

ஒரு புராண காவியத்தில் இடம் பெற்றுள்ள இத்தகைய சம்பவம் பகுத்தறிவு படைத்த மனிதனைப் போலவே ஐந்தறிவு கொண்ட ஒரு பறவை இனத்திற்கும் கருணை உண்டு என்பதை உலகிற்கு காட்டுகிறது.

ஒரு அடர்ந்த காட்டில் கணவன், மனைவியாய் இணைந்து பெரிய ஆலமரமொன்றில் கூடு கட்டி வாழ்ந்தன இரண்டு புறாக்கள். ஆண் புறாவிற்கு அன்று உடல் நலமில்லாமல் போனதால், பெண் புறா நீ வெளியில் போகாதே! நான் ஏதேனும் ஆகாரம் கிடைத்தால் கொணர்கிறேன் என எச்சரித்து விட்டு வான் நோக்கி பறந்தது.

பெண்புறா தன் துணைக்கு இரையை எடுத்துக்கொண்டு வரும் வழியில், அப்பக்கம் வேட்டைக்கு வந்த வேடன் ஒருவன் கண்ணில் அது பட்டுவிட, தந்திரமாய் அதற்கு வலை வீசி பிடித்து தான் வைத்திருந்த கூண்டொன்றில் அதனை அடைத்து விட்டான். அப்புறாவுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. "ஐயோ, பசியால் என் துணை துடிக்குமே" என.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வானம் இருண்டு கனமழை பெய்யத் தொடங்கி விட்டது. எங்கோ ஒரு நதி உடைப்பெடுத்துவிட, பூமியில் நீர் பெருகி ஓட ஆரம்பித்தது. வானம் மிக கருத்து விடவே காடு முழுவதும் இருளால் சூழப்பட்டு விட்டது.

மழையால் உடம்பு முழுமையும் நனையப்பெற்ற

வேடன் கைக்கூண்டுடன் கண்ணில் தென்பட்ட பெரிய ஆலமரம் ஒன்றின் கீழ், புகலிடம் பெற்று, வில், அம்புகள், கூண்டை அம் மரத்தின் கீழ் வைத்து ஒதுங்கி விட்டான்.

நாளெல்லாம் அலைந்த களைப்பு, பசி வேறு எல்லாம் சேர்ந்துவிட, வேடன் அம் மரத்தடியிலேயே ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தான். வேடன் ஒதுங்கிய மரத்தின் மேலுள்ள கிளை ஒன்றில் தான் பிடிபட்ட புறாவின் ஜோடியான ஆண் புறா கூட்டில் முடங்கிக் கிடந்தது.

“ஐயோ என் ஆருயிரே! எனக்காக இரை தேடிப்போன நீ இக் கொட்டும் மழையில் எங்கு துன்பப் படுகிறாயோ? இவ்வளவு நேரமாயும் நீ திரும்ப வராததால் எனக்கு பயமாக இருக்கு. யாராவது உன்னைப் பிடித்துக் கொன்று விட்டார்களோ? ஒரே வேதனையாய் இருக்கு. என்றுமே நான் உண்ணாமல் நீ எனக்கு முன்னால் சாப்பிட மாட்டாயே. நான் பசியால் துடிப்பது போல் நீயும் இப்போது கடும் பசியில் இருப்பாயே! என்னை உன் உயிர் போல் கருதி வாழ்வாயே. உனது பிரிவு எனக்கு கலக்கத்தை தருகிறதே” என தனது பறவை மொழியில் உரத்துக் கதறியது.

அம்ரத்தின் கீழே கூண்டில் அடைபட்டிருந்த துணைப் பறவை, அப்புலம்பலைக் கேட்டு வருந்தியவாறே “எனக்குப் பிரியமானவரே! நான் கீழேதான் இவ்வேடனின் கூண்டில் இருக்கிறேன். நம் அதிதியாக இங்கு உள்ள வேடன் பாவம் நன்கு பசித்துக் காணப்படுகிறான். விருந்தாளியாக வந்துள்ள இவன் பட்டினியாக இருப்பதால் அது அவன் இதுவரை செய்துள்ள பாவம், நம் குடும்பத்திற்கு வந்து விடும். எனவே வேடன் பசியைப் போக்க நீதான் ஏதேனும் செய்ய வேண்டும்” எனக் கூறியது.

இதைக் கவனமாகக் கேட்ட ஆண்புறா, தனது ஜோடியின், எதிரிக்கும் நன்மையைச் செய்ய ஆசைப்படும் குணம் கண்டு பெருமைப்பட்டது. உடனே ஆலமரப் பொந்தில் காணப்பட்ட சுள்ளிகள் சிலவற்றை எடுத்து உறங்கும் வேடன் அருகில் மழைத்துளி படாத இடத்தில் போட்டது. மேலும் அங்கு கிடந்த சில சிக்கி கற்கள் மூலம் தீ மூட்டி, சுள்ளிகளை ஏரிய வைத்தது.

குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த வேடன் கண் விழித்துப் பார்க்க, புறாவின் செய்கை அவனுக்கு வியப்பைத் தந்தது. நடுங்கும் அவன் உடலுக்கு அங்கு திடீரென எரிய வைக்கப்பட்ட சுள்ளிகள் மூலம் வெம்மை கிடைத்து, குளிரைக் குறைத்தது.

அடுத்த கணம் வேடன் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே ஆண்புறா, “வேடனே! என் அதிதியாகிய நீ பசியால் வாடக்கூடாது” என கருணை மனதுடன் “உன் கூண்டில் இப்பொழுது அடை பட்டுக் கிடக்கும் என் இணை புறா விரும்பியவாறே, நீ உன் பசிக்கு என்னைத் தீனியாக்கிக் கொள்” எனக் கூறியவாறே வேடன் எதிர்பாரா வண்ணம் எரியும் தீயில் பாய்ந்து விட்டது. பறவை மொழியறிந்த வேடன் பதறிப்போய், தன் செய்கைக்கு வெட்கப்பட்டு, “ஐந்தறிவு உள்ள இப்பறவை நம்மை வருந்தவிட்டு விட்டதே! சே! இனி என் உயிர் போனாலும், எவரையும் கொல்ல மாட்டேன்” என்ற விரதத்தை அங்கேயே அக்கணமே எடுத்துக் கொண்டான்.

உடனே கூண்டைத் திறந்த வேடன் பெண் புறாவை விடுதலை செய்தான். அதுவோ வேடனிடம் “அப்பனே! உனது கொடும்பசிக்கு என் துணையின் தசை போதாது. தவிர எனது ஆண் உயிரை விட்ட பிறகு இனியும் உயிர் வாழ்தலில் எனக்கு ஆசையில்லை. இந்தா எனது உடலையும் நீ சேர்த்து சாப்பிடலாம்” என்று கூறியவரே, சடாரென எரியும் தீயில் மாண்டு கிடந்த தன் இணைப் புறாவின் அருகில் எரிந்த சுள்ளித் தணலில் பாய்ந்து, எரிந்து போனது. இக்காட்சியைக் கண்டு வேடன் “என்ன கொடுமை இது! இந்தப் புறாக்களுக்கு உள்ள கருணை குணம் தன்னிடம் கொஞ்சங்கூட இல்லையே” என வெட்கமும், வேதனையும் அடைந்து எரியும் தீயில் சுள்ளிகளைப் போட்டு பெரிதாக்கி, தானும் அதில் விழுந்து கருகி இறந்து விட்டான்.

இந்தக் காட்சியைக் கண்ட இறைவன் மனம் கசிந்து காட்டிய கருணையினால், ஆண் புறா, பெண் புறா, வேடன் மூவரும் பொன்னுடல் பெற்று முக்தியைப் பெற்றனர். இப்படி எத்தனையோ அற்புத நிகழ்ச்சிகள் அன்றும் நடந்து, இன்றும் நடந்து கொண்டு ‘கருணை மனதிற்கு’ பெருமை சேர்த்துக் கொண்டு இருக்கிறது.

இவ்வுலகில் வாழும் அத்தனை மனிதர்களையும் வைரஸ் போல் பரவி ‘கருணை மனம்’ தொற்றிக் கொண்டால் உலகில் தீயவர்களே இருக்க வழியில்லை.

## இலக்கிய நேரம்

# அக மலர்ச்சியே அவசியம்!



சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர். சீனு. செந்தாமரை
கடலூர்

"முந்தானை பார்த்து முன்னூறு கவிதை எந்நாளும் எழுதும் கவிஞர்கள் கோடி" என்ற ஒருதலை ராகம் படப்பாடல் தான் இது.

'முந்தானை முடிச்சு' என்ற பெயரில் ஒரு படமும் வந்தது!

ஒரு குழந்தைக்கு தாயின் முந்தானையை பிடித்து நடப்பது சுகம்! குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை தங்களுக்குப் பிடித்த ஒவ்வொரு செயலும் சுகம் சுகமே!

அந்தக்கால பாட்டிகள் கூட முந்தானையை பிடித்து இழுத்து செருகிக்கொண்டு அமர்வதையும் நடப்பதையும் பார்க்கிறோம். அவர்களுக்கு அதில் ஒரு சுகம்!

முந்தானையைப் பிரித்து தரையில் இட்டு உறங்குவர். தமது முந்தானையைக் கொண்டு தலைப்பாகை வைத்து பாரம் சுமப்பதும் ஓர் சுகம் தான்!

எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு தமது முகம் கைகளை முந்தானையால் துடைத்துக் கொண்டு ஓய்வு எடுப்பர்.

தன் மானத்தைக் காக்க முந்தானையால் தன்னை பாதுகாத்துக் கொள்வர்.

உற்றார் உறவினர் தமது வீடுகளுக்கு வந்துவிட்டால் முந்தானையால் இழுத்து போர்த்திக் கொண்டு அடக்கத்தின் நிலைக்களனாக திகழ்வர்.

கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெய்யிலிலும் முந்தானையால் முக்காடிட்டு செல்வதும் ஓர் சுகம்.

அக மலர்ச்சியே முக மலர்ச்சி தரும்!

நிலைமை மாறினாலே மகிழ்ச்சி வரும் என்பதை விட மகிழ்ச்சியாக இருந்தாலே நிலைமை மாறி விடும்.

குற்றால அருவியின் குளிர்ச்சியை உணர குற்றால அருவியில் குளித்தால்தான் தெளிவு ஏற்படும்.

புரியாத பாடத்தை ஆசானிடம் கேட்கும் போதுதான் பாடம் புரியும்.

அழகை தரிசிக்க ரசனை வேண்டும். அழகு என்பது எங்கும் உண்டு எதிலும் உண்டு. பாவேந்தர் கூறியது: அழகின் சிரிப்பு அற்புத படைப்பு. அக மலர்ச்சியைக் கொண்டவர்களே அகிலத்தில் சிறந்தவர்கள்.

வள்ளுவப் பெருந்தகை கூட அகமும் முகமும் மலர வேண்டும் என்கிறார்.

முதலில் நம்மை நாமே ரசித்து மகிழ்ந்து, அக மலர்ச்சி பெற அக மலர்ச்சியே அவசியம்.

# சித்தர் பூமி

# குருசாமி அம்மா சித்தர்



விளைகின்ற பயிர் சந்தைக்கு வந்து, அதன்பின் சாமானியர்களுக்கு உணவாகி, உதவுவதைப் போல, எங்கோ ஓரிடத்தில் அவதாரமெடுத்து பகவானை தரிசித்து அருள்பெற்று, அதற்குப் பின்னர் ஓரிடத்தில் இருந்து தன் அருள் ஒளியைப் பரப்பி அங்கேயே ஜீவசமாதி அடைந்து பலநூறு ஆண்டுகள் கழிந்த பின்னரும் மக்களுக்கு நன்மை பயக்கும் ஞானிகளை சித்தர்கள் என்கிறோம்.

அப்படிப்பட்ட சித்தர்களில் ஒருவர் தான் குருசாமி அம்மா சித்தர் என்பவர். பெண்ணாகப் பிறந்து தன் அதீத பக்தியால் ஞானம் பெற்று... தான் பெற்ற சித்திகளால் மக்களுக்கு நல்லருள் புரிந்தவர்தான் இந்த குருசாமி அம்மா சித்தர்!

இவரது இயற்பெயரே இதுதானா? இல்லை...! இவரது பெயரோ, பெற்றோரோ, பிறந்த ஊரோ எவருமே அறிந்திருக்கவில்லை. இவரது பார்வை பட்ட உடனே பலன்கள் கிடைத்தது; தீண்டிய இடமெல்லாம் தீமைகள் அகன்றது! இவரால் பலன் பெற்றோர் தங்களை இடர்களிலிருந்து காக்க வந்த குருசாமி அம்மா என அழைக்கலாயினர்! பின்னர் அதுவே அவர் கொண்ட பெயராய் நிலைத்து நிற்கலாயிற்று.

ஆனால், இவர் வடமாநிலத்தைச் சேர்ந்தவர் என்பது மட்டும் உறுதியானது. நாடு முழுவதும் ஆலய தரிசனம் செய்து அவர் இறுதியாக வந்து சேர்ந்த இடம் புதுச்சேரிக்கு அருகில் உள்ள கண்டமங்கலம் - அரியூர் ஆகும்.

இங்கே இவர் வந்து சேர்ந்தது 1890 ஆம் ஆண்டு! அதாவது சுமார் 125 ஆண்டுகளுக்கு முன்! அரியூரில் நிலவிய அமைதியான சூழல் இந்த ஞானியின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திவிட, தனக்கேற்ற இடம் இதுதான் என அந்தப் பகுதியில் அமைந்திருந்த ஒரு மரத்தின் அடியில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டார்!

உணவு, உறக்கம் என எதைப் பற்றியும் கவலைப்படாமல் அவரது தியானம் தொடர்ந்தது. அவ்வழியே செல்கின்ற ஊர் மக்கள் இதை முதலில் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. யாரோ மனநிலை சரியில்லாமல் வழிதவறி வந்த பெண், போக்கிடம் இல்லாமல் உட்கார்ந்திருப்பதாகவே எண்ணி உதாசீனப் படுத்தினார்கள்.

வெயிலும் மழையும் அவரைத் துன்புறுத்தாமல் ஒதுக்கியதும், இவரைச் சுற்றி மட்டும் பசுமை தாண்டவமாடியதும் மக்களை யோசிக்கச் செய்தது.

“அம்மா! கண் திறந்து எங்களை பாருங்கள்” என அழைக்கத் தொடங்கினார்கள். இவர் தன் கண்திறந்து பார்த்த நாள் முதல் இந்த மக்களின் கவலைகள் பறந்தோடத் தொடங்கியது!

குடும்பப் பிரச்சனைகள், இல்லாமை, இயலாமையால் ஏற்படும் பிரச்சனைகள், உடலை வருத்துகின்ற நோய்கள் என பல பிரச்சனைகளாலும் துன்பப்பட்ட மக்களுக்கு தன் அருட்பார்வையால் தீர்வுகள் தந்தார்!

தங்களது வாழ்வை உய்விக்க வந்த இந்தத் தாய் ஒரு பெண் சித்தர் என எல்லோரும் மனமுவந்து வணங்கினர். வணங்கிய அனைவரும் வாழ்வு பெற்றார்கள். மனமுருக வேண்டி நின்றாலே மாயமாய் மறைந்த கவலைகளைப் பற்றி, இவ்வூர் மக்கள் அறிந்ததோடு அல்லாமல் புதுச்சேரி முழுவதும் இவரது புகழ் பரவியது! தினந்தோறும் மக்கள் அணி அணியாய்த் திரண்டு வந்து ஆசி பெற்றனர்.

இப்படி வருவோர் காணிக்கையாய் கொடுத்த பணத்தையெல்லாம் வறுமையில் வாடிய விவசாயப் பெருமக்களுக்கு அளித்து, கவலையைத் தீர்த்தார்.

இறையருள் கொண்டவர் என்பதால் பக்தி மேலிட்டது. கருணையுடன் உதவியதால் இவர் மீது பாசம் மிகுந்தது. இவரிடம் ஆசிபெற வந்த அனைவரும் இவரை ‘குருசாமி அம்மா’ என அன்போடு அழைக்கத் தலைப்பட்டனர்!

அதீத பக்தியும் அன்பும் கொண்ட பல பக்தர்கள் ஒன்றுகூடி, இவருக்கென்று ஓர் இடத்தை ஒதுக்கி, செப்பனிட்டுக் கொடுத்தனர். அன்றுமுதல் குருசாமி அம்மா, தன்னுடைய ஆன்ம சக்தியால் பல அற்புதங்களை நிகழ்த்தத் தொடங்கினார்!

வழக்கம் போல அன்றும் ஒரு பெருங்கூட்டமாக பக்தர்கள் அம்மாவை வழிபட வந்திருந்தனர். அன்று பௌர்ணமி தினம் என்பதால் குருசாமி அம்மாவின் முகத்தில் பிரகாசம் மிகவும் கூடியிருந்தது.

அன்று அம்மா அவர்களைக் காணவந்த பக்தர்களில் பெண்கள் அதிக அளவில் இருந்ததைப் பார்த்தார். பெண்கள் அனைவரையும் அழைத்து, “எல்லோரும் உங்களால் முடிந்த அளவு மிளகாய் வற்றல் வாங்கி வாருங்கள்” என்றார்!

சற்று நேரத்தில்... தங்கள் கைகள் நிறைய மிளகாய் வற்றலுடன் பெண்கள் வந்தனர். அவர்கள் கொண்டு வந்த மிளகாய்களையெல்லாம் அம்மியில் வைத்து அரைக்கச் சொன்னார். அனைவரும் அப்படியே அரைத்தெடுத்தார்கள்.

அதன்பின் நடந்தது தான் அதிசயம்! ஆமாம்... அரைத்து வைத்திருக்கும் மிளகாய் சாந்தினை தனது தலையிலிருந்து உடல் முழுவதும் பூசிவிடுமாறு சொன்னார், குருசாமி அம்மா!

பெண்கள் தயங்கினர்! ஒரே ஒரு மிளகாயை கிள்ளி உடலில் தடவினாலே எரிச்சல் தாள முடியாது. ஆனால் சாந்தாக அரைத்த மிளகாயை உடலில் பூசச் சொல்கிறாரே... தீயாய் எரியுமே! இதை நாம் தடவினால் அம்மாவின் உடல் என்னாகும்? இதைச் செய்யலாமா? வேண்டாமா? என்னும் யோசனையில் பெண்கள் அனைவரும் தயங்கிட, என்ன நடக்கப் போகிறதோ என்னும் எதிர்பார்ப்போடு ஆண்கள் அனைவரும் ஒதுங்கி நிற்க... மௌனம் அங்கே மயிலாசனம் போட்டு அமர்ந்தது.

மௌனத்தை உடைத்தார் அம்மா! “என்ன தயக்கம்?!... வந்து என் உடல் முழுவதும் மிளகாய் வற்றல் சாந்தை பூசுங்கள்; எல்லாம் உங்கள் நன்மைக்கே!” எனக் கூறி மெல்ல சிரித்தார்.

தயக்கம் இருந்தாலும் அம்மாவே சொல்லிவிட்டதால், பெண்கள் அனைவரும் அம்மாவின் தலை முதல் உள்ளங்கால் வரை அரைத்த மிளகாயைத் தடவினர்!

ஏதோ சந்தனக்காப்பு நடத்திய அம்மனைப் போல சிரித்த முகத்தோடு அமர்ந்து அனைவருக்கும் ஆசிகளை வழங்கினார் அம்மா! இந்த நிகழ்வு நீண்ட நேரம் நடந்தது.

பக்தர்களுக்கு ஆசி வழங்கி முடித்தபின் அனைவரும் பார்த்திருக்கும் போதே, நீராடுவதற்காக கிணற்றுக்கு அருகிலே போய் நின்றார் அம்மா!

என்ன மாயம்!?... எப்படி உள்ளே இறங்கினார் என்பதை யாராலும் யூகிக்க முடியவில்லை. கிணற்றில் இறங்கிய அம்மா... நீண்ட நேரத்திற்குப் பின் புதுப்பொலிவோடு கிணற்றிலிருந்து வெளியே வந்த அம்மா, நேராக தன் குடிலுக்குள் சென்றார். உள்ளே... சுடச்சுட பொங்கல்! கொண்டு வந்து தன் கையாலேயே அனைவருக்கும் வழங்கினார்.

எல்லோருக்கும் ஆச்சரியம்! மணிக்கணக்காக அம்மா எங்கும் எழுந்து செல்லவில்லை; மிளகாய் பூச்சு; ஆசி வழங்கல்; நீராடல் என தங்கள் கண்முன் தான் இருந்தார். பிறகு எப்படி...? யாரும் இல்லா குடிசைக்குள் பொங்கல் வைத்தது? என்னே அதிசயம்! இன்னும் என்னென்ன அற்புதங்களை இந்தத் தாய் நிகழ்த்துவார் என பிரமிப்பு மேலிட வியந்து நின்றனர்.

இது ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் தொடர்ந்தது! மிளகாய் வற்றல் அரைத்துப் பூசிய பெண்களின் குடும்பம் ஒவ்வொன்றிலும் இன்பம் மேலோங்கியது; வறுமை விலகியது! செல்வம் தேடிவந்தது!

மொத்தத்தில்... மிளகாய் வற்றலின் கடுமையையும், எரிச்சலையும் தான் ஏற்றுக்கொண்டு, தனக்கு மிளகாய் சாறு பூசிய குடும்பங்களின் துன்பத்தை மிளகாய் மூலம் தான் வாங்கிக் கொண்டு, அந்த குடும்பங்களை தழைக்கச் செய்தார் குருசாமி அம்மா!

பல நேரங்களில், இவர் கிணற்றில் இறங்கி நீராடி விட்டு, மேலே வந்து தன்னுடைய சடை முடியைத் தட்டி விடுவார். அப்போது அவரது சடை முடியிலிருந்து தெறிக்கும் நீர்த் துளிகள் யார் மீது படுகிறதோ அவர்கள், நோய்கள் நீங்கப் பெற்று, நீண்ட ஆயுளைப் பெற்றார்கள். இது மாதத்தின் ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் அரங்கேறியது!

இவை நடந்தது எல்லாமே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்! இப்படி, பல காலம் மக்களை நல்வழிப்படுத்தி நன்மைகள் புரிந்த குருசாமி அம்மா... ஒரு புனித நாளில் ஜீவசமாதி அடைந்தார்.

ஆண்டுகள் கடந்தன. கால மாற்றத்தால் அனைத்துமே மாறின. குருசாமி அம்மா ஜீவசமாதி அடைந்த இடம் கால மாற்றத்தால் புதர்மண்டி, இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அம்மாவின் அருமைகளை உணர்ந்திருந்த மக்களும் மறைந்து போயினர்!

இதே நேரத்தில் ஆங்கிலேயர்களிடமிருந்து பிரிந்து பிரெஞ்சு ஆட்சி உருவானது. அப்பிரிவினையால் அரியூர் பகுதி பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டது.

ஆங்கிலேய - பிரஞ்சு அரசுகளின் எல்லைப் பகுதியாக அரியூர் பகுதி மாறியதால் எல்லை பாதுகாப்பு காவலர்களின் கெடுபிடி அதிகமானது. இதனாலேயே ஜீவசமாதி வழிபாட்டுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை குறைந்து, இறுதியில் ஒருவராலும் கண்டுகொள்ளாமல் விடபட்டது இந்த ஜீவசமாதி!

இறுதியில், ஜீவசமாதி இருந்த இடமே தெரியாதவாறு மண்மேடாகி புதர் சூழ்ந்தது!

மகான்கள் எவராயினும் கால நேரம் கருதி, தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் உள்ளவர்கள் என்பது விதியாகும். அதன்படி, மக்களின் நலிவைப் போக்க, தான் வெளிப்பட்டே ஆகவேண்டிய கட்டாயத்தை உணர்ந்த குருசாமி அம்மா, அதற்கென தேர்ந்தெடுத்த நபர்தான் இளந்துறவி நடராஜன் என்பவர்!

இந்த நடராஜனுக்கு சொந்த ஊர், தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டை! இளமையிலேயே துறவு பூண்ட நடராஜன், ஓரிடத்தில் தியானத்தில் இருக்கும் போது "புதுச்சேரிக்கு செல்" என்று தாயின் குரல் அசரீரியாய் ஒலித்தது. "நான் எதற்கு அங்கே செல்ல வேண்டும்? அங்கே எனக்கென்ன பணி?" என்னும் கேள்வி எழுந்தது. அதற்கும் அசரீரியாய் பதில் தந்தார் அம்மா! ஆம்...

"குருசாமி கோவிலுக்கு போய் சேவை செய்" என மீண்டும் உத்தரவு வர, குருசாமி என்பவர் யார்? நான் இதுவரை அறியாத பெயராயிற்றே! அந்த கோவிலை எங்கே போய் தேடுவேன்?" என குழம்பினார் நடராஜன்.

"என் குரலே உன்னை வழிநடத்தும்" என்று அம்மையின் குரல் வழிநடத்த, அதன்படியே சென்ற நடராஜன் குருசாமி அம்மா சித்தரின் ஜீவசமாதியை கண்டுபிடித்தார்!

ஜீவசமாதியை இவர் இப்படி மீண்டும் கண்டுபிடித்தது 1947 ஆம் ஆண்டில்!

மீண்டும் ஜீவசமாதி வழிபாடு உயிர்பெற்றது. அம்மாவின் மகிமையை உணர்ந்த மக்கள் மனமுருகி வழிபாடு செய்யத் தொடங்கினர். மிளகாய் வற்றலை அரைத்து குருசாமி அம்மா சிலையில் பூசும் வழக்கம் பௌர்ணமி தோறும் தொடர்கிறது!

மிளகாய் அரைப்பதற்கென்றே இங்கு அம்மிகள் பல வைக்கப்பட்டுள்ளன. மிளகாயை அரைக்கும் போதே மிளகாயோடு சேர்த்து தங்கள் துன்பங்களும் அரைபட்டுப் போவதாக மக்கள் நம்புகின்றனர்.

தற்போது, ஒவ்வொரு வியாழக்கிழமை அன்றும் இங்கு வரும் பெண்கள் சிலையின் இரண்டு பக்கமும் மிளகாயை வைத்து வழிபட்டு, அதை அம்மாவின் பிரசாதமாக வீட்டிற்கு எடுத்துச் செல்கிறார்கள்.

இன்றளவும் பௌர்ணமி நாட்களில் மிளகாய் அபிஷேகம், மிளகாய் அரைத்து பூசுவது என்பது வழக்கமாக நடைபெற்று வருகிறது!

பக்தர்களுக்கு அருளாசி வழங்கி, வழிநடத்தும் தன்மையால் குருசாமி எனவும், தன் பிள்ளைகளைப் போல் பாதுகாப்பதால் அம்மா எனவும் பக்தர்களால் வணங்கப்பட்டு, 'குருசாமி அம்மா சித்தர்' என போற்றி வணங்கப்படும் அந்த அருட்சித்தரின் ஜீவசமாதி விழுப்புரம் - புதுச்சேரி நெடுஞ்சாலையில் அரியூரில் உள்ளது.

**அம்மா சித்தரின் அருளை அனைவரும் பெறுவோம்!**



ரா. பன்னீர்செல்வம்



# வாழ்க்கைத் துணையின் திசை மற்றும் திருமண காலம்

அனைவருக்கும் திருமண பருவம் வந்தவுடன் தனது வாழ்க்கைத் துணையைப் பற்றி தெரிந்துகொள்ள பல எதிர்பார்ப்புகள் இருக்கும். உதாரணமாக வாழ்க்கைத் துணையின் தோற்றம், கல்வி, பொருளாதாரம், வேலை மற்றும் வாழ்க்கைத் துணைவர் எந்த திசையிலிருந்து வருவார் போன்றவை. நாம் இன்று வாழ்க்கைத் துணைவர் எந்த திசையில் இருப்பார் என்பதை ஜோதிட ரீதியாகத் தெரிந்து கொள்வோம்.

ஆண் ஜாதகத்தில் 7 ஆம் பாவாதிபதி அல்லது 7 ஆம் இடத்தில் இருக்கும் கிரகம் மற்றும் சுக்கிரன் இவர்களின் பாகைகளின் கூட்டுத்தொகை எந்த ராசியின் திசையில் அமைகிறதோ அத்திசையில் பெண் அமையும்.

பெண் ஜாதகத்தில் 7 ஆம் பாவாதிபதி அல்லது 7 ஆம் இடத்தில் இருக்கும் கிரகம் மற்றும் செவ்வாய் இவர்களின் பாகைகளின் கூட்டுத்தொகை எந்த ராசியின் திசையில் அமைகிறதோ அத் திசையில் கணவர் அமைவார்.

அது சர ராசியானால் வெகு தூரத்திலும், ஸ்திர ராசியானால் பக்கத்து ஊரிலும், உபய ராசியானால் உள்ள ரிலும் வாழ்க்கைத் துணைவர் அமைவர்.

7 ஆம் அதிபதி சுபராகி, 7 ஆம் அதிபதி, சுக்கிரன் பலமாக லக்ன கேந்திரத்திலோ அல்லது லக்னாதிபதியுடனோ இருந்தால் இளமையில் திருமணம் நடக்கும். லக்னாதிபதி திரிகோணத்தில் இருந்தால் சரியான வயதில் திருமணம் நடக்கும். 7 ஆம் அதிபதி லக்னத்திலோ அல்லது 7 ஆம் பாவத்திலோ இருந்தால் விவாக வயதைத் தாண்டிய பிறகு திருமணம் நடக்கும்.

சுப கிரகங்கள் 5, 7, 9 ஆம் ராசிகளில் சஞ்சரிக்கும் காலம் திருமண காலமாகும்.

ஆம் இடத்தைப் பார்த்தாலும், 2 யை பார்த்தாலும், அவர்களின் தசா, புத்தி காலங்களில் திருமணம் நடக்கும்.

2, 7, 11 ஆம் அதிபதிகள் 2, 7, 11 ல் சஞ்சரிக்கும் காலம் திருமண காலமாகும். இவை மூன்றும் தசா, புத்தி, அந்தரமாக வரும் போது நடக்கும் திருமணம் மிகவும் மகிழ்ச்சியான திருமண வாழ்க்கையைத் தரும்.

## ராசிகளின் திசை:

மேஷம், சிம்மம், தனுசு - கிழக்கு

ரிஷபம், கன்னி, மகரம் - தெற்கு

மிதுனம், துலாம், கும்பம் - மேற்கு

கடகம், விருச்சிகம், மீனம் - வடக்கு

## கிரகங்களின் திசை:

சூரியன் - கிழக்கு

சந்திரன் - வடமேற்கு

செவ்வாய் - தெற்கு

புதன் - வடக்கு

குரு - வடகிழக்கு

சுக்கிரன் - தென்கிழக்கு

சனி - மேற்கு

ராகு, கேது – தென்மேற்கு

**ஜோதிடர் திரு. பிரபு**



# வெற்றி நம் கையில்!

குடந்தை நாராயணி

முயற்சி என்ற நான்கெழுத்து மந்திரச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு செயல்படுபவர், எந்த அரிய செயல்களிலும் எளிதில் பறிக்கும் கனி தான் வெற்றி.

மனிதனால் முடிக்க முடியாதது இந்த உலகில் எதுவுமே இல்லை. மனிதனால் மட்டும் தான் எல்லாம் முடியும்.

"புத்தியுள்ள மனிதனெல்லாம் வெற்றி காண்பதில்லை;

வெற்றி பெற்ற மனிதனெல்லாம் புத்திசாலி இல்லை." என்பார் புகழ்பெற்ற கவிஞர் ஒருவர்.

வெற்றிக்கு புத்திசாலித்தனம் அவசியம் என்றாலும், அது ஒன்று மட்டுமே வெற்றி பெற போதுமானதல்ல.

ஒரு காரியத்தைத் தொடங்கும் முன்பாக, அதன் இலக்கு என்ற லட்சியத்தில் எவரும் தெளிவாக இருக்க வேண்டும்.

டாக்டராகும் லட்சியங்கொண்டவன் மருத்துவக் கல்விதான் படிக்க வேண்டும் அவன் பொறியியல் பாடத்தை மேற்கொண்டு கற்றால் எப்படி டாக்டராக முடியும்?

மகாபாரதத்தில் ஒரு காட்சி-

பல வீரர்கள் கூடியிருக்கும் அங்கே ஒரு போட்டி நடக்கிறது. அவர்களில் பாண்டவர்களில் ஒருவனான அர்ஜுனனும் இருக்கிறான். அவன் அருகே குரு துரோணர்.

போட்டியின் நிபந்தனைபடி; கலந்து கொள்பவர்கள், அங்குள்ள மரத்தின் கிளையில் அமர்ந்துள்ள பறவையினை வில்லைப் பயன்படுத்தி அம்பால் வீழ்த்த வேண்டும். துடிதுடிப்புடன் அங்கு நிற்கும் அர்ஜுனனிடம் துரோணர் கேட்கிறார்.

"அர்ஜுனா! என்ன பார்க்கிறாய்? என்னையா?"

"மரத்தையா பார்க்கிறாய்?"

"இல்லை குருவே"



“அந்த மரத்தின் மீது உட்கார்ந்துள்ள பறவையைக் காண்கிறாயா?”

“இல்லை, இல்லை”

“வேறு எதைப் பார்க்கிறாய்?”

“குருவே! பறவையின் கண்ணை மட்டுமே பார்க்கின்றேன்”

“அப்படியா! எடு வில்லை. விடு அம்பை”

அடுத்த கணம் அர்ஜுனன் விட்ட பாணம், பறவையின் மீது சட்டென்று பாய, பொத்தென்று விழுகிறது அவன் இலக்கான பறவை பூமியில்!

திட்டமிடல் என்பது எடுத்த காரியம் வெற்றி பெற அவசியம். மேற்கொண்ட பணியின் சாதகம், பாதகம் இவற்றை தெளிவாக அறிந்து அழகாகத் திட்டமிடுவது அத்தியாவசியமாகும்.

பெரிய நதியின் குறுக்கே அணை கட்ட முனைகையில்-

நீரின் கொள்ளளவுக்கு ஏற்ப மதில் சுவர்கள்,

நீரை அடக்கி வைக்கப் பயன்படுத்தப்படும் வெளிக் கண்மாயிகள், அதனுடன் இடம்பெறும் கதவுகளின் உறுதித்தன்மை,

நதியின் நீர்வரத்து அதிகமாக அல்லது குறைவாக இருக்கும் காலங்கள்,

அணையினால் சாகுபடியாகக் கூடிய விளை நிலங்களின் எண்ணிக்கை,

இயற்கை சீற்றத்தினால் வெள்ளம் ஏற்பட்டு அதனால் அணை உடைபடும் அபாயம் நிகழ்ந்தால் எடுக்கப்பட வேண்டிய முன், பின் ஏற்பாடுகள், இவற்றை கருத்தில் கொண்டு திட்டப்பணியை ஆராய வேண்டும். இல்லாவிடில் பாதிக்கப்படும் அணையின் வெள்ளத்தால் பல உயிர்களை இழக்க நேரிடும்.

ஒரு நிறுவனத்தின் தலைவராக உள்ளவர், ஆற்ற வேண்டிய காரியத்தை, யாரிடம் ஒப்படைப்பது என்பதில் மிகத் தெளிவுடன் இருக்க வேண்டும்.

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்” என்பார் உலக மறை நாயகன் திருவள்ளுவர். எத்தொழிலை எவன் செய்யத்தக்கவன் என்று ஆராய்ந்து, தக்கவனிடத்தில் அதனை கொடுக்க வேண்டும் என்பது இக்குரலின் பொருள்.

மனிதனின் மனம் எதையெல்லாம் சிந்தித்து நம்புகிறதோ, அதையெல்லாம் உண்மையிலேயே சாதித்து விடும் இயல்பு கொண்டது. மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பது நமது வழக்கில் உள்ள முதுமொழி அல்லவா!

அகத்தூண்டல் சிந்தனையை மாற்றும்;

செயல் தூண்டல் செய்கையை மாற்றும்.

இது இரண்டுமில்லாத மனிதன் இரண்டும் கெட்டவனாகி எடுத்த பணியில் நிச்சயம் தழுவுவது தோல்வியைத்தான்.

இஷ்டப்பட்ட வேலையை கஷ்டப்பட்டுச் செய்ய உடற்சோர்வோ, மனச்சோர்வோ எவரையும் பற்றாது.

வெற்றி என்பது வெறும் அதிர்ஷ்டத்தினால் வராது. கடின உழைப்பும் பயிற்சியின் மூலமே அதனை அடைய முடியும் என்பதனை அன்றைய, இன்றைய சாதனையாளர்கள் நிரூபித்துள்ளார்கள்.

கொண்ட உழைப்பில், காரியத்தில் நம்பிக்கை என்பது ஒரு முக்கிய அங்கமாகும்.

மழை வேண்டி, ஒரு ஆன்மீகப் பெரியவர் தலைமையில் ஒரு திரண்ட மைதானத்தில் பெரிய யாகம் ஒன்று நடக்கிறது. ஆயிரக் கணக்கானவர்கள் கூடிய அக்கூட்டத்தில் பனை ஓலையால் தயாரிக்கப்பட்ட குடை ஒன்றுடன் ஒரு சிறுவனும் இருக்கிறான்.

யாகம் முடிந்து ஆன்மீகப் பெரியவர் உரையாற்றுகையில் "நாம் இங்கே வருண ஜெபம் செய்யக் காரணம், அந்த ஜெபம் மூலம் உடனே மழை கொட்டும் என்பதாக இருக்க, அதில் அதிக நம்பிக்கை கொண்ட அந்தச் சிறுவன் மட்டும், முன் உணர்வுடன் குடையுடன் வந்திருக்கிறான். ஆனால் அவனைத் தவிர, நீங்கள் யாருமே குடையுடன் வரவில்லை. செய்யப்பட்ட வேள்வியின் பயனாக, மழை கொட்டினால், அதற்கு நம்பிக்கை கொண்ட சிறுவனே காரணமாக அமையுவான்" என்று கூற கூட்டமே வெட்க உணர்வுடன் தவித்தது.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு

எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பது குறள்.

உழைப்பைப் பற்றி சொல்கையில், நிச்சயம் இச்சம்பவத்தை நினைவுக்குக் கொண்டுவர வேண்டியுள்ளது.

ஒரு சமயம் முன்னாள் பாரதப் பிரதமர் அமரர். பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களை, நண்பர் ஒருவர், "தாங்கள் வெற்றி பெறக் காரணமாக அமைந்தவை எவைகள்?" என ஆவலுடன் கேட்டபோது, அந்த ரோஜாவின் ராஜா புன்முறுவலுடன் பதிலளித்தார்.

"உழைப்பு

உழைப்பு

உழைப்பு என்ற மூன்றுமே" என.

இலக்கை அடைய ஒருவர் முயற்சியைத் தொடங்குகையில், அவர் மீது பொறாமையுணர்வு கொண்டவர்கள் வீசும் ஏளன, கேலி வார்த்தைகளைச் சந்திக்க நேரிடலாம். அதற்காக வருந்தாது அவற்றை புறந்தள்ளி எடுத்த செயலில் முன்னேற வேண்டும். காய்த்த மரத்தின் மீது தானே கற்கள் வீசப்படுகின்றன!

மேற்கொண்ட பணியில், நமது கவனக் குறைவால் சில குறைகள் வரலாம். இதனை 'சோதனை' என்றும் குறிப்பிடுவதுண்டு. அக்குறைகள் எதனால் வந்தது என்பதை ஆராய்ந்து அதனை நீக்க, தடைகற்களான அவைகள் வெற்றிப் படிக்கட்டுகளாகிவிடும்.

கடமை பொறுப்புடன் தொடர்ந்து செயல்படும் விடா முயற்சி, எடுத்த பணியில் வெற்றிக் கொடி நாட்ட இன்றியமையாததாகும்.

உலகம் போற்றும் விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன் எங்கும் ஒளிவீசும் மின் விளக்கை கண்டுபிடிக்க எத்தனை முறைகள் முயற்சித்தார் தெரியுமா?

நிச்சயம் உங்கள் புருவம் மேலே உயரும்! இதனையறிய, 10000 தடவைகள் தொடர் முயற்சி செய்து அதில் வென்று, நம் இதயங்களில் ஒளியாகத் திகழ்கிறார் அவர்.

காரிய வெற்றியில் உறுதி பூணும் எவரும் தோல்வியைத் தழுவ வழியே இல்லை.

தன்னாட்டு மக்கள் வெள்ளையனின் பிடியிலிருந்து சுதந்திரம் பெற பல்லாண்டுகள் சிறைவாசம், உண்ணாவிரதம் போன்ற எண்ணற்ற அறப்போராட்டங்கள், குடும்பத்தை பிரிந்து வாழும் தியாகங்கள் போன்றவற்றை முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு விடாமுயற்சியும், உழைப்பையுமே தனது மூச்சாக வைத்து அற்புதச் செயல்கள் புரிந்த இந்தியத் தெய்வத் திருமகன் மகாத்மா காந்தி அவர்கள் நம்மால் என்றும் போற்றப்படுகிறார் அல்லவா?

அந்த தியாகச் சீலரை மகாகவி சுப்பிரமணிய பாரதி அவர்கள் இப்படி போற்றிப் புகழ்கிறார்-

"வாழ்க நீ! எம்மான், இந்த வையத்து நாட்டிலெல்லாம்

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்

பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை

வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ வாழ்க. வாழ்க!” என.

விடா முயற்சியை விளக்கும் ஒரு சிறு நிகழ்ச்சி:

புகழ்பெற்ற ஆங்கிலேயரான வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் வழக்கம் போல் தன் பணிகளில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார். அன்றும் ஒரு பிரபல ஆங்கில பத்திரிக்கையின் செய்தியாளர் சர்ச்சிலை ‘இன்டர்வியூ’ செய்ய நீண்ட நேரமாகக் காத்திருந்து அறையின் வெளியே அமர்ந்திருக்கிறார்.

செய்தியாளரை, சர்ச்சில் உத்தரவிட்டபடி, அவரது உதவியாளர் அறையின் உள்ளே அழைத்துச் செல்கிறார். பரஸ்பர வணக்கங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டவுடன் சர்ச்சில் வந்தவரிடம் “மிஸ்டர் நீங்கள் அதிர்ஷ்டசாலி! ஏனென்றால் இதற்கு முன்பாக வந்த நிருபர்களை நான் பார்க்காமலேயே அனுப்பி விட்டேன்” என கர்வமாகச் சொன்னார்.

‘அப்படியா!’ என்ற செய்தியாளர் “இதுவரை தாங்கள் ஒன்பது பேர்களை சந்திக்காமல் விட்டீர்கள் அல்லவா!?” எனக் கேட்கவே

வியப்படைந்த சர்ச்சில் “என்ன இவ்வளவு சரியாகச் சொல்கிறீர்களே!” என்று கூறியவுடன் அமைதியாக அந்த செய்தியாளர் சொன்னார்; “அந்த ஒன்பது ஆளும் நானே! இன்று எப்படியாவது உங்களை எங்கள் பத்திரிக்கைக்காக நேர்காணல் புரிய வேண்டும் என்பதே எனது இன்றைய உறுதியாகும்” என.

வெற்றி எதில் உள்ளது?

நாம் சாதிக்கும் விஷயங்களிலா? இல்லை…இல்லை… அதனைச்

சாதிப்பதில்தான்!

கல்வி கற்கும் மாணவ, மாணவிகள் தங்கள் தேர்வில் தோற்றுவிடுவோமோ என்ற ஐயம், பயத்திற்கு என்றும் இடந்தரலாகாது. அவ்வுணர்வுகள் ஓடும் குதிரையின் வேகத்தைக் குறைப்பது போலாகும். பந்தயத்தில் பங்கேற்று ஓடிக் கொண்டிருக்கும் வீரர்கள் தங்கள் பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது என்பார்கள்.

எல்லாத் துறைகளிலும் குறிப்பாக கல்வியில் ஆண்டு தோறும் மாநிலத்தில் முதன்மையாக இடம் பெற்று வருபவர்கள் மாணவிகள் தான். காரணம் அவர்கள் மாணவர்களை விட தங்களை படிப்பில் அர்ப்பணித்துக் கொள்வதுடன், மேற்கொள்ளும் உழைப்பும் தான்!

கல்வி மட்டுமல்ல, சமூகம், அரசியல், தொழிற்துறைகள், பொதுப்பணிகள் என இவைகளிலும் வெற்றிகளைக் குவித்து, முதலிடம் பெற்று, வெற்றி வாகை சூடியுள்ளார்கள். சூடியும் வருகிறார்கள் பெண்கள்! பெண்மணிகள்!

அதனாலேயே “ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் திகழ்வாள்” என்று பேசப்பட்டு வருவது உண்மையாகிறது.

“நிச்சயம் இதில் வெல்வேன்” என நமக்குள் கூறிக் கொள்வது கர்வம் தவிர்த்த தன்னம்பிக்கையாக இருக்க வேண்டும்.

வெற்றிக் கொடியை நாட்டியவர்கள் எல்லாவற்றையும் தான் அறிந்திருந்தாலும், பணிவாக எதையும் தான் அறிந்திலேன் என்று தான் கூறுவார்கள்.

எந்தச் சூழ்நிலைகளிலும் புன்னகை பூண்ட அவர்கள், பிறரின் கருத்துக்களை கேட்பவராயும், அன்புடன் பழகும் மனப்பாங்கை பெற்றவர்களாகவும் இருப்பார்கள். பிறரை புரிந்து கொண்டு, அவர்களையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு செயல்படும் வெற்றி வீரர்கள் நம் நாட்டின் ஒற்றுமைக்கும், வளத்துக்கும் தேவையானவர்கள்.

மக்களின் ஊக்கத்தின் அளவிற்கு ஏற்பவே, அவர்களுடைய உயர்வு அமையும் என்ற திருக்குறளின் கருத்துக்கேற்ப, செயல்படுவோம், வெற்றி பெறுவோம்!

ஏனென்றால், வாழ்க்கையின் வெற்றி நம் கைகளில்தானே உள்ளது!



# கடன் பிரச்சனைகளில் விடுபடவும், கடனை திருப்பி செலுத்தவும் உகந்த நாட்கள்



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

கடனை வாங்குவதற்கும், வாங்கிய கடனை திருப்பி செலுத்துவதற்கும் ஏற்ற நாள், நட்சத்திரம், திதி மற்றும் நேரம் வேதத்திலும் ஜோதிடத்திலும் சொல்லப்பட்டுள்ளது. சிலர் கடன் வாங்கக்கூடாத நாள் மற்றும் நட்சத்திரத்தில் கடனை வாங்கி கடன் பிரச்சனையால் அவதி படுபவர்களும் உண்டு. கடன் சுமையிலிருந்து விடுபடவும் திருப்பி செலுத்தவும் உகந்த நாட்களை கீழே காணலாம்.

1. அன்னை பார்வதி தேவியும் சந்திரனும் திங்கள் கிழமையை ஆள்பவர்கள் என்பதால் திங்கள்கிழமையில் கடனை வாங்குவதற்கும் கடனை திருப்பி செலுத்துவதற்கும் திங்கள்கிழமை உகந்த நாள் ஆகும்.

2. கடனை திரும்ப செலுத்துவதற்கு செவ்வாய்கிழமை சிறந்த நாள் ஆகும். அதே நேரத்தில் புதிய கடனை வாங்குவதற்கு செவ்வாய்கிழமையை தவிர்க்க வேண்டும்.

3. புதன்கிழமையை ஆளும் கிரகம் புதன் ஆவார். கடன் வாங்குவதற்கும் கடன் கொடுப்பதற்கும் புதன்கிழமையை தேர்ந்து எடுக்கக்கூடாது.

4. வியாழக்கிழமையை ஆளும் கிரகம் குரு பகவான் ஆவார். குரு தனத்தை குறிக்கும் கிரகம் என்பதால் தனம் உள்ளே வரலாம் அதாவது கடன் வாங்கி தனம் குடும்பத்திற்குள் வரலாம் ஆனால் கடனை திருப்பி அடைப்பதனால் தனம் வெளியே போகக்கூடாது அதாவது கடனை அடைக்க கூடாது.

5. சுக்கிரன் வெள்ளிக்கிழமையை ஆளும் கோள் என்பதால் கடன் வாங்குவதற்கும் வாங்கிய கடனை அடைப்பதற்கும் உகந்த நாள் ஆகும்.

6. சனிக்கிழமை சனி பகவானால் ஆளப்படுவதாலும் சனி மந்தன் என்பதால் கடன் அடைபடுவதை மந்தப்படுத்துவார் என்பதாலும் சனிகிழமைகளில் கடன் கொடுக்கவோ கடன் வாங்கவோ கூடாது.

7. ஞாயிற்றுகிழமையை ஆளும் கிரகம் சூரியன் என்பதாலும், சூரியன் ஒரு வெப்பத்தையும் ஒளியையும் உமிழும் கோள் என்பதாலும், பணம் சம்மந்தப்பட்ட எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களும் வைத்துக்கொள்ள கூடாது.

# மூலிகை வைத்தியம்

**ஆர். வைத்தியநாத சுவாமி**

அவ்வப்பொழுது நாம் சந்திக்கும் சின்னச்சின்ன உபாதைகளுக்கு தீர்வாக இந்த வீட்டு வைத்திய முறை பலன் அளிக்கும்.

சில காரணங்களால் வரும் கண் எரிச்சல், வீக்கம் போன்ற பாதிப்புகளுக்கு நிவாரணமாக இவை அமையும்.



இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பாக இரண்டு சொட்டுகள் விளக்கெண்ணையை சொட்டி வர, கண் எரிச்சல் அகலும்.

அருகம்புல்லிலிருந்து சாறு எடுத்து, அதனை கண் இமைகளில் தடவ, எரிச்சலும், கண் வலியும் இருந்தால் நிவாரணம் கிடைக்கும்.

கால் ஆணி பாதிப்பு வந்தால் நடக்கும் போது வலி எடுக்கும். இதற்கு குப்பைமேனி இலை, மஞ்சள் இரண்டையும் மசிய அரைத்து விட்டு காலில் பூசிவர, அது நிவாரணம் தரும்.



பப்பாளி இலைக் காம்புகளிலிருந்து வெளிவரும் பாலை இரவில் கால் ஆணி மீது பூசுவதும் மற்றொரு வைத்திய முறை, கால் ஆணி உபாதைக்கு.

கால் தசைப்பிடிப்பு உள்ளவர்கள் கடுகு எண்ணெயில், சில இஞ்சி துண்டுகள், கொஞ்சம் மிளகுப் பொடி, சீரகம் இவற்றைக் கலந்து விட்டு, அக்கலவையை மிதமாக சூடாக்கி, தசைப்பிடிப்பு பகுதியில் பூசினால் நல்ல பலன் கிடைக்கும்.

தலைவலி அவதி நமக்கு சர்வ சாதாரணமாக வரக்கூடியதே. கண்பார்வை குறைபாடு அல்லாத

நிலையில் வரும் இதர தலைவலிகளுக்கு இதோ சில டிப்ஸ்கள்.

இலவங்கப்பட்டை தைலத்தை நெற்றியில் தடவலாம்.



சாதாரணமாக கிடைக்கக்கூடிய வேப்பங் கொட்டையின் பருப்பை எடுத்து, தண்ணீர் விட்டு நன்கு அரைத்து விழுதானவுடன் நெற்றியில் பூசினால் தலைவலிக்கு குட்பை சொல்லலாம்!

அன்றாடம் தொடர்ந்து தாக்கும் தலைவலி ஓட, மருதாணி இலைச் சாற்றை இரண்டு வேளைகள் குடிக்க வேண்டும்.

இன்னொரு எளிய வழி, வெற்றிலையை இரண்டு துண்டாக நீளவாக்கில் வெட்டி, அதனை தணலில் வாட்டி விட்டு, நெற்றிப் பொட்டில் கொஞ்ச நேரம் வைத்துக் கொள்ளவும்.



தீப்புண் உண்டாகி விட்டால் புண்பட்ட இடத்தை மருதாணி இலைக் கஷாயத்தால் கழுவி வந்தால் (சில நாட்கள்) காயம் ஆறிப்போகும்.

அடுத்து ஒரு நிவாரணி, தேங்காய் எண்ணையில் கற்பூரத்தை பொடி செய்து போட்ட கலவையை நெற்றியில் பூசி விட, தீப்புண் அவஸ்தை 'போயே போச்சு'! என்பார்கள்.

மற்றொரு தீப்புண் நிவாரணி, வாழை மட்டை, அரசம் பட்டை இரண்டையும் தேங்காய்ப்பாலில் விழுதாக அரைத்து கொப்புளங்களில் பூசி வரவேண்டும்.

தூக்கம் மனிதனுக்கு வரம். தூக்கமின்மை ஒரு சாபம் போன்றதே!

# நவராத்திரியில் துர்க்கை வழிபாடு!!



நவராத்திரியே துர்க்கையின் முக்கியமான வழிபாடாகும்.

துர்க்கை என்றால் வடமொழியில் "வெல்லமுடியாதவள்" என்றும், தமிழில் வெற்றிக்கு உரியவர் என்றும் பொருள்.

அன்னை பராசக்தியின் அருளைப் பெற்றிட, சக்தியின் ஒன்பது வடிவமான நவதுர்க்கை வழிபாடு மிகவும் விசேஷமானது. நவதுர்க்கை என்பது துர்க்கையின் ஒன்பது வடிவங்களைக் குறிக்கும். 'நவ' என்றால் ஒன்பது என்பதாகும்..

பல்வேறு வேதங்களிலும், வராஹ புராணத்திலும் துர்க்கைக்கு ஒன்பது வடிவங்கள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. நவதுர்க்கைகளின் பெயர்களும், அவரது அம்சங்களும் ஸ்லோகமாக களபிரம்மதேவரால் வராஹ புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

நவராத்திரி விழா புரட்டாசி மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி வரை கொண்டாடப்பட்டு அடுத்த நாள் விஜயதசமியுடன் முடிகிறது.

அன்னை பராசக்தியை முதல் மூன்று நாட்களில் துர்க்கையாகவும், அடுத்த மூன்று நாட்களும் மஹாலக்ஷ்மியாகவும், இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதி தேவியாகவும் வழிபடுகிறோம். அதே சமயம் நவதுர்கா என்பது துர்கா தேவியின் ஒன்பது வடிவங்களை குறிக்கும் சைலபுத்ரி, பிரமசாரிணி, சந்திரகாண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயினி, காளராத்திரி, மகாகௌரி, சித்திதாத்திரி எனும் இந்த ஒன்பது வடிவங்களையும் தினம் ஒரு வடிவத்தில் பூஜிப்பது நமக்கு மிகப்பெரிய பலன் தரும்.

"ப்ரதமம் சைல புத்ரீ ச த்விதீயம் ப்ரஹ்மசாரிணீ!

த்ருதீயம் சந்த்ரகண்டேதி கூஷ்மாண்டேதி சதுர்த்தகம் !!

பஞ்சமம் ஸ்கந்தமாதேதி ஷஷ்டம் காத்யாயனீதி ச!

ஸப்தமம் காலராத்ரீதி மஹாகௌரீதி சாஷ்டமம் !!

நவமம் ஸித்தி தாத்ரீ ச நவ துர்கா ப்ரீகீர்த்திதா!

உக்தான்யேதானி நாமானி ப்ரஹ்மணைவ மஹாத்மனா.!!"

இதுவே நவதுர்க்கை தியான சுலோகம் ஆகும்

நாளுக்கு ஒரு வடிவத்தில் ஒன்பது நாட்களும் வணங்குவதால் சகல நன்மைகளும் நம்மை வந்தடையும்.

சிவபெருமான் திருநடனம் புரிந்தபோது, அவர் தன் கால் விரல்களால் வரைந்த கோலங்களிலிருந்து நவராத்திரி தேவியர் தோன்றினர் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த ஒன்பது தேவியருக்கும் வடநாட்டில் குறிப்பாகக் காசி மாநகரில் கோவில்கள் உள்ளன. வட இந்தியாவில் நவராத்திரி தினங்களில் நவதுர்க்கைகளில்

ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நாளும் வழிபடுவது வழக்கமாக உள்ளது.

நவதுர்க்கைகளை நவராத்திரி தினத்தில் வழிபட்டு அன்னையின் அருளை பெற்றிடுவோம்.



## 1. சைலபுத்ரி:

நவராத்திரியில் நவதுர்கையை வழிபடும் போது முதல் நாளில் சைலபுத்ரி துர்க்கையை வழிபடுவது வழக்கம். இவரை மலைமகள், பார்வதி, ஹேமாவதி, பவானி தேவி, தாட்சாயிணி என்றும் அழைப்பர். நம் உடலில் உள்ள ஒன்பது சக்கரங்களில் முதல் சக்கரமாக, மூலாதாரமாக விளங்குகின்றார். யோகிகள் தங்களுடைய யோக சாதனைகளை இவரை வணங்கியே துவங்குவர். இவர் நந்தியை வாகனமாக வைத்துக் கொண்டு ஒரு கையில் சூலமும், ஒரு கையில் தாமரையும் கொண்டு அருள் புரிகிறார்.

### தியான மந்திரம்:

“வந்தே வாஞ்சித லாபாய சந்த்ரார்த்த க்ருத சேகராம் ’

வ்ருஷாரூடாம் சூலதராம் சைல புத்ரீம் யசஸ்விநீம் ””

“விருஷபம் (நந்தியின்) மேல் பவனி வருபவளும், சூலத்தை ஆயுதமாகக் கொண்டவளும், மூன்றாம் பிறையைத் தன்னுடைய கிரீடமாகக் கொண்டவளும், பக்தர்களுக்கு வேண்டிய வரத்தைத் தரும் ஒப்புயர்வற்ற ஷைல புத்ரி தேவியை வணங்குகின்றேன்”

இவரை வழிபடத் திருமணத்தடை நீங்கும் மற்றும் ஆஸ்துமா, நீரிழிவு நோய்கள் தீரும். உத்தரப் பிரதேசத்தில் உள்ள மா்ஹின காட் என்னும் இடத்தில் சைலபுத்ரீக்கு தனிக்கோவில் இருக்கின்றது.



## 2.பிரம்ஹசாரிணி:

நவராத்திரியின் இரண்டாம் நாள் வழிபட வேண்டியவர் பிரம்மசாரிணி. ‘பிரம்ம’ என்றால் தபஸ் அதாவது தவம் செய்தல் என்று பொருள். நமது உடல் சக்கரங்களில் ‘ஸ்வாதிஷ்தானத்தில்’ இருப்பவர். மிக எளிமையாகக் காட்சி தரும் இந்த பிரம்மசாரிணியின் வலக்கையில் ஜபமாலையும், இடக்கையில் கமண்டலமும் கொண்டு அருள்பாலிக்கிறார். இவருக்குத் தனிப்பட்ட வாகனம் இல்லை

### தியான மந்திரம்:

ததாநாகர பத்மாப்யாம் அக்ஷ மாலா கமண்டலூ’

தேவி ப்ரஸ்தது மயி ப்ரம்ஹசாரிணி அநுத்தமா ”

“கமண்டலமும், தண்டமும் தன் தாமரைக் கரத்தில் ஏந்தியவளும் பிரம்மஸ்வரூபம் அடையும் எண்ணம் கொண்டவளுமாம் அன்னை பிரம்மச்சாரிணி எனக்கு அருள்புரிய வேண்டும்.”

இவரை வழிபட மன அமைதி, மகிழ்ச்சியான வாழ்க்கை ஆகியவைகளை கொடுக்கிறார் மற்றும் சோம்பலை நீக்கி சுறுசுறுப்பைத் தருகின்றார்.

இவருக்குக் காசியில் “துர்க்காகாட்” படித்துறையில் கோவில் உள்ளது. இதைத்தவிரக் கன்னியாகுமரியில் அன்னை பிரம்மச்சாரிணியாக அருள்பாலிக்கிறார்.

## 3.சந்திரகாண்டா:

நவராத்திரியின் மூன்றாம் நாளில் வழிபட வேண்டியவர் சந்திர காண்டா. ‘சந்திர’ என்றால் நிலவு. ‘காண்டா’ என்றால் மணி என பொருள். சந்திர பிறை இவள் முன் நெற்றியில் மணி போல் இருப்பதால் இவரை ‘சந்திர காண்டா என அழைக்கப்படுகின்றார். இவர் உடல் சக்கரங்களில் ‘மணிபூர’ சக்கரத்தில் இருப்பவர். முக்கண்களைக் கொண்டு தலையில் பிறைச்சந்திரனைச் சூடிக்



கொண்டு, பத்து கரங்கரங்களிலும் பல்வேறு ஆயுதங்களை ஏந்தியவண்ணம் புலி மீது அமர்ந்து கொண்டு அருள்பாலிக்கின்றார்.

### தியான மந்திரம்:

பிண்டஜப்ரவராரூடா சண்ட கோபாஸ்த்ரகைர் யுதா ’

ப்ரஸாதம் தநுதே மஹ்யம் சந்த்ர கண்டேதி விஸ்ருதா ”

“புலி வாகனத்தில் வந்து சுண்டனைப் போரில் வென்றவளான சந்த்ரகாண்டா என் மீது கருணை பொழிய வேண்டும்”

சந்திரகாந்தக் கல் எப்படி சந்திரனின் குளுமையைத் தன்னுள் வாங்கிக் கொண்டு நீரைப் பொழிகின்றதோ அதேபோல சந்த்ரகாண்டா நமது வினைகளை தன்னுள் வாங்கிக் கொண்டு கருணை நீரைப் பொழிகின்றார்.

இவரை வணங்கினால் செய்த பாவங்கள் அழிந்து சுபிட்சத்தையும் தந்தருள்வார். மற்றும் வாழ்வில் துன்பம், தடைகள் நீங்கி வளம் பெறுவார்கள்.

இவருக்குக் காசியில் காசியில் சௌக் கடைத்தெரு அருகே கோவில் உள்ளது. மேலும், உத்தரப்பிரதேசத்தில் உள்ள சித்திரகந்த குல்லி என்னும் இடத்தில் சந்த்ரகாண்டாவுக்கு தனிக்கோவில் இருக்கிறது.

### 4.கூஷ்மாண்டா:

நவராத்திரியின் நான்காம் நாளில் வழிபட வேண்டியவர் கூஷ்மாண்டா. இந்த பெயர் மூன்று பகுதிகளைக் கொண்டது. கு, உஷ்மா, ஆண்டா என்ற இம்மூன்றும் முறையே சிறிய, வெப்பமான, உருண்டை என்ற பொருள் கொண்டது. இதைச் சேர்த்தால் சிறிய வெப்பமான உருண்டையான உலகைப் பொருளாகக் கொள்ளலாம். இதனால் கூஷ்மாண்டா என்றால் உலகைப் படைத்தவள் என்ற பொருள் வரும். உடல் சக்கரங்களில் இவர் ‘அனாஹத’ சக்கரத்தில் இருப்பவர்.

இவர் எட்டு கரத்துடன் சிம்மத்தின் மீது அமர்ந்திருப்பவர், எட்டாவது கரத்தில் கலசத்துடன் காட்சி தருகிறார். இக்கலசம் அஷ்ட சித்தியையும், நவ நிதியையும் பக்தர்களுக்குத் தருபவர்.



### தியான மந்திரம்:

ஸுராஸம்பூர்ண கலசம் ருதிராப்லுத மேவசம்’

ததாநா ஹஸ்த பத்மாப்யாம் கூக்ஷ்மாண்டா சுபதாஸ்துமே”

“தன் தாமரை போன்ற திருக்கரங்களில் இரு கலசம் ஏந்தி, தனது சிரிப்பால் உலகைச் சிருஷ்டித்து, அதைப் பரிபாலனம் செய்பவளாகிய தேவி கூஷ்மாண்டா எனக்கு எல்லா வளங்களையும் வழங்குவாயாக.”

கூஷ்மாண்டாதேவியை வணங்கினால் பாவம் நீங்கி இன்பம் பெறலாம். இவரை வணங்குவோர் உடல், மன வலிமை பெறுவர்.

இவருக்கு உத்தரப்பிரதேசத்தில் உள்ள கான்பூர் நகரத்தில் தனிக்கோவில் உள்ளது.

### 5.ஸ்கந்தமாதா:

நவராத்திரியின் ஐந்தாம் நாளில் வழிபட வேண்டியவர் ஸ்கந்தமாதா. ஸ்கந்த என்றால் கந்தன், மாதா என்றால் தாய் ஸ்கந்தன் தாயாகக் காட்சி தருவதால் ஸ்கந்த மாதா என்று இவரை அழைப்பார்கள். ஸ்கந்தமாதாவை விசுக்தி சக்கரத்தில் சித்தத்தை வைத்துத் தியானித்துப் பூஜிக்க வேண்டும். விசுத்தி என்றால் தூய்மையானது என்று பொருள்.

நான்கு கரங்களை உடைய ஸ்கந்த மாதா இரண்டு கரங்களில் தாமரையும், ஒரு கரம் பக்தர்களுக்கு



ஆசி வழங்கி, மற்றொரு கரம் மடியில் குழந்தை ஸ்கந்தன் குழந்தை வடிவாக ஆறுமுகத்தோடு அரவணைத்து காட்சி தருகின்றார். இவர் தாமரை மலர் மீது அமர்ந்து தவம் செய்பவராக அருள்பாலிக்கின்றார். எனவே இவரை ‘பத்மாசினி’ என்றும் கூறுவர்.

### தியான மந்திரம்:

ஸிம்ஹாஸநகதா நித்யம் பத்மாஞ்சிதகரத்வயா ’

சுபதாஸ்து ஸதா தேவீ ஸ்கந்த மாதா யசஸ்விநீ ”

“சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டு இரு கரங்களில் தாமரை மலரை ஏந்தியுள்ள ஸ்கந்தனின் தாயான ஸ்கந்தமாதா தேவியை நான் வணங்குகின்றேன்.”

இவரை வணங்குவோர் மனம் அமைதி பெறும். அவர்கள் துக்கங்கள் மறைந்து வாழ்வில் இறை இன்பத்தை அனுபவிப்பர்.

இவருக்குக் காசியில் ஜைத்புரா என்ற பகுதியில் கோவில் உள்ளது.



## 6.காத்யாயினி:

நவராத்திரியின் ஆறாம் நாளில் வழிபட வேண்டியவர் காத்யாயினி. காத்யாயன முனிவரின் மகளாகப் பிறந்ததால் காத்யாயனி என அழைக்கப்படுகின்றார். இவருக்கு மகிஷாசுர மர்த்தினி என்ற பெயரும் உண்டு.

யோகிகள் காத்யாயினியின் அருளோடு ஆறாம் சக்கரமான ஆக்ஞா சக்கரத்தை அடைவார்கள். இந்த சக்கரத்தை முக்கண் சக்கரம் என்று கூறுவர்.

இவர் நான்கு கரம் கொண்டவர். ஒரு கரத்தில் தாமரை மலர் ஏந்தியும், மறு கரத்தில் ஒளி வீசும் வாள் ஏந்தியும் இருப்பார், மற்ற இரண்டு கைகள் தன் பக்தர்களுக்கு அபயம் தருமாறு காட்சி அளிக்கின்றார்.

### தியான மந்திரம்:

சந்த்ர ஹாஸோஜ்வலகரா சார்துல வர வாஹநா ’

காத்யாயநீ சுபம் தத்யாத் தேவீ தாநவ காதிநீ ”

“ஒளி வீசும் சந்திரஹாச வாளை கொண்டவளும், சிம்ம வாகனத்தில் வலம் வந்து தீய சக்திகளை அழிக்கும் காத்யாயனி எனக்கு அருள் செய்ய வேண்டும்.”

இவரை வழிபட்டால், கல்வி, கலைகளில் சிறந்து விளங்க வைப்பதோடு, கல்யாணப் பேறும் அளிப்பார், மற்றும் பாவங்கள் விலகி மோக்ஷமடைய செய்கிறார்.

காசி ஆத்ம விஸ்வேஸ்வரர் கோவிலின் பின்பக்க நுழைவாயிலை அடுத்துள்ள சுவரில் காத்யாயினி கோட்ட தெய்வமாக வழிபடப் படுகிறார். டெல்லியில் சட்டர்பூரிலும், தமிழகத்தில், தஞ்சையில் காத்யாயனி அம்மன் கோவில் உள்ளது. மேலும், கிராமப்புறங்களில் இவரைக் காத்தாயி என்று அழைக்கிறார்கள்.

## 7.காளராத்திரி:

நவராத்திரியின் ஏழாம் நாளில் வழிபட வேண்டியவர் காளராத்திரி. காள என்றால் நேரம், மரணம், என்றும் ராத்திரி என்றால் இரவு எனவும் பொருள்படும். காளராத்திரி என்றால் காலத்தின் முடிவு எனப் பொருள்படும். ராத்திரி என்னும் சொல்லுக்கு இரவு என்ற பொருள் மட்டுமில்லாமல் மங்களம் என்ற அர்த்தமும் உண்டு. கரிய நிறத்துடன் மங்களங்களை அள்ளித் தருவதாலேயே இவளுக்குக் காலராத்திரி எனப் பெயர் ஏற்பட்டது. யோகிகள் இவரின் அருள் கொண்டு ஏழாம் சக்கரமான ‘சகஸ்ராகாரத்தை’ அடைவர்.

இவரின் நான்கு கைகளின், ஒன்றில் வஜ்ராயுதமும், மறுகரத்தில் வாளும் இருக்கும். மற்ற இரு கரங்கள் பக்தர்களுக்கு அபயம் தருவதாக அமைந்துள்ளது. இந்த அன்னைக்குக் கழுதை வாகனமாக உள்ளது.



### தியான மந்திரம்:

வாமபாதோல்லஸத் லோஹலதா கண்டக பூஷணா ’

வர்த்தந் மூர்த்தத்வஜா க்ருஷ்ணா காலராத்ரிர் பயங்கரீ ”

“நீளமான நாக்கு கொண்டு, கழுதை மீது பவனி வருபவளும், ஆக்ரோஷமாக இருப்பவளும், பல வண்ணங்களில் ஆபரணங்கள் அணிந்து இருப்பவளுமாகிய பயங்கரியாம் காளராத்திரி என்னுடைய அஞ்ஞானம் என்னும் இருளை போக்கி அருள்பாலிக்கவேண்டும்.”

இவரின் பார்வை பட்டாலே துன்பமும், பாவமும் தொலைந்திடும். பேய் பிசாசுகள் பயந்து ஓடும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். இவரின் உருவம் பக்தர்களுக்குப் பயம் தராமல் நன்மை செய்வதால் இவரை ‘சுபங்கரி’ என்றும் கூறுவர்.

காசியில் காளிகாகலி என்ற இடத்தில் இவருக்கு கோவில் உள்ளது..



### 8.மகா கௌரி:

நவராத்திரியின் எட்டாம் நாளில் வழிபட வேண்டியவர் மகா கௌரி. மகா என்றால் பெரிய என்றும், கௌரி என்றால் தூய்மையானவள் என்றும் பொருள்படும். இவர் பால் போல் வெண்மையாக இருப்பதால் மகா கௌரி எனப்படுகிறார். கௌரி என்றால் பொன்னிறமானவள் என்ற அர்த்தமும் உண்டு. இவர் உடல் சக்கரங்களில் ‘ஸ்வாதிஷ்டானமாய்’ இருப்பவர். யோகிகள் இவரின் அருளோடு இந்த சக்கரத்தை அடைவர்.

இவர் நான்கு கரம் கொண்டவர். ஒரு கரத்தில் சூலம், மறு கரத்தில் மணியையும் தாங்கி நிற்கிறார். மற்ற இரு கரங்கள் பக்தர்களுக்கு அபயம் தருமாறு அருள்பாலிக்கின்றார். இவரின் வாகனம் வெண்மையான காளை ஆகும்.

### தியான மந்திரம்:

ஸ்வேத வ்ருக்ஷே ஸமாரூடா ஸ்வேதாம்பரதராஸுசி’

மஹாகௌரி சுபம் த்த்யாத் மஹாதேவ ப்ரமோத்தா’’

“வெண்மையான காளையின் மீது பவனி வருபவளும், தூய்மையான வெண்ணிற ஆடை அணிந்தவளும், தூய்மையானவளும், மகாதேவரின் நாயகியாம் அன்னை மகா கௌரி எனக்கு அனைத்து நலன்களையும், வளங்களையும் தரப் பிரார்த்தனை செய்கிறேன்.”

இவரை வழிபட்டால் நம் வாழ்வு வசந்தமாகும். இவர் பக்தர்களின் குறைகள் விரைவில் தீர்த்து என்றென்றும் சந்தோஷத்தை அள்ளித் தருவார்.

இவருக்குக் காசி அன்னபூரணி ஆலயத்தில் சந்நிதி உள்ளது.மேலும், கண்க்ஹல், ஹரித்வார் போன்ற ஸ்தலங்களிலும் தனி சன்னதி உண்டு.

### 9.சித்திதாத்திரி:

நவராத்திரியின் இறுதி நாளான ஒன்பதாம் நாளில் வழிபட வேண்டியவர் சித்திதாத்திரி. சித்தி என்றால் சக்தி என்றும், தாத்ரி என்றாள் அருள்பவள், அதாவது சக்தியை அருள்பவள் என்று பொருள். மார்க்கண்டேய புராணத்தில் எட்டு விதமான சித்திகள் - அணிமா, மகிமா, கரிமா, லஹிமா, ப்ராப்தி, பிரகாமியம், வாசித்வம், ஈசத்வம் என எட்டு விதமான சித்திகளையும் பக்தர்களுக்குத் தருபவர் என்று கூறப்பட்டுள்ளது.

இத்தேவியின் அருளால் இறுதியில் பேரின்ப பேற்றை அடைவர். இவர் நான்கு கரம் கொண்டவர். இடது கரத்தில் கதை, சக்கரத்துடனும், வலக் கரத்தில் தாமரை, சங்கு ஏந்தியும் அருள்பவர். தாமரை மலரில் அமர்ந்து இருப்பவர். சித்திதாத்ரி அன்னையின் வாகனம் சிங்கம். சிவ பெருமானே இவரை வழிபாடு செய்து அனைத்து சித்திகளையும் பெற்று ‘அர்த்தநாரீஸ்வரர்’ ஆனார் எனத் தேவி புராணம் கூறுகிறது.



### தியான மந்திரம்:

ஸித்த கந்தர்வ யக்ஷாத்யை: அஸிரைரபி'

ஸேவ்யமாநா ஸதாபூயாத் ஸித்திதா ஸித்திதாயிநீ "

"சித்தர், கந்தர்வர், தேவர், முனிவர், மனிதர், யட்சர் என அனைவராலும் வணங்கப்படும் தேவி சித்திதாத்ரி, என்னுடைய அனைத்து செயல்களிலும் வெற்றியைப் பெற்றுத் தர வேண்டும்."

இவரை வழிபட்டால் மனதில் உள்ள ஐயம் நீங்கி பேரானந்தத்தை அடைவர். சகல சௌபாக்கியங்களும் அள்ளிக் கொடுக்கும் சித்திதாத்ரி பக்தர்களுக்கு மோட்சத்தைக் கொடுக்கிறார்.

காசியில் "சித்திதாத்ரி சங்கடா" என்னும் கோவிலில் இவர் அருள்புரிகின்றார்.

ஓம் சக்தி!! பராசக்தி!!!



திருவாரூர் சு.சேகர்



# வீட்டில் சந்தோஷம் மற்றும் அமைதி நிலைத்து இருக்க எளிய லால் கிதாப் பரிகாரங்கள்



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

என்னதான் வசதி வாய்ப்புகள் இருந்தாலும் நாம் வசிக்கும் வீட்டில் சந்தோஷமும் அமைதியும் இல்லை என்றால் அந்த வீடு நரகம் போல் காட்சி அளிக்கும். நமது இல்லம் எப்பொழுதும் சந்தோஷமாகவும் அமைதியாகவும் இருக்க கீழே உள்ள லால்கிதாப் பரிகாரங்கள் உதவுகின்றன.

1. வீட்டில் உள்ள யாரையும் பற்றி கடுமையான வார்த்தைகளை பேச வேண்டாம். யாரையும் அவமரியாதயுடன் நடத்தவோ, துஷ்பிரயோகம் செய்யவோ வேண்டாம். எப்பொழுதும் உங்கள் மனதில் நேர்மறையான எண்ணங்களை விதையுங்கள். தினமும் காலையிலும் மாலையிலும் வீட்டில் கற்பூரத்தை ஏற்ற வேண்டும்.

2. தினமும் அனுமன் கோயிலுக்குச் சென்று அரச மரத்திற்கு தண்ணீர் ஊற்றி வழிபட வேண்டும். தினசரி செல்லமுடியவில்லை என்றாலும் செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் சென்று அனுமனை வழிபடுங்கள்.

3. உங்கள் வாழ்க்கை பிரச்சினைகள் நிறைந்ததாக இருக்குமானால். அந்த பிரச்சனையிலிருந்து வெளியே வர நீங்கள் ஒருவரின் இறுதிச் சடங்கில் சுடுகாட்டில் இருந்து திரும்பும் போது, சில நாணயங்களை எடுத்து உங்கள் முதுகிற்கு பின்னால் எறிந்துவிட்டு வீட்டிற்குள் நுளையுங்கள்.

4. வெள்ளி யானை, கல் பானை, பித்தளை அல்லது செம்பு பாத்திரங்கள், மண் பானையில் தேன், கருப்பு ஆன்டிமனி, தண்ணீர் நிரப்பப்பட்ட வெள்ளிப் பெட்டி, வெல்லம், வெள்ளி துண்டு, அனுமன் சிலை என இந்த 10 பொருட்களை எப்பொழுதும் வீட்டில் வைத்திருக்க வேண்டும்.

5. எறும்பு, பறவை, பசு, நாய், காகம், ஆமை, மீன், மரம், பெண், அனாதை, முதியவர் ஆகியோருக்கு உணவும், தண்ணீரும் கொடுத்து அவர்களின் ஆசிர்வாதம் பெறுவது வீட்டில் அமைதி மற்றும் சந்தோஷத்தை ஏற்படுத்தும்.

6. வாஸ்துவின் படி வீட்டைக் கட்டவும். மற்றும் வாஸ்து குறைபாடுகளை நீக்க, வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் கற்பூரத்தை கொளுத்துவதன் மூலம், வாஸ்து குறைபாடுகள் தடுக்கப்படுகின்றன.

7. செல்வத்தை அதிகரிக்க வெள்ளிக்கிழமை அன்று அன்னை லட்சுமியின் கோவிலில் ஒரு துடைப்பத்தை தானம் செய்யுங்கள். இதைச் செய்வதன் மூலம் உங்கள் சேமிப்பு அதிகரித்து வீட்டில் சந்தோசம் கூடும்..

மேலே கூறப்பட்டுள்ள எளிய லால்கிதாப் பரிகாரங்களை செய்து வீட்டில் சந்தோசமும் அமைதியும் நிலைத்து இருக்க செய்வோம்.

# ஆன்மீக கேள்விகளும் அர்த்தமுள்ள பதில்களும்



ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

### நவராத்திரிகள் எத்தனை வகை?

ஆஷாட நவராத்திரி என்பது ஆனி அமாவாசைக்குப் பின்பு வருவது.

புரட்டாசி மாத அமாவாசைக்கு அப்புறம் வருவது ‘சாரதா நவராத்திரி“

தை அமாவாசையை அடுத்து வருவது மகா நவராத்திரி.

பங்குனி அமாவாசைக்குப் பிறகு தொடர்வது “வசந்த நவராத்திரி“

புரட்டாசி மாத அமாவாசைக்குப் பிறகு வருவது ஒன்பது நாளும் கொண்டாடப்படும் நவராத்திரி.

### பஞ்சமுக ஆஞ்சநேயரின் வதன தத்துவம் எது?

அனுமனின் உச்சியில் உள்ள குதிரைமுகம், ஞானம், கல்வி, தொழில், திறன் இவற்றை அருளும் ஹயக்ரீவரைக் குறிக்கும்.

இடது புறம் காணப்படும் நரசிம்மர் திருமுகம் விரோதியின்மையை வழங்க வல்லது.

பூமாதேவி போன்ற பொறுமை, அமைதியை வழங்குவதே வலப்புறம் இருக்கும் வராஹர் திருமுகம் சுட்டும்.

பின்புறம் அமைந்துள்ள கருடத் திருமுகம் எல்லா உயிர்களின் நோய் நொடிகளை அழிக்கும் தன்மையை எடுத்துக் காட்டும்.

நமக்கு நேரே தரிசனமாகும் ஆஞ்சநேயர் திருமுகம் நமக்களிப்பதோ வீரம், ஆற்றல், பக்தி போன்றவற்றை.

### புதுச்சேரி திண்டிவனம் சாலை மார்க்கத்தில் உள்ள பஞ்சவடி அனுமன்

### தல ஆலய மணியின் சிறப்பென்ன?

அந்த ஆலயத்தில் அமைந்துள்ள பெரியமணி 1100 கிலோ எடையுள்ளது. ஆறு கால பூஜையிலும் இது பெருத்த ஓசையுடன் அடிக்கப்படுகிறது.

### சங்கீத மும்மூர்த்திகள் என போற்றப்படும் மகான்கள் கொண்ட ஒரு சிறப்பான ஒற்றுமை என்ன?

ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்து ஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீசியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவருமே “பிறந்தால் முக்தி“ என்ற விசேடம் கொண்ட திருவாரூர்தான். இன்றும் அந்த மூவரும் ஜெனித்த இல்லங்கள் ஆலயமாகப் போற்றப்படுகின்றன, சிறப்பு பூஜைகளும் உண்டு.

### தமிழிசையில் இராமாயண காவியத்தை நாடக வடிவில் இயற்றியவர் யார்?

இராம நாடகக் கீர்த்தனைகளை (நாடக வடிவில்) முதன் முதலாக (கி.பி.1712 - 1770) தமிழிசையில் தந்து பெருமை பெற்றவர் அருணாஜலக் கவிராயர்தான்.

### இறை தொடர்பான ஒரு சம மத சம்பந்தப்பட்ட கவிதை வேண்டுமே?

”உன்னருள் இல்லையெனில்<br>
உன்னைக் காணல் எப்படி?<br>
உன்னருள் இல்லையெனில்<br>
உன்னை வணங்கல் எப்படி?

உன்னருள் இல்லையெனில்
உன்னை நெருங்கள் எப்படி?
உன்னருள் இல்லையெனில்
உனில் கலத்தல் எப்படி?”
(வழங்கியவர்: கவிக்கோ அப்துல்ரகுமான்)

இந்தக் கவிதை அனைத்து மதக்காரர்களுக்கும் பொருத்தமான ஒன்றே.

## “கோபப் பிரசாதம்“ என்றுகூட துதி உண்டா? உண்டு. இந்தத் துதியை நமக்களித்தவர் நக்கீர தேவநாயனார்.

அப்பாடல் –
”முக்கட் செல்வனை முதல்வனை மூர்த்தியைக்
கள்ளம் விட்டு உள்ளமதுருகிக்
கலந்து கசிந்து தன் கழலினை அவையே
நினைந்திட ஆங்கே தோன்றும் நிமலனைத்
தேவ தேவனைத் திகழ் சிவலோகனை”

## அருள்மிகு வாரியார் சுவாமிகளின் சிறப்புகளில் சில?

திரு கிருபானந்தவாரியார் சுவாமிகள் அணிந்திருந்த கவசம், ஆணவத்தை வேரோடு அழிக்கும் சஷ்டிக் கவசம்!

தமிழ், இவர் தவழ்ந்து விளையாடிய தாழ்வாரம்!

பக்தி, இவர் போட்டி போட்டு வென்ற பந்தய மைதானம்!

தமிழையும், வாரியாரையும் தனித்தனியாகப் பிரிக்க முடியாது.

எழுதிய நூற்கள் எண்ணற்றவை. ஆற்றிய சொற்பொழிவுகள் அளப்பரியன.

இவர் அளித்து வந்த இசைத்தமிழ் சொற்பொழிவுகளைக் கன்னித்தமிழே அமர்ந்திருந்து அந்த அமுதம் பருகிற்று என்றால் அது மிகையல்ல.

வாரியார் வழி நடந்தால் வாழ்வு வளமாகும்.

திருமுருக வாரியார் அவதரித்த நூற்றாண்டு விழா (2006)க் கொண்டாடும் காலத்தில் அவருக்கு ஓம்சக்தி பத்திரிகை அளித்த போற்றுரைகள்!

## லார்ட் மெக்காலே இந்தியக் கலாச்சார அமைப்புக் குறித்து என்ன கூறினார்?

நமது நாட்டுக்கு கி.பி. 1834ஆம் ஆண்டு வந்து இந்தியாவின் சுப்ரீம் கவுன்சில் உறுப்பினராக செயல்பட்ட (சுமார் மூன்றரை ஆண்டுகள்) லார்ட் மெக்காலே என்ற ஆங்கிலேயர், நம்மைப் பற்றி கணித்து லண்டனில் உள்ள ஆங்கில அரசுக்கு இவ்வாறு அறிக்கை சமர்ப்பித்தாராம்!

“இந்தியா முழுமையும் சுற்றிய என் கண்ணில் ஒரு பிச்சைக்காரனோ, திருடனோ தென்படவில்லை. அளவில்லா செல்வங் கொண்ட அந்த மக்களின் உயர்ந்த பண்புகள், தன்னம்பிக்கை சிறப்பானது. இந்த நாட்டை நாம் ஆள தடையாக உள்ளது இந்திய மக்கள் கொண்ட கலாச்சாரம்தான். எனவே இந்தப் பிணைப்பை சிதைக்க முயற்சிக்க வேண்டும்” என்று.

அந்தக் கலாச்சாரம் இப்போது இந்தியனை விட்டு கொஞ்சங் கொஞ்சமாக விலகி வருகிறதோ என்ற ஐயம் தோன்ற ஆரம்பித்துள்ளது.

## அனுமனுக்கு ஏன் வெற்றிலை மாலை?

சீதா பிராட்டி அசோக வனத்தில் ராவணனால் சிறைப்பட்டு கிடந்த போதுராம தூதுவனாகப் போய் ஆஞ்சநேயர், பிராட்டியை சந்தித்து ராமபிரான் பற்றிக் கூறி ஆறுதல் அளித்தார். இதனால் ஆனந்தமுற்ற சீதை தன் அருகில் இருந்த வெற்றிலைக் கொடியிலிருந்து ஒரு வெற்றிலை தளத்தை எடுத்து, அனுமனின் சிரசில் போட்டு, “என்றும் சிரஞ்சீவியாக இருப்பாய்” என ஆசீர்வதித்தாள். எனவேதான் வாயு புத்திரனுக்கு வெற்றிலை மாலை சூட்டப்படுகிறது. அவரை சிரஞ்சீவி என்ற காரணப் பெயராலும் பக்தர்கள் அழைப்பர்.

## தீபாவளிக்கும் ‘கண் மை“க்கும் உள்ள தொடர்பு என்ன?

தீபாவளிக்கு அடுத்த நாள் தினத்தை “காலிசௌதஸ்“ என்ற பெயரில் வட இந்திய மக்கள் பண்டிகையாகக் கொண்டாடுவார்கள்.

அந்த நாளில் நெய் விட்டு விளக்கேற்றி, அதன்மீது ஒரு சிறிய கிண்ணத்தை கவிழ்த்து மூடிவிடுவார்கள். பிறகு அதில் படியும், கரும்புகையுடன் நெய் சேர்ந்து கண்மை தயார் செய்வார்கள். இதனால் தங்கள் பார்வை சிறப்பாவதுடன் கண்கள் அழகு பெறுவதாகவும் அவர்கள் கொண்ட நம்பிக்கை ஆகிறது.

# ஓம் நமோ ஸ்ரீமந் நாராயணாய
# ஸ்ரீ சக்கரத்தாழ்வார்



திரு. கிருஷ்ணன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்



ஆனி மாதம் தசமி திதியில், சித்திரை நட்சத்திரத்தில் ஸ்ரீ சக்கரத்தாழ்வார் அவதரித்தார்

கும்பகோணம் சக்கரபாணி ஆலயத்தில் உள்ள சக்கர தீர்த்தத்தில் தான், பிரம்மதேவர் நீராடி யாகம் செய்தார். உடனே பாதாளத்தில் இருந்து சக்கரம் வெளிக் கிளம்பி மேலே வந்தது. அந்த சக்கரத்தின் நடுவில் இருந்து, பிரம்மனுக்கு காட்சி தந்த ஸ்ரீமந் நாராயணன் தான்,

இன்று நாம் வணங்கும் சக்கரபாணி ஆவார். சாளக்கிராமங்களில் சுதர்சன சாளக்கிராமம் மிகச் சிறந்தது. ஒரு சக்கரம் மட்டுமே உள்ள மிகப் பெரிய சாளக்கிராமம் சுதர்சனம் ஆகும். திருமாலின் சக்ராயுதத்தின் பூர்ண சக்தி இதற்கு உண்டு.

சக்கரத்தாழ்வாரையும், அவர் பின்புறமுள்ள நரசிம்மரையும் வணங்கி வலம் வந்தால், நான்கு வேதங்களையும், பஞ்ச பூதங்களையும், அஷ்ட லட்சுமிகளையும், எட்டு திசைகளையும் வணங்கிய பலன் கிடைக்கும்.

மஹா விஷ்ணுவின் திருக்கரங்களில் ஐந்து ஆயுதங்களைக் காணலாம்.

இவற்றில் முக்கியமானது சக்கரம் என்று போற்றப்படுகின்ற ஸ்ரீ சுதர்ஸனம் ஆகும்.

திருமாலின் ஆக்ரோஷ ஸ்வரூபமான ஸ்ரீ சுதர்ஸன மூர்த்தியே திருமாலின் காத்தல் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பவர். சுதர்சனர் என்ற சொல்லுக்கு நல்வழி காட்டுபவர், காண்பதற்கு இனியவர் என்றும் பொருள்.

பெருமாளின் கையில் ஆயுதமாக அலங்கரிக்கும் சக்கரத்தாழ்வார் திருமாலுக்கு இணையானவர் என்று வேதாந்த தேசிகர் கூறுகிறார். சங்கு, சக்கர, கதாபாணியான பெருமாளின் கரங்களில் எப்போதும் வலக்கையிலேயே இடம் பெற்று இருப்பவர் சக்கரத்தாழ்வார். ஆனால் சில இடங்களில் மாறுபட்டும் அமைந்திருப்பது உண்டு.

இவர் திருவாழியாழ்வான், சக்கரராஜன், நேமி, திகிரி, ரதாங்கம், சுதர்சன ஆழ்வார் என்றெல்லாம் பல பெயர்களால் அழைக்கப்படுபவர்.

திருமால் கோவில்களில் சக்கரத்தாழ்வாருக்குத் தனிச் சன்னதி உண்டு.

இவர் பதினாறு, முப்பத்திரண்டு என்ற எண்ணிக்கைகளில் கைகளை உடையவர்.

ஸ்ரீ சக்கரம் என்னும் ஸ்ரீ சுதர்ஸனம் எம்பெருமான் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பிரதான ஆயுதம்! அவர் தம் வலத் திருக்கரத்தில் ஏந்தியுள்ள ஸ்ரீ சுதர்ஸனம், பக்தர்களைக் காக்கவும், துஷ்டர்களை அழிக்கவும் செய்கிறது.

சில சமயங்களில் பகவான் கண்ணசைத்தாலே போதும் காற்றின் வேகத்தை கிழித்துக் கொண்டு அசுரர்களை சம்ஹாரம் செய்து மீண்டும் பகவான் கையில் பவ்யமாக வந்து விடும். ஸ்ரீ அனந்தன் என்ற நாகம், கருடன், ஸ்ரீ சுதர்ஸனம் - இம்மூவரும் பகவானை ஒரு நொடி கூட பிரியாது அவரைத் தொழும் "நித்யசூரிகள்'.

ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் இருக்கையாகவும், பாற்கடலில் பாம்புப் படுக்கையாகவும், ஆதிசேஷனாக குடையாகவும், நடக்கையில் பாதுகையாகவும் இருப்பவர் அனந்தன்.

பகவான் மனதால் நினைத்தவுடன், நினைத்த இடத்திற்கு அவரைத் தாங்கிச் செல்லும் வாகனமாகவும், அவரது தாஸனாகவும் திகழ்பவர் கருடன்.

ஸ்ரீ சுதர்ஸனாழ்வார், ஸ்ரீ கருடாழ்வார், ஸ்ரீ அனந்தாழ்வார் என இவர்கள் மூவர்கள் மட்டுமே ஸ்ரீ பகவானை ஆட்கொண்டவர்கள் என்பதால் ஏற்பட்ட சிறப்பாகும்

மஹாவிஷ்ணுவின் வாமன அவதாரத்தின்போது, பவித்ர தர்ப்பத்தின் நுனியில் அமர்ந்து சுக்கிரனின் கண்ணைக் கிளறி அழித்தவர் சுதர்சனர்.

ராவணனின் முன்னோர்களான மால்யவான், சுமாலி என்ற கொடுமையான அரக்கர்களை தண்டிக்க கருடாரூடனாய் இலங்கை சென்ற பகவான், சுதர்சன சக்கரத்தால் அவர்களை அழித்தார்.

சுதர்ஸனர், பல புராணங்களில் பேசப்படுகிறார்.

ஸ்ரீநரசிம்ஹ அவதாரத்தில் இரணியனை வதம் செய்வதற்கு நகங்களாக இருந்தவர் சுதர்ஸனர்தான் என்கிறது ஸ்ரீநரஸிம்ம புராணம். நரசிம்மருக்கு மிகவும் பிரியமான தெய்வமாக ஸ்ரீ சுதரசன ஆள்வார் திகைழ்கிறார்.

கஜேந்திர மோட்ச வைபவத்தில் சுதர்சன சக்கரத்தைக் கொண்டே கஜேந்திரனைக் கவ்விப் பிடித்திழுத்த முதலையை அழித்து, யானையைக் காப்பாற்றுகிறார் பரமாத்மா.

## சக்கரத்தாழ்வாரின் ஆயுதங்கள்:

சக்கரத்தாழ்வாரின் ஆயுதங்கள் பதினாறு. அதில் வலக்கையில் உள்ள ஆயுதங்கள் சக்கரம், மால், குந்தம், தண்டம், அங்குசம், சதாமுகாக்னி, மிஸ்கிரிசம், வேல் ஆகியவை.

இடக்கையில் வைத்திருக்கும் ஆயுதங்கள் சங்கு, வாள், பாசம், கலப்பை, வஜ்ராயுதம், கதை, உலக்கை, திரிசூலம் ஆகியவை உள்ளடக்கம்.

## ஜோதிடத்தில் சக்கரத்தாழ்வார்:

ஜோதிடத்தில் வீரத்தினை குறிக்கும் கிரகம் செவ்வாயாகும். மேலும் நெருப்பு, ஆயுதங்கள், ராணுவம், பாதுகாப்பு, போர் வீரர்கள், காவலர்கள், தீயணைப்பு துறை ஆகியவற்றின் காரகரும் செவ்வாய் ஆகும். சாகசம் செய்பவர்கள், சாதனையாளர்கள் செவ்வாயின் ஆதிக்கம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜோதிடத்தில் செவ்வாய் மேஷம் மற்றும் விருச்சிக ராசிகளின் அதிபதியாக திகழும் செவ்வாய் கால புருஷனுக்கு லக்னாதிபதியாகவும் ஆயுள் பாவமான அஷ்டமாதிபதியாகவும் விளங்குகிறார். கால புருஷனுக்கு எட்டாம் பாவமான விருச்சிகம் ஆயுள்,

மறைந்திருக்கும் எதிரி, பரம்பரை நோய் ஆகியவற்றை குறிக்கும். நீர் ராசியான விருச்சிகம் விஷ ஜெந்துக்கள் நிறைந்த கடலை குறிப்பதால் இது மருத்துவம், மருந்துகள், விஷம், ரத்தத்தில் வியாதிகள், புற்றுநோய் போன்ற எளிதில் கண்டுபிடிக்க முடியாத நோய்களை குறிக்குமிடமாகும். மேலும் புற்றுநோய் போன்ற உயிர் கொல்லி நோய் உடையவர்கள் ஸ்ரீ சக்கரத்தாழ்வாரை வணங்கி வருவதால் நோய் நீங்கி மரணபயம் போகும்.

கன்னி கால புருஷனுக்கு ஆறாம் பாவமாக வருகிறது. ஆறாம் பாவம் என்பது நோய், கடன், சத்ரு ஆகியவற்றி குறிக்குமிடம் ஆகும். மேலும் கன்னி ராசி கால புருஷ பத்தாமிடமான கர்ம ஸ்தானத்திற்க்கு (மகர ராசிக்கு) ஒன்பதாமிடமாக வருவதால் ஒருவரின் கர்மாவை தெரிவிக்கும் இடமாகவும் கன்னி ராசி அமைந்த்துள்ளது. கன்னி புத பகவானின் வீடாக வருவாதாலும் மற்றும் புதன் விஷ்ணுவின் அம்சமாக வருவதால் ஸ்ரீ சக்கரதாழ்வாரை வணங்குதல் மேன்மயான பலன்களை நல்கும்

சுதர்சன உபாசனை வீரம் வெற்றி அளிக்க வல்லது. தீராத நோய்களைத் தீர்க்கும். போர்முனையில் வெற்றியினைத் தேடித் தரும். எல்லாவிதமான சத்ருக்களையும் நீக்கி மங்களம் அளிக்க வல்லது. பக்தர்களுக்கு சந்தோஷம் தருபவர். பக்தர்களுக்கு வரும் பகையை அழித்து, உள்ளார்ந்த பயத்தை போக்கிக் காப்பவர் சுதர்சனர். மனிதனின் நிம்மதியை பாதிப்பவை கடன், வியாதி, எதிரி தரும் துன்பம் அபிசார தோஷங்கள் எனப்படும் பில்லி, சூன்யம் போன்றவற்றால் ஏற்படும் உபாதைகளை முற்றிலும் நீக்கி சந்தோஷத்தை அளிப்பவர்.

இவர் கல்வியில் தடையை நீக்கி இடைவிடாது தொடரும் கல்வி யோகத்தைத் தருபவர் என்பது நம்பிக்கை. ஸ்ரீ சக்கரத்தாழ்வார் விஷ்ணுவின் அம்சம் மற்றும் ஸ்வரூபம் என்பதால் புதனின் காரகத்தையும் கொண்டிருக்கின்றார்.

ஜோதிடத்தில் ஆறு, எட்டு, பன்னிரெண்டாம் பாவங்கள் வலுத்து அதனால் நோய், கடன் தொல்லைகள், எதிரிகள், வழக்குகள் போன்றவற்றால் மீளமுடியாத பிரச்சனைகளை சந்தித்துவருபவர்கள் ஸ்ரீ சக்கரத்தாழ்வாரை வழிபடுவது, சுதர்சனாஷ்டகம் பாராயணம் செய்வது, சுதர்சன ஹோமம் செய்வது போன்றவை சிறந்த பயனளிக்கும்.

சுதர்ஸனாஷ்டகம் சுதர்சன காயத்ரி போன்ற ஸ்லோகங்கள் பலராலும் ஜபிக்கப்பட்டு வருகிறது இவற்றைப் பாராயணம் செய்வதும், சுதர்சனர் சன்னதியில் நெய் விளக்கேற்றியும், பலமுறை வலம் வந்தும் சுதர்சனரின் அருளைப் பெறலாம்.

சுதர்ஸன உபாஸனை மிகவும் சக்தி வாய்ந்தது. இவரை எந்திர ரூபத்தில் வழிபடும் முறையும் உள்ளது. சுதர்ஸனரின் பின்புறம் யோக நரசிம்ம மூர்த்தியைக் காணலாம். இவரை சுதர்ஸன நரசிம்மம் என்பர்.

ஸ்ரீ சக்கரத்தாழ்வாரை வணங்குபவர்களுக்கு நோய், எதிரி, விரயம், மரணம் ஆகிய பயம் நீங்குவதோடு தாரித்ரியத்தை போக்கி சகல செல்வங்களும் அளிக்கும் என்பது நிதர்சனம்.

பல யுகங்களிலும் மன்னர்கள் போருக்கு முன்னர் சுதர்சன ஹோமம் செய்த பிறகு வெற்றியுடன் நாடு திரும்புவார்கள்.

### சுதர்சன காயத்ரி மந்திரம்

ஓம் ஜ்வாலசக்ராய வித்மஹே

விஷ்ணுப்ரியாய தீமஹி

தந்நோ சக்ர ப்ரசோதயாத்

இதை தினமும் காலையிலும் மாலையிலும் 108 முறை அல்லது நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஜெபித்து வந்தால் கண்ணுக்கு தெரியாத எதிரிகள் அழிந்து போவார்கள்.அஷ்ட லக்ஷ்மி கடாக்ஷம் பெருகும். மஹா விஷ்ணுவின் பரிபூர்ண அருளும் கிடைக்கும்.

ஜெய் ஸ்ரீராம் சர்வம் ஸ்ரீ
கிருஷ்ணார்பனமஸ்து

# தீய பழக்கங்களில் இருந்து விடுபடவும் உடம்பில் ஆற்றல் அதிகரிக்கவும் தவரித்தா தேவி எந்திரம்



நீண்ட நாட்களாக தீய பழக்கங்களான புகை பிடித்தல், மது மற்றும் தீய குணங்களிலிருந்தும் மாற வேண்டும் என்று நினைத்து மாறமுடியாமல் தவிப்பவர்கள் இந்த தவரித்தா தேவி எந்திரத்தை பூஜித்து வந்தால் தீய பழக்கங்கள் மறைந்து நல்ல பழக்க வழக்கங்கள் ஏற்படும். தவரித்தா தேவி எட்டாம் திதியான அஷ்டமி திதியை ஆளும் தெய்வம் ஆகும். நாம் எடுக்கும் முயற்சிகளில் தடை மற்றும் தாமதங்கள் ஏற்பட்டு கொண்டு இருப்பவர்களுக்கு அவர் எடுக்கும் முயற்சியையும் வேலையையும் துரிதப்படுத்தி வெற்றியை ஏற்படுத்தி கொடுப்பவர் தவரித்தா தேவி ஆவார். நமது உடம்பில் தெம்பு மற்றும் ஆற்றல் குறையும் போது ஆற்றலை கொடுக்கும் தன்மை இந்த தவரித்தா தேவிக்கு உண்டு. அது மட்டும் அல்லாமல் நாம் ஒரு பிச்சனைக்கு விடை தேடும் பொழுது நமக்கு ஆக்க அறிவை மேம்படுத்தி பிரச்சனைக்கு தீர்வை ஏற்படுத்தி தரவல்லவர். தவரித்தா தேவி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, தினமும் முல்லை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் மேலே கூறப்பட்டிருக்கும் அனைத்து அம்சங்களையும் குறைவின்றி பெறமுடியும்.

ஸ்ரீ தவரித்தா நித்ய தேவி எந்திரத்திற்கு உண்டான மந்திரம்:

"ஓம் ஐம் ரீம் ஸ்ரீம் ரிம்ம் த்வரிதாயே நமஹ"



திரு. செந்தில் நாதன்
ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்



விஜய்

ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர்

# அக்டோபர் மாத ராசி பலன்





## மேஷ ராசி

இந்த அக்டோபர் மாதத்தில் மாத பிற்பகுதியில் மிக நன்மையான பலன்கள் நடைபெறும், ஆகையால் முற்பகுதியில் பொறுமை காப்பது நலம். மாத துவக்கத்தில் உங்கள் சேமிப்பு மற்றும் வருமானம் குறைவதற்கு வாய்ப்பு உண்டு. கடன் மற்றும் உடல் நலம் பாதிப்படைவதால் உங்கள் வருமானம் விரையமாக வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாம், விட்டுக்கொடுத்து செல்வது குடும்பத்தில் மகிழ்ச்சியைத் தரும். வீடு, வாகனம், சொத்து போன்றவைகளால் பாதிப்புகள் ஏற்படலாம். இவை அனைத்தும் மாத பிற்பகுதியில் மிக நன்மையாக மாறிவிடும். திருமண தடை நீங்கும், வருமானம் உயரும், குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும்.



## ரிஷப ராசி

குலதெய்வ வழிபாட்டால் முன்னேற்றம் கிடைக்கும் மாதம் இந்த அக்டோபர் மாதம். தகுதி குறைவு ஏற்படாமல் இருக்க தரமில்லாத செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும். ஆண்களுக்கு சமுதாயத்தில் புகழ் கிடைக்கும். பெண்கள் கணவரால் தனது சொத்துகளை இழக்க நேரிடலாம் கவனம். குழந்தைகள் தனது பிடிவாதத்தை விட்டு விடுவார்கள். உங்கள் வருமானத்தை பூர்வீகத்தில் முதலீடு செய்ய வாய்ப்புகள் வரும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். காதலில் ஈடுபட மனம் அலைபாயும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதால் மனதை கட்டுப்படுத்த முடியும். நீண்ட தூர பயணங்களில் நிம்மதி கிடைக்கும். வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டு.



## மிதுன ராசி

தெளிவான முடிவுகள் எடுப்பதின் மூலம் முன்னேற்றம் கிடைக்கும் மாதம் இந்த அக்டோபர் மாதம். வடக்கு திசை அனைத்து செயல்களுக்கும் அனுகூலமான திசை ஆகும். கடின உழைப்பிற்கேற்ற வருமானம் கிடைக்கும், புகழ் கிடைக்கும். முயற்சி செய்யாதவர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்காது. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். புதிய வீடு, வாகனம் வாங்கும் கனவு அதிகரிக்கும் மற்றும் வாங்கக் கூடிய வாய்ப்புகள் உண்டு. தொழில் லாபங்கள் கிடைக்கும், லாபங்களை முதலீடு செய்ய வாய்ப்பு வரும். சொத்து வாங்குவதில் தொழில் லாபத்தை முதலீடு செய்யலாம். தொழில் முதலீடுகள் செய்யக்கூடாது, விரயம் ஏற்படலாம்.



## கடக ராசி

புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் மாதம் இந்த அக்டோபர் மாதம். பயணங்கள் அதிகரிக்கும். வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டு. உடல் நலனில் கவனம் தேவை. குலதெய்வ குற்றம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முறையான வழிபாடு தேவை. தரமில்லாத செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். குழந்தைகள் பெற்றோர்களின் பார்வையில் இருப்பது நலம். தனியாக எங்கும் அனுப்பக் கூடாது. மாணவர்கள் உயர்கல்வியில் குறிக்கோள் வைத்து படித்தால் நிச்சய வெற்றி அடைவார்கள். திருமண தடை நீங்கும். கணவன் மனைவி இடையே ஒற்றுமை இருக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்பு உண்டு.



## சிம்ம ராசி

அதிகப்படியான நன்மைகள் நடக்கும் மாதம் இந்த அக்டோபர் மாதம். சீரான வருமானம் வந்து கொண்டே இருக்கும், சேமிப்பு உயர்ந்து கொண்டே இருக்கும். புதிய ஆபரணங்கள் வாங்குவீர்கள். வீட்டிற்குத் தேவையான புதிய ஆடம்பர பொருட்கள் வாங்க வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். குடும்ப நபர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வைப்பீர்கள். வடக்கு திசை அனைத்து செயல்களுக்கும் அனுகூலமான திசை ஆகும். புதிய வீடு, வாகனம், சொத்து வாங்க வாய்ப்பு உண்டு. தொழில் முன்னேற்றம் அடையும். உயர் பதவிகள் கிடைக்கும். தாயின் உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டும். திருமண தடை நீங்கும். எதிரிகளை வெல்வீர்கள்.



## கன்னி ராசி

முன்னோர்கள் வழிபாட்டால் முன்னேற்றம் கிடைக்கும் மாதம் இந்த அக்டோபர் மாதம். முன்னோர்கள் ஆசீர்வாதத்தால் புண்ணிய பலன்கள் கிடைக்கும். சமுதாயத்தில் மதிப்பு மரியாதை கிடைக்கும். தொழில் முயற்சிகள் வெற்றியடையும், லாபம் கிடைக்கும். புதிய கல்வி கற்க வாய்ப்பு உண்டு. உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், வெளிப்படுத்தவும் வாய்ப்பு கிடைக்கும். வீண் செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். குலதெய்வ வழிபாடு பாதிப்புகளைக் குறைக்கும். பயணங்களால் நன்மை நடக்கும். திருமண தடை நீங்கும். புத்திர பாக்கியம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் உயர்வு பெறுவார்கள்.




## துலாம் ராசி

இடமாற்றம், ஊர் மாற்றத்தினால் உயர்வு கிடைக்கும் மாதம். வெளியூர், வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு மிகுந்த நன்மையான பலன்கள் கிடைக்கும். தொழிலில் வருமானம் அதிகரிக்கும், சேமிப்புகளை உயர்த்த முடியும். உள்ள ரில் இருப்பவர்களுக்கு விரயங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. உடல்நலம் பாதிக்கப்படலாம், மருத்துவமனை செலவுகள் ஏற்படலாம். கேளிக்கை, விருந்துகளில் கலந்து கொள்வதால் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட தூர பயணங்கள் உண்டு. வெளிநாட்டு கல்விக்கு வாய்ப்பு உண்டு. மாணவர்கள் கல்வியில் எந்த தடையும் வராது. வீடு, இடம், சொத்துகளில் இருந்த பிரச்சனைகள் முடிவிற்கு வரும். திருமண ஏற்பாடுகள் துவங்கலாம்.



## விருச்சிக ராசி

வெற்றிகள் குவியும் மாதம் இந்த அக்டோபர் மாதம். அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும், ஆசைகள் பூர்த்தியாகும். நண்பர்கள், உறவினர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். லாபம் கிடைக்கும், வருமானம் உயரும், தைரியம், தன்னம்பிக்கை கூடும். மாற்றங்கள் செய்யும் எண்ணம் தோன்றும், ஆனால் எதையும் மாற்றாமல் இருப்பது நலம். திருமண தடை நீங்கும், குழந்தை பாக்கியம் கிடைக்கும். மிக உயரிய கல்வி கற்க வாய்ப்பு கிடைக்கும். அனைத்து தடைகளும் அகலும். துர்க்கை அம்மன் வழிபாடு மிகுந்த நன்மை தரும். போட்டி, பந்தயங்களில் வெற்றியும், புகழும் கிடைக்கும்.



## தனுசு ராசி

விபரீத ராஜயோகத்தினால் வளர்ச்சி அடையும் மாதம் இந்த அக்டோபர் மாதம். அரசு அனுகூலம் கிடைக்கும். நிர்வாகத் திறமை மேம்படும், சமுதாயத்தில் புகழ் கிடைக்கும். கிழக்கு திசை அனைத்து செயல்களுக்கும் அனுகூலமான திசையாகும். புதிய பதவிகள், பொறுப்புகள் கிடைக்கும். திருமண ஏற்பாடுகள் துவங்கலாம். மருத்துவம் பார்ப்பதால் புத்திர தடை நீங்கும். மாணவர்கள் சீரான முன்னேற்றம் காண்பார்கள். வெளிநாட்டு கல்விக்கு வாய்ப்பு உண்டு. வெளிநாட்டில் குடியுரிமை பெற உகந்த மாதம். ஆன்மீக யாத்திரை மன அமைதியைத் தரும். குடும்பத்தில் குறைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும்.



## மகர ராசி

குழப்பங்கள் நீங்கி தெளிவு கிடைக்கும் மாதம் இந்த அக்டோபர் மாதம். மன நிம்மதி கிடைக்கும், உடல் நலம் சீராகும், தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். தொழில் முன்னேற்றம் அடையும், லாபம் கிடைக்கும். திருமணம் நடைபெறும், குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும், ஒற்றுமை ஏற்படும். நீண்ட தூர பயணங்களால் நன்மை ஏற்படும், ஆன்மீக யாத்திரை தடைகளை நீக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் சிறப்பான முன்னேற்றம் அடைவார்கள். கடன், நோய், போன்ற பாதிப்புகளில் இருந்து வெளிவர புதிய திட்டங்கள் துவங்கலாம். அது மிக நன்மையான பலன்கள் தரும். முன்னோர்களின் வழிபாடு சுப சம்பவங்களை நடத்தித் தரும்.



## கும்ப ராசி

பொறுமை, நிதானம் அவசியம் தேவைப்படும் மாதம் இந்த அக்டோபர் மாதம். துணிச்சலான முடிவுகளால் பெரிய பாதிப்புகளைச் சந்திக்க நேரிடலாம், ஆகையால் பெரியோர்களின் ஆலோசனை கேட்பது நலம். குடும்ப நபர்களை அனுசரித்துச் செல்வது மகிழ்ச்சியைத் தரும். குழந்தைகள் பிடிவாதமாக இருப்பார்கள். இளைஞர்கள் கவனமாக இருக்க வேண்டும். தவறான நபர்களிடம் காதல் வலையில் சிக்கிக் கொள்ள நேரிடும். வாழ்க்கைத் துணையை அனுசரித்துச் செல்வது ஒற்றுமைக்கு வழிதரும். விரயங்கள் அதிகரிக்கும். தூக்கம் குறையும், உடல் நலனில் கவனம் தேவை. கருப்பசாமி வழிபாடு அனைத்து பாதிப்புகளையும் நீக்கம்.



## மீனம் ராசி

மிகவும் சிறப்பான மாதம் இந்த அக்டோபர் மாதம். திருமணம் கைகூடும், வாழ்க்கை துணையுடன் நெருக்கமான உறவு ஏற்படும், அன்பு பெருகும், மகிழ்ச்சி இருக்கும். கூட்டுத் தொழிலில் லாபம் கிடைக்கும். கூட்டாளிகளால் நன்மை நடக்கும். வீடு, வாகனம், சொத்து வாங்க வாய்ப்பு வரும். புதிய முயற்சிகளால் வருமானம், சேமிப்பு உயரும். பொது ஜனம் சார்ந்த துறைகளில் உள்ளவர்களுக்கு சமுதாயத்தில் புகழ் கிடைக்கும், லாபம் கிடைக்கும். பொது மக்களின் ஒத்துழைப்பு அரசியலில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும். பயணங்களால் நன்மை கிடைக்கும். உங்கள் செயல்களால் உயர்வான நிலையை சமூகத்தில் அடைய முடியும்